www.padippakam.com

ழில் படைப்பிலக்கிய மாத இதழ்



லை ரூ.3.

முதல் ஆண்டு மலர்

21-10-1992

படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

இலக்கிய ரசனைகூட இன்றைய இலக்கியவாதிகளுக்கு ஆடம்பரமான விஷயமாகிவிட்டது. இவர்கள் பெருமையும் தேவையும் வெளிப்பட வேண்டியே, தங்களை ரசிகர்களாய் ஆடம்பரப் படுத்திக் கொள்கிறார்கள். ஆத்மார்த்தமான ரசனை மனிதனுக்கு மட்டுமே வாய்க்கும். மனிதனாய் நடிக்கிறவனுக்கல்ல.

ஃ

வாழ்நாளிலேயே கிடைக்கும் புகழ், மனிதனை வளரவிடாமல் கட்டிப் போடும் விலங்கு. மரணத்துக்குப் பிறகு பெருகும் புகழ், புதுப்புது அர்த்தங்களை வைரங்களாய்ப் பதித்துக் கொள்ளும் மணி மகுடம்.

ஃ

விடுதியில் உண்டாலும் வீட்டில் உண்டாலும் உண்ட சோற்றுக்கு விலையுண்டு. வீட்டில் அது பேசப்படுவதில்லை. விடுதியில் அதைவிட்டால் பேச ஒன்றுமில்லை. சந்தைப் பத்திரிகை விடுதிச் சாப்பாட்டைப் போல; பணம் தரத் தயங்காதவர்களாக மனிதர்கள் தங்களை உயர்த்திக் கொள்கிறார்கள். இலக்கிய இதழ் வீட்டுச் சுவையமுதமாய். வாசகர்கள் விருந்தினர்களாய்.

ஃ

மேகங்கள் ஒன்றையொன்று எதிர் கொள்ளும் போதுதான் மின்னல் பளீரிடுகிறது. மேதைகளே என்றாலும் சக உயிர்களை எதிர் கொள்ளும் போதுதான் சிந்தனை புலனாகிறது.

ஃ

புரிபடல் என்பது அர்த்த முள்ளதாய் இருக்க வேண்டுமெனில் நாம் நிற்கும் தளம் தர்க்க நியாயத்தினால் கட்டப்பட்டிருக்க வேண்டும். இல்லையேல் புரிதலும் இல்லை. அர்த்தமும் இல்லை.

ஃ

நம்முள் என்ன இருக்கிறது என்பது யாருக்கும் தெரியப்போவதில்லை. வெளிப்பாடுகள்தாம் நம்மை வெளிச்சப்படுத்துபவை. அவ்வெளிப்பாடுகளோ, நாம் இயங்கும் போதுதான் சூலுற்று முதிர்கின்றன.

ஃ

பணமும் பதவியும் பறி போனால் பல மனிதர்கள் வெறும் பதர்களாகவே மிஞ்சுவார்கள். இப்பதர்களைத்தான் நம்மை ஆள அனுமதிக்கிறோம்; முழந்தாளிட்டு வணங்குகிறோம். நாமும் பதர்களாவது இப்படித்தான்.

படிப்பகம்

www.padippakam.com



# ஓம் எனும் நாமம்

உன்திருப் பெயர்தான் சிவம் சிவா!
ஓம்எனும் நாமம் உன்துதிப் பாடல்!

உரையாய்ப் பொருளாய் ஒன்றுகலந்தே
உயிரின் கருவாய் உருவாய் நிறைந்தாய்!

சேற்றில்உன்பாதச் சுவடுகள் பதித்தே
பெய்யதாமரை சிரித்திட வைப்பாய்!
காற்றினில் தென்றல் பூத்திடச் செய்வாய்!
கருணைத் தவமே! கைதொழுகின்றேன்!



படிப்பகம்

www.padippakam.com

ஒருமுறை வேண்டிய
வுடன் இதழ் உவந்து
இருதிங்கட் கொருமுறை
எனவிளம் பரம்தான்
தருமருட் செல்வர்
பொள்ளாச்சி மைந்தர்
அருள்மனம் இதழ்ப்பயிர்க்
கமுதநல் மழைநீர்.

# அடுத்த இதழ் 1-1-1993இல் வெளிவரும்.

**இதழின் நலம் பேண
இந்த
அவகாசம்
அவசியமாகிறது.**

**ஆண்டுச் சந்தா ரூ.36
ஆயுள் சந்தா ரூ.400**

**பழைய நண்பர்கள்
சந்தாவைப்
புதுப்பியுங்கள்.**

**புதிய நண்பர்களைச்
சேர்த்து மகிழுங்கள்.**

**நீங்களும் இதழும்
நெருங்கிய நட்பை
நிரந்தரமாக்குங்கள்.**

**இலக்கியப் பயிரை
இளைக்க விடாதீர்.**

# கவிதாசரண்

*தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்*

## ஆண்டு மலர்

அக்டோபர், 1992

மாதத்தின் முதல் வாரத்தில்
வெளிவருகிறது.

தனி இதழ் விலை ரூ. 3.
ஆண்டுச் சந்தா ரூ. 36.
*சந்தாவை M.O செய்க.*

மனிதநேயம் வளர்க்கும் இலக்கியத் தெளிவின் ஊற்றுக்கண்.

---

*படைப்புகளை அனுப்ப மற்றும்
தகவல் தொடர்புகளுக்கு:*

ஆசிரியர், கவிதாசரண்,
31, டி.கே.எஸ். நகர்
சென்னை-600 019.

---

திறனாய்வுக்குப் புதிய நூல்கள் மட்டுமே ஏற்கப்படுகின்றன.

இதழை **580, T.H.Road,** சென்னை-**21**இலிருந்து வெளியிடுபவரும் ஆசிரியரும்: கவிதாசரண். ஆல்வெல்பிரஸ், **31, T.K.S.**நகர் சென்னை-**19**இல் அச்சிடுபவர்: திருமதி கவிதாசரண்.

படைப்பாளர்களே தங்கள் படைப்புகளுக்குப் பொறுப்பேற்கிறார்கள்.

வெளியிடுவதற்கு ஏற்கப்பட்டவற்றைத் திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

படிப்பகம்

www.padippakam.com



# ஆசைப் பூ

தென்றலுக்கு வடிவெழுதத்
தூரிகையைத் தேடுவரோ!
தென்னவரின் மொழியெழுத
என்னறிவு நாடுவதோ! 1



சிங்கமெனத் தமிழிருந்தால்
சிந்தையினில் தேக்கிவைப்பேன்.
சின்னஞ்சிறு அரும்பவளை
என்னவென்று பூக்கவைப்பேன்! 2

மெல்லருவி மழலையெல்லாம்
முத்தமிழின் கவிதையன்றோ!
மின்னலைத்தன் புன்னகையாய்
முடித்தபெண் ணமுதமன்றோ! 3

கோடையிளந் தென்றலிலே
குளுமையை நெய்திருப்பாள்.
கோடிமலர்ச் சிரிப்பினிலே
கோலநகை பெய்திருப்பாள். 4



ஊனமுற்ற மானிடர்க்கே
ஞானவடி வாய்வளர்ந்தாள்.
'ஊழிபல காலம் உயிர்
வாழி' என வாழவந்தாள். 5



உள்ளுயிரை உணர்வுமத்தால்
ஓசையின்றிக் கடைந்தவளாம்.
அள்ளஅள்ளப் பெருகிவரும்
ஆசைவடி வானவளாம். 6

அன்னையவள் உலகமெல்லாம்
ஆக்குவித்த பெருமைகொண்டாள்.
கன்னியிளங் கனிமொழியாள்
காலனையே அடிமை கண்டாள். 7

படிப்பகம்

www.padippakam.com

என்னைத் தமிழ் அன்னை பெற்றாள்,
ஏடெடுத்து வாழ்ந்திருப்பேன்;
இன்னுயிரைத் தோற்ற பின்னே
என் குழியில் பூத்திருப்பேன்.



கவிதாசரண்

தமிழில் படைப்பிலக்கிய மாத இதழ்

மலர் ஒன்று அக்டோபர்-21, 1992 இதழ் பன்னிரண்டு

# இதைச் சொல்லத்தான்

நலம் வாழிய, நண்பர்களே.

'கவிதாசரண்' தன் முதல் ஆண்டை முழுமையாக நிறைவு செய்திருக்கிறது.

'இது படைப்பிலக்கிய இதழ்' என்பதை நாம் ஒருபோதும் மறந்ததில்லை.

'மாத இதழ்' என்னும் பெயருக்காகவே மாதங்கள் வரிசையாக இதழின் மேல் முத்திரை குத்திக் கொள்கின்றன.

மற்றபடி, போற்றிக் காக்க வேண்டிய புத்தகப் பெட்டகமாகவே ஒவ்வொரு இதழையும் செறிவூட்ட முனைகிறோம்.

பருவ இதழ்களின் 'கிச்சு கிச்சுப்' பகுதிகளை நாம் தவிர்த்தே வந்துள்ளோம். சொறிந்தால் சுகம் போல அவை நம்மை இளைப்பாற்றுவது உண்டுதான் எனினும், சிந்தனைத் தளத்தில் மனிதனைத் தக்கையாக்கும் சீண்டல்கள் அவை.

குப்பைக் கிளறலாய் பல்சுவை காட்டவோ, விளம்பர விஷயங்களை இலக்கியம் போல் சித்தரிக்கவோ, பிறர் முதுகைச் சொறியவோ, பிறர் சொறிய மகிழவோ யோசித்ததே இல்லை.

மலினங்களைத் தவிர்க்கவும் செறிவான படைப்புகளைத் தேடவுமே இதழில் சுகம் வளர்த்தோம்.

படைப்பாளனின் பரம்பரையைத் தேடிக் கொண்டிராமல் கிடைக்கும் படைப்புகளின் குறைந்த பட்சத் தகுதிகளையும் தேடிப்பிடித்து வெளியிடவே செய்கிறோம்.

புதியவர்களைப் பிரியத்தோடு அரவணைத்துக் கொள்வதையே நோக்கமாக்கிச் செயல்பட்டிருக்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

படைப்பிலக்கியத் தளத்தில் இதழ் இன்னும் கூடுதலாகப் பன்முகம் காட்ட வேண்டும் என்பதை உணர்ந்தே முன் செல்கிறோம். புதிய நூல்களின் அறிமுகத்திலும், இலக்கியத் துணுக்குகளின் நொறுக்குத் தீனியிலும் சராசரி ரசனையை மேம்படுத்தல் உடனடிச் செயல்பாட்டுப் பொருளாகிறது.

இலக்கியச் சாதனைகளாக வடிவெடுக்கக் கூடிய சோதனை முயற்சிகளில் இதழுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு.

ஓர் உறுத்தலை இங்கே அவிழ்க்கலாம் எனப் படுகிறது.

இலக்கியத்தில் அதி தீவிரவாதமும் மொழி அசட்டையும் இன்னும் நமக்குச் செறிமானப் படவில்லை.

சராசரி மனிதனைப் புறந்தள்ளுவதை விடவும், அவனின் பிசிறு தட்டும் ரசனையை மேம்படுத்துவது இலக்கியவாதியின் முயற்சியானால் நலமாகும்.

இதழின் முயற்சியும் இப்படிப்பட்டதுதான்.

மனிதத் தகுதிகளில் முழுமையடைந்தவன் யார் என்பதை, முற்றுப் பெறாதவன்தான் நிர்ணயிக்க வேண்டிய போது, அவனவனும் தன்னளவில் ஒரு முழுதான் அல்லவா? இந்த அடிப்படை நேசம் நம் அறிவுக்கும் மேலாக இழையோடி நின்றால்தான், ஒப்பீட்டு முறையில் மனிதக் குறைகளைச் சரி செய்யும் முயற்சி மரியாதைக் குரியதாகும்.

இதைச் சொல்ல எமக்குத் தகுதியும் உயரமும் போதாது என்கலாம் இவர்கள்.

இருக்கலாம்.

எம் தகுதி எம்மில் உறைப்பதுதான். எம் உயரம் எமக்கு எட்டும் அளவுதான்.

தகுதியும் திறமையும் ஒருவனின் ‘கை மீறிய’ விஷயங்களாய் இருக்க முடியாதல்லவா.

எம் வாழ்நாளில் சில சிகரங்கள் எம் தோளுக்கு இணையாக வந்து தோழமை பாராட்டியதுண்டு.

சில பாதாளங்கள் எம்மை மோக மயக்கமாய் மூச்சுத் திணற வைத்து, சேற்றில் புதைத்ததும் உண்டு.

இவையெல்லாம் எம் அனுபவங்கள்தாமே தவிர, நாம் உயர்ந்தோம் என்றோ, தாழ்ந்தோம் என்றோ ஒன்றும் இல்லை. மலை முகட்டில் நின்றால் உயரத்தில் நிற்பதாகலாம். உயர்ந்து விட்டதாகுமோ.

எம் உயரம் எப்போதும் எம் உள்ளங்காலிலிருந்து உச்சி வரைதான். பௌதிக உயரம்தான். பாவனை உயரம் என்பது நிழல் போலத்தானே. அதிகாலையிலும் முதிர்மாலையிலும் வெகு நீளமாய்த் தெரியும் நிழல் போலத்தான்.

பிறர் சந்தோஷம் தேடுவதும் நம் சித்தத்தில் ஸ்வாதீன

படிப்பகம்

www.padippakam.com

மாயிருப்பதும் தகுதியோ உயரமோ இல்லாமல் போகலாம் அவர்களுக்கு.

போகட்டுமே.

ஃ

இதழின் ஓராண்டுக் காலமும் நமக்கொரு மாகானு பவமே.

இதழின் ஆண்டு நிறைவு எம்மைவிடவும் இலக்கிய வாசகர்களை அதிகம் மகிழ்வித்திருக்கும்.

இவர்கள் இலக்கிய இதழ்களில் குறைப் பிறப்புகளையே கண்டு நொந்தவர்கள் போலும்.

இதழ் துவங்கும் போதே 'எச்சரிக்கை' சொல்லி, முரண் முகம் காட்டி வரவேற்றவர்கள்.

சிற்றிதழ்கள் உற்பத்தி செய்துள்ள கலாச்சாரங்களில் இது ஒன்று.

இலக்கிய ஏடுகளின் குறைப் பிரசவங்களுக்கு இரண்டு காரணங்கள் புலப்படுகின்றன.

ஒன்று, இதழைத் தொடங்கும் குழுவினரின் ஒருமையுணர்வு இடையிலேயே சேதமுற்றுப் போவது.

மற்றொன்று, இலக்கிய வாசகர்களின் அதீதமான எச்சரிக்கை யுணர்வு, இதழுக்குச் சந்தாதாரர் ஆவதைத் தமக்குச் சம்பந்த மில்லாத விஷயமாகத் தீர்மானிப்பது.

தமிழர் வளர்த்த கலாச்சாரங்களில் தலையாயது இது.

தொடர்பு கொண்ட நண்பர்களுக்கெல்லாம் இதழ்களைத் தொடர்ந்தனுப்பி வேண்டிக் கொண்டதில், சந்தா சேர்ந்தவர்கள் 'ஒரு கை' விரல்களுக்கும் குறைவானவர்களே என்பது சான்று.

எமக்கு இது அதிர்ச்சியாகவே இல்லை.

மாறாக, அதிசயமாக இருந்தது.

'அப்பனுக்குப் பிள்ளை தப்பாமல்' என்பார்களே, அது போல தமிழர்களின் அடிப்படை கலாச்சாரத்தை மீறிக் கொண்டு எந்த இலச்கியவாதியும், வாசகனும் உயர்ந்துவிடவில்லை என்பதைக் காண நேர்ந்த அதிசயம் இது.

சில இளைஞர்கள் தங்கள் கவிதைகளை அச்சில் பார்க்கவென்றே சந்தா சேர்ந்தார்கள். இரண்டொருவர் தங்கள் படைப்புகளோடு உறைக்குள் ஐந்தோ, பத்தோ, கையூட்டும் அனுப்பினார்கள்.

சிற்றிதழ்கள் பெற்றுப் போட்ட மேலும் சில போற்றத் தக்க கலாச்சாரங்கள் இவை.

இதழை, தேர்ந்தெடுத்த பல படைப்பாளிகளுக்கு அனுப்பி

படிப்பகம்

www.padippakam.com

வைத்தோம். ஒரு 'வாழ்க'? ஒரு 'தொடர்க'? ஊகூம்.

எதார்த்தத்தில் பிரபலங்களைத் தரிசித்த திருப்தி நமக்கு.

இதழுக்கான மனங்கனிந்த வாழ்த்தும் வாய் நிறையப் பாராட்டும் சொல்லப் பழகியவர்கள் மூத்த ஜாம்பவான்கள் திரு வல்லிக்கண்ணன் அவர்களும் திரு தி. க. சிவசங்கரன் அவர்களும்.

எழுத்தாளர்களாய் இருந்து முதிர்ந்ததைவிட, நேயமிக்க மனிதர்களாய்க் கிளர்ந்து மகிழ்வது அவர்கள் இயல்பாகிப் போனது போலும். மானுடப் பிரியர்களாய் இயங்கும் இவர்களிடம் படைப்பாளர்கள் கற்றுக் கொள்ளத் தக்க பண்புகள் இவை.

இந்த இதழை நம் பையையும் கையையும் நம்பியே தொடங்கினோம். பையின் கனம் 'பகீர்' என்று கரைந்திருக்கிறது. கையின் பலம் ஒரு சாதகமே போல் தெளிந்திருக்கிறது.

இதைத் தொடங்க முனைந்தபோது எத்தனை நம்பிக்கைகள், எத்தனை உறுதி மொழிகள் நமக்குச் சமர்ப்பணம் ஆயின!

உதாரணத்திற்கு ஒன்று.

"என்னால் இரண்டாயிரம் சந்தாக்கள் சேர்த்துத் தர முடியும். மேற்கொண்டு நீங்கள் சமாளித்துக் கொள்வதானால் யோசிக்காமல் தொடங்குங்கள்," என்பது ஒரு விசுவாசியின் உத்தரவாத மொழி.

நாம் ஒன்றும் அப்படியே நம்பிவிடவில்லைதான்.

'இரண்டாயிரம் என்ற இடத்தில் ஒரு இருநூறு தேறாதா,' என்ற நம்பிக்கைதான்.

கடைசியில் தேறியது என்ன?

எட்டு சந்தாக்கள்.

அதற்கு நாம் அலைந்த அலைச்சலும் இழந்த பொருளும் ஒரு இருபது சந்தாக்களுக்கு ஆகும்.

இத்தனைக்குப் பின்னும் நம்பிக்கை கொள்ள வைக்கும் பிறர் வார்த்தைகளைப் புறக்கணிக்கவே முடிவதில்லை. பேச்சு மனிதனுக்கு வாய்த்த மகத்தான வரம். அதற்கு அர்த்தமே இல்லாமல் போவது எப்படிச் சாத்தியம்!

ஒரு பிச்சைக்காரி எம்மைப் பார்த்து, "நீங்க மகராசனா இருப்பீங்க. ஒரு பத்து காசு தர்மம், ஐயா," என்று சொல்லிவிட்டால் போதும். பத்து காசு தர்மம் செய்ய முடியாவிட்டாலும்கூட 'நாம் மகராஜனாய் இருப்போம்' என்னும் நம்பிக்கை மட்டும் போவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com

விவரம் தெரிந்த நாள் முதலாய் ஒட்டிக் கொண்டு விட்ட நோய் இது; ஓர் ஆரோக்கியம் போலவே அங்கீகரிக்கப்பட்டு விட்டது.

இந்த ஏமாற்றங்களால் நாம் பாதித்தோமா?

பாதிக்காமலா?

ஆனால், சென்ற கணத்தின் நிகழ்வுகள் இந்தக் கணத்தின் நினைவுகள் ஆனதும், பாதிப்புகளின் கசப்போ, இனிப்போ கரைந்து போகிறது. மிஞ்சுவது நினைவுகளின் ஆனந்தம் மட்டுமே.

நாம் சந்தனம் அல்லதான்.

ஆயினும் சக மனிதர்களிடம் நாம் வைத்த நம்பிக்கை மிகுந்த நேசம், மாற்று இல்லாத வாசமாகவே நம்மைக் கரைக்கிறது.

இந்த இதழின் தொடக்கம் நம்மில் ஒரு சரித்திரம்.

'வாழ்க்கை இருண்டுவிட்டதா?' என்று அவசமுற்று நிலை குத்திக் கிடந்த போது, 'வாழ்நாளெல்லாம் ஆசைப்பட்டது இன்னும் பாக்கி இருக்கிறதே' என்று நினைவு வந்தது. இதழ் நடத்துவதுதான் அந்த ஆசை. முப்பது ஆண்டுகளுக்கு முன் நம் முதல் நூல் வெளிவந்த காலத்திலிருந்து வளர்ந்து வந்த ஆசை. இப்போது அது நிறைவேறியுள்ளது. இது ஒன்றே ஓர் இணக்கமான இயக்கமாய் நம்மைச் செயல் படுத்துகிறது.

'கடமையைச் செய்; பலனை எதிர்பாராதே' என்று சொல்ல ஒரு வேதம்.

நமக்கோ செயல் படுவதுதான் வாழ்ந்திருப்பதாகிறது. இதில் கடன் என்ன? பயன் என்ன?

இதழ் தன் பயணத்தைத் தொடர்கிறது.

இது ஒற்றை மனிதனின் வென்கொற்றக் குடை. இதன் இறையாண்மையில் நம்பிக்கை வைத்து, சந்தாதாரர்களாகி, நம் சக மனிதர்கள் எப்போதும் துணை வருவார்கள் என்றே இன்னமும் நம்புகிறோம்.

"வெள்ளைத் தாளில், இந்த விலையில், கட்டுப்படியாகுமா?" என்றார் ஒரு நண்பர்.

ஆகாதுதான்.

பணம் பற்றிய வியாபாரத்தில் கட்டுப்படியாகாதுதான்.

மனம் பற்றிய விவகாரத்தில் ஆகத்தானே வேண்டும்.

நண்பர்களே, உங்கள் வலிமையை உணர்ந்தீர்களா?

இதைச் சொல்லத்தான் இந்த இதழ், மலர் எல்லாமும்.

வாழ்க! வணக்கம். ஃ

படிப்பகம்

www.padippakam.com

With best compliments from:

☎ 843812

# Rayan & CO.,

**BLOCK MAKER**
**OFFSET NEGATIVE**

**325/2, Triplicane High Road,**
**Madras-600005.**



படிப்பகம்

www.padippakam.com

# படிக்காதீர்கள்

*துறவி*

அதிகம் படிக்காதீர்கள்.

அதிகமான படிப்பு
வாழ்க்கையை
அந்நியமாக்கும்!

அதிகப்படிப்பு
அர்த்தங்களை விடவும்
அர்த்தமின்மைகளையே
அதிகம் போதிக்கும்!

படிக்கப் படிக்க
உனக்குள்
ஞானம் நிரம்பாது
அறியாமையே வெளியாகும்!

புத்தகம் படித்து
அறிஞனாகலாம்
வாழ்க்கையைப்
படித்தால்தான்
மனிதனாகலாம்!

தமது
மூளை பலத்தால்
உலகத்தின் முகத்தில்
கற்றறிந்த மேதாவிகளே
கரிபூசுகிறார்கள்!

கல்லாமை
மட்டும் அல்ல
அதிகம் கற்பதும்
நம்மை முட்டாளாக்கும்!

தற்காப்பு கருதி
சேகரிக்கும்
இந்த ஆயுதங்களால்
தற்கொலைகளும்
நிகழ்வதுண்டு!

கற்றவன் இதயத்தில்
கழுகுகள்
கூடு கட்டும்;


பேதையின் நெஞ்சிலோ
மனித நேயம்
முறுவல் பூக்கும்!

இந்த அடுப்பை
அளவோடு எரியவிடு
அப்போதுதான் நீ
பதமாகச்
சமைக்கப் படுவாய்!

முத்துக்கள் சேகரிக்க
இந்தச்
சமுத்திரம் அவசியந்தான்
தாகம் தணிவதற்கு
நாம்
என்ன செய்யப் போகிறோம்!

வாழ்க்கையை விட்டு
மெல்ல மெல்ல
உதிர்வதற்கு உத்தேசமா?
அப்படியானல்
அதிகம் படி!

அறியாமை
எத்தனை சுகமானது!
அறிந்தமை
எத்தனை கொடுமையானது!



சில நேரங்களில்
பாமரத்தனமும் வரம்
பலநேரங்களில்
பகுத்தறிவும் சாபம்!

பகுத்தறிவு நிர்மானிக்கும்
நரகத்தை விடவும்
பேைதமை உருவாக்கும்
சொர்க்கம் சிறப்பென்பேன்!

வாழ்க்கை
வசப்படுவது
ரசிகனுக்குத்தான்
அறிஞனுக்கல்ல!

படிப்பகம்

www.padippakam.com

# புவியரசு

## துவக்கம்

'பூமிக்குத் தலை சுற்றுகிறது.'
என் கவித்தோழன் சொன்னான்!
அது ரொம்பச் சரி!
என் தலைசுற்றல் என்னவோ
நின்றுதான் விட்டது;
புத்தியும் தெளிவாய்த்தான் இருக்கிறது.
மீண்டும் பூமியின் தலைசுற்றல் நின்று
என் தலைசுற்றல் துவங்குமுன்
'நாம் எதையாவது
செய்தாக வேண்டும்!'
ஆம்.
நாம் எதையாவது
செய்தே ஆகவேண்டும்!
ஆமாம், உங்களுக்கெப்படி?



## அனாமிகன் கவிதை

எனக்கு அடிக்கடி கோபம் வரும்.
யாரையாவது அடிக்கவேண்டும்போலிருக்கும்.
ஆனால் யார் அகப்படுவார் என்னிடம்?

இன்றும் அப்படித்தான்
தேடிக்கொண்டிருந்தேன் வெகுநேரமாய்.
என் கன்னத்தில் உட்கார்ந்தது ஒரு கொசு.
ஓங்கி அறைந்தேன் கன்னத்தை.
கொசு இறந்தது சிரித்துக்கொண்டு.

கன்னத்தில் ரத்தம்.
யார் ரத்தம்?
என் ரத்தமா, கொசுவின் ரத்தமா?
புரிந்துகொள்ள இன்னொரு கொசு
கிடைக்காமலா போய்விடும்?

படிப்பகம்

www.padippakam.com

● புதிய எழுத்தாளர்களை இனம்கண்டுகொள்வதில்கவிதா சரணுக்கு நிகர் கவிதாசரணே. ஓராண்டில் பல்லாண்டுவளர்ச்சி காட்டுவதற்கு கவிதாசரணில் வெளிவந்துள்ள படைப்புகளே சான்று.

புதுவை இளவேனில்

● தங்கள் எழுத்துக்களில் அழகும், ஆழமும், பொருட் செறிவும் நிரம்பி உள்ளன. மகிழ்ச்சி.

மைசூர் ம.ந.ராமசாமி

## நேசம் பேசும் வாசகர்கள்

● 'வருக தோழனே' 'அடிமைகள்' அற்புதமாக இருந்தன. வல்லிக்கண்ணனின் கட்டுரை பயனுள்ளது. நெல்லை சு.முத்துவின் கட்டுரை ஆழமான தகவல்களைக் கொண்டிருந்தது. அஷோக் ராஜாவின் 'கனவைச் சுமந்த மனம்', நெஞ்சத்தை மிகவும் கொள்ளை கொண்டது.

மணலி, த.சங்கரபாண்டியன்

● 'தமிழுண்ணிகள்' மொழி, கல்வி பற்றி சிந்தனையைத் தூண்டச் செய்திருக்கிறது. 'ஆலங்கட்டி மழை' வித்தியாசமான படைப்புபோல உணர்வுகளைத் தந்தது. சில கவிதைகள் நெஞ்சில் நிலைத்துநிற்கின்றன. இதழின் ஆண்டு மலரை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறேன்.

க. காவிளை, கே.புஷ்பராஜ்

● நெருக்கடியான காலவெள்ளத்தில் ஆழத்தின் அளவையும் மீறி, நீச்சல் நடையில் ஓராண்டைக் கடந்துவிட்ட துணிச்சலை நான் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறேன். உண்மையைச் சொல்லுபவர்கள் சிறுபான்மையராகிவிட்டனர். இந்த இலாபத்தை எச்சில்கள் அனுபவிக்கின்றன. தமிழகத்தின் அருவெறுப்பு இந்த நூற்றாண்டில் மாறப்போவதில்லை. நாம் நமக்குள்ள கடமையைச் செய்வோம்.

பம்பாய், இரா.மா.சண்முகராசன்

● இந்த இதழில் எனக்கு நிரம்பப் பிடித்திருந்தது கடிதங்கள் பகுதியில் கவிதையை நவீனப் படுத்துவது குறித்த உங்கள் பதில். மிகவும் ஆழமான பதில் அது. இத்தகைய தெளிவு உங்களிடத்தில் இருப்பதை அறிந்து நிரம்பவும் சந்தோஷப் படுகிறேன். கவிதைகளில் தரம் கூடியுள்ளது.

சென்னை-102, கே.ஜெகதீஷ்



● கே.ஜெகதீஷ்-ன் கட்டுரை நன்று. நீலம் மதுமயனின் 'வெளியைப் பார்க்கத் தவறியதால்தான் ஒவ்வொரு மனிதனும் நாடும் தனித்தனி' நன்று. துறைவனின் பாம்பின் முதுகு வலி (எமக்கும் ஏற்படுவது போல் இருக்கிறது) நன்று.

சென்னை-19, மு.ராஜசேகரன்

www.padippakam.com

பத்திரிகை மலர், வழக்கமாக மட அதிபர்களின் படத்துடன் கூடிய அருளாசியை சாட்சியாக வைத்து, ஆலய தரிசனம் முதல் அந்தரங்க சில்மிஷம் வரை வண்ணங்களை வாரியிறைத்து அமர்க்களம் புரியும். நமக்கு அந்த வசதியில்லை. ஆசையும் இல்லை. அவற்றை ஈடுகட்டும் வகையில் நமக்கேற்ற வழியில் இந்தக் கடிதத்தை வெளியிட்டு ஆறுதல் தேடுகிறோம்.

உலகெங்கும் தோன்றிய வரலாற்று நாயகர்களையும், வரலாற்றுத் தாக்கங்களையும், சிந்தனைச் சிற்பிகளையும் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்த மாமனிதர் வெ. சாமிநாத சர்மா அவர்கள். அவரது சொந்த சோகம் பற்றிய பத்துக் கடிதங்களில் கடைசிக் கடிதம் இது.

எழுதுவதை வேள்வியாக நடத்திய திரு சர்மா. அவர் எழுதியதை மட்டுமே நூல்களாக்கி மகிழ்ந்த பதிப்பாளர் திரு அரு. சொக்லிங்கம். அவர் எழுத வேண்டும் என்பதையே சங்கற்பமாகக் கொண்டு வாழ்ந்த அவரது துணைவியார். இம் மூவரிலும் இழையோடிய மனிதச் சீர்மை ஆலய தரிசனமாய், புனித யாத்திரையாய், இலக்கியக் கோலமாய் நம்மைத் துய்த்தது. அதன் மனப் பதிவாக இதனை வெளியிடுகிறோம்.

—ஆசிரியர்.

# சங்கற்பம்

## வெ. சாமிநாத சர்மா



**தி. நகர், சென்னை**
**27-4-1956**

எனதன்புள்ள ஸ்ரீ சொ. அவர்களுக்கு நமஸ்காரம். நலம் பல விளைக.

எனது வாழ்க்கைக்கு வெளிச்சம் தந்து வந்த விளக்கு இன்னும் சில ஆண்டுகளேனும் எரிந்து கொண்டிருக்குமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். என் எண்ணத்தில் மண் விழுந்து விட்டது. இதற்காக நான் யாரையேனும் நொந்து கொள்ள முடியுமா? என் முன் வினைப்பயனை நானதானே அனுபவிக்க வேண்டும்?

என் எண்ணம் ஈடேறவில்லையாயினும் என் மனைவியின் எண்ணம் ஈடேறிவிட்டது. பஞ்சள் குங்குமத்துடன் எனக்கு முந்திக்கொண்டு விடவேண்டுமென்று அவள் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். அவளது பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து ஆண்டவன் அவளைத் தன்னிருப்பிடத்திற்கு அழைத்துக் கொண்டுவிட்டான். மங்களமாகப் பிறந்த அவள் மங்களமாகவே போய் விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com

தாங்கள் கடைசித் தடவையாக அவளைப் பார்த்தபோது இவ்வளவு சீக்கிரத்தில் நம்மை விட்டுப் பிரிந்து போய்விடுவாள் என்று எண்ணியிருக்க மாட்டீர்கள். எவ்வளவு கணீர் கணீரென்று உங்களோடு பேசினாள்? எவ்வளவு நம்பிக்கையுடன் நீங்கள் உங்கள் அலுவலை நாடிச் சென்றீர்கள்? நீங்களென்ன, அவளுக்குச் சிகிச்சை செய்து வந்த டாக்டரும், கடைசி நேரம் வரை எவ்வளவு நம்பிக்கையுடனிருந்தார்? ஆனால்—? இந்த ஆனால் கேள்வியை எத்தனை தடவை என் வாழ்க்கையில் சந்தித்திருக்கிறேன்?

அவளும், கடைசி நாளுக்கு முந்தின நாள் வரை நப்பிக்கையுடன்தானிருந்தாள். உடல் நோய் ஏதுமின்றிச் சில நாட்களாவது இருந்து விட்டுப் போக வேண்டுமென்ற விருப்பம் அவளுக்கு இருந்தது. ஏனென்றால், மனிதன் மூன்று விதமான எச்சங்களோடு மரிக்கக்கூடாதென்று பெரியோர்கள் சொல்லுவார்கள். அதாவது, கடன் எச்சம், நோய் எச்சம், பகைமை எச்சம் ஆகிய மூன்றும் இல்லாமல் உயிர் போக வேண்டுமென்பது கருத்து. இந்த உண்மையை அவள் நன்கு அறிந்திருந்தாள். இதனால்தான், நோய் எச்சமின்றிச் சில நாட்களாவது இருக்க வேண்டுமென்று அவள் ஆசைப்பட்டாள். அந்த ஆசை நிறைவேறக் கூடிய மாதிரியான குறிகள் பலவும் கடைசிநாள் வரையில் அவளிடம் இருந்தன; நம்பிக்கையுடனிருந்தாள்.

கடைசி நாளைக்கு முந்தின நாள்தான், அவளது நம்பிக்கையில் சிறிது தளர்ச்சி காணப்பட்டது. அன்று ஞாயிற்றுக்கிழமை. காலை நேரம். வழக்கம் போல் காபி அருந்திவிட்டு, படுக்கையில் உட்கார்ந்த வண்ணம், ஜன்னல் வழியாகத் தெருவில் போகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது நான் அங்குச் சென்றேன். ''காபி சாப்பிட்டாயா?'' என்று கேட்டேன். ''ஆச்சு; நீங்கள்?'' என்றாள். ''ஆச்சு,'' என்றேன். சிறிது நேரம் மௌனம். பிறகு ''இத்தனை நாட்களாக, நான் பிழைத்து, சிறிது காலம் உயிர் வாழ்வேன் என்ற நம்பிக்கையுடனிருந்தேன். இன்று, அந்த நம்பிக்கை என்னைக் கைவிட்டுப் போய் விட்டதாக உணர்கிறேன்,'' என்றாள். ''ஏன் அப்படிச் சொல்கிறாய்? ஒன்றும் நடக்காது,'' என்று நான் சொல்லிவிட்டு வெளியே வந்து விட்டேன். அப்பொழுதே என் அடி வயிற்றில் ஒரு குமுறல் ஆரம்பித்துவிட்டது அவளோ, இப்படிச் சொன்ன தற்கப்புறம் அதிகமாகப் பேசவில்லை. தன் கவனத்தை, தனது சுற்றுச் சார்புகளுக்கு அப்பாற் பட்ட ஒரு நிலைக்குக் கொண்டு போய்விட்டாள். இந்த நிலையில் அவள் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் ஓடிக் கொண்டிருந்தனவோ, யாருக்குத் தெரியும்? ஆனால் அந்த எண்ணங்கள், இவ்வுலக பந்தங்களினின்று விலகியிருந்தனவென்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

இப்படிச் சொல்வதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறீர்களா? கடைசி நேரத்தில், அவள் நல்ல நினைவுடனேயே இருந்தாள். ஆனால் கண்கள் மூடியிருந்தன. அருகிலிருந்தவர்கள் ''உங்களிடம் ஏதேனும் சொல்ல விரும்புகிறாளோ என்னவோ? கேளுங்கள்'' என்று என்னைப் பார்த்துச் சொன்னார்கள். நானும் அப்படியே அவள் படுக்கையண்டை சென்று ''என்ன'' என்று கூப்பிட்டேன்.— இப்படி ''என்ன'' என்று சொல்லித்

படிப்பகம்

www.padippakam.com

தான் நான் என் மனைவியை அழைப்பது வழக்கம். என் குரலைக் கேட்டதும் மூடியிருந்த அவள் கண்கள் திறந்தன. என்னைப் பார்த்தாள். அவ்வளவுதான். மறுபடியும் கண்கள் மூடி விட்டன. என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.

மிக மிகச் சுருங்கிய முறையில் நடைபெற்ற எனது அறுபதாவது ஆண்டு நிறைவு விழாவின் போது அவள் எவ்வளவு சுறுசுறுப்புடன் இருந்தாள்? வந்தவரையெல்லாம் எப்படி எப்படி உபசரித்தாள்? அதற்குப் பிறகு நூற்றிருபது நாட்கள் தான் அவள் உயிரோடிருப்பாள் என்று அப்பொழுது யாராவது நினைத்திருப்பார்களா?

எனது அறுபதாவது ஆண்டு நிறைவை மிக விமரிசையாக நடத்தச் செய்ய வேண்டுமென்று அவள் என்னென்னமோ திட்டங்கள் போட்டிருந்தாள். அந்தத் திட்டங்களுக்கு ஊக்கமளிக்கும் முறையிலும், அவைகளைச் செயல்படுத்தும் வகையிலும் தாங்கள் உதவி செய்யச் சித்தமாயிருந்தீர்கள். ஆனால் எனது உடல்நிலை குறுக்கே நின்றது. உங்களுடைய எண்ணங்கள், அவளுடைய திட்டங்கள் எல்லாம் மணல் வீடாகச் சரிந்து போய்விட்டன. அவள் உள்ளத்தை இது மிகவும் பாதித்து விட்டது. வாழ்க்கையில் தனக்கேற்பட்ட பெரிய ஆசாபங்கமாக இதனைக் கருதி விட்டாள். வாழ்க்கையில் ஒருவித அசட்டை மனப்பான்மை உண்டாகிவிட்டது. இதனோடு, எனது உடல் நிலையும், அவள் எதிர்பார்த்தபடி சீக்கிரத்தில் அபிவிருத்தியடையவில்லை. நான் எங்கே முந்திக்கொண்டு விடப் போகிறேனோ என்று அஞ்சினாள். இதனால் தன் உடல் பராமரிப்பு விஷயத்தில் கவனக்குறைவு காட்டி வந்தாள் என் வற்புறுத்தலுக்கிணங்க, சிகிச்சைக்கு உட்பட்டு வந்தாளேயன்றி, தன்னிச்சையாக எதுவும் செய்து கொள்ளவில்லை.

நோய் வாய்ப்பட்ட நிலையிலிருந்துங்கூட எனக்குச் செய்து வந்த பணிவிடைகளை அவள் சிறிதுகூடக் குறைத்துக் கொள்ளவில்லை. எனக்கு எந்தச் சமயத்தில் எது தேவையென்பதை உணர்ந்து அந்தத் தேவையை நிறைவேற்றி வந்தாள். இதை நினைக்க நினைக்க என் உள்ளம் மெழுகாகக் கரைகிறது. அப்பொழுதெல்லாம், அவள் மரணப் படுக்கையில் கிடந்த காட்சி என் அகக்கண் முன்னே வந்து நிற்கிறது.

எந்த மென்மையான கரங்களைப் பற்றிக்கொண்டு 1914-ஆம் வருஷம் ஜூலை மாதம் பதிமூன்றாந் தேதி திங்கட்கிழமை பகல், சம்சார சாகரத்தில் இறங்கினேனோ, அந்தக் கரங்கள் 1956-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் பதிமூன்றாந் தேதி திங்கட்கிழமை பகல், என்னைத் தனிமை யென்னும் பாறையிலே தவிக்க விட்டு விட்டு, என் பற்றினின்றும் விடுதலை செய்து கொண்டன. முதல் திங்கட்கிழமை யன்று அந்தக் கரங்களை நான் பற்றிய பொழுது அவை எவ்வளவு உஷ்ணமாயிருந்தன! கடைசி திங்கட்கிழமை அதே கரங்களைத் தொட்டுப் பார்க்கிறேன். ஐயோ! எப்படிச் சில்லிட்டுப் போயிருந்தன? கொதித்து வந்த என் கண்ணீரினால் அவற்றை நனைத்துப் பார்த்தேன்; சூடு ஏறவே இல்லை. ஆனால் அந்தக் கணத்திலிருந்து என் உள்ளத்தில் சூடு ஏறத் தொடங்கிவிட்டது.

படிப்பகம்

www.padippakam.com

நாற்பத்திரண்டு கால இல்லற வாழ்க்கை! திரைப்படக் காட்சிப்பால் எவ்வளவு சீக்கிரத்தில் ஓடி நின்றுவிட்டது? வாழ்க்கை ஒரு கண்ணாமூச்சி விளையாட்டு என்று சொல்வார்கள். அஃது எவ்வளவு உண்மையென்பதை இப்பொழுது நன்கு உணர்கிறேன். ஆனால் இந்த விளையாட்டில் நாங்கள் இருவரும் மனப் பூர்வமாகக் கலந்து கொண்டோம். இன்பங்களும் துன்பங்களும் எங்கள் வாழ்க்கைக்கு மெருகு கொடுத்தன. இரண்டையும் ஒரே மாதிரியாகக் கருதி அனுபவித்தோம். இனி?

நான் தனியன். எனக்கு வாழ்க்கை யென்பதேது? நான் மூச்சு விட்டுக் கொண்டு உலவி வருவதை வாழ்க்கையென்று கருதுவீர்களானால், அந்த வாழ்க்கை ஏற்கனவே நான் தெரிவித்துக் கொண்டிருக்கிறபடி ஒரு பாலைவனந்தான். ஆனால் அந்தப் பாலைவனத்தில் தாங்கள் ஒரு பசும் புற்றரையாக எனக்கு இருக்கிறீர்கள். அஃதெனக்குப் பெரிய ஆறுதலாயிருக்கிறது அதனால் நான் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் இழக்கவில்லை. அப்படி இழந்து விடுவேனாகில் என் மனைவிக்குத் துரோகம் செய்தவனாவேன். சூட்சும சரீரத்தில் இருந்து கொண்டு என்னைப் பாதுகாத்து வரும் அவள் ''ஏன் இப்படித் தன்னம்பிக்கை யையும் தைரியத்தையும் இழந்து விடுகிறீர்கள்?'' என்று கேட்பாள்; கடிந்து கொள்வாள். என்னைக் கடிந்து கொள்ள அவளுக்குப் பூரண உரிமையுண்டு. அவள் உயிரோடிருந்தபோது இந்த உரிமையை அடைந்திருந்தாள். இப்பொழுது இன்னும் அதிகமாக அந்த உரிமையை உபயோகிப்பாள் என்பது நிச்சயம் ''என்னைப் பற்றிய கவலைதான் இனி உங்களுக்கு இல்லையே? இனி உங்கள் குறிக்கோளை நாடிச் செல்வதில் என்ன தடை?'' என்று கேட்பாளல்லவா? என்னுடைய குறிக்கோள்தான் அவளுடைய சங்கற்பம்; அவளுடைய சங்கற்பந்தான் என்னுடைய குறிக்கோள்.

அவளுடைய சங்கற்பம் இன்னதென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் காட்ட விரும்புகிறேன். ''நான் நூறு புத்தகங்கள் எழுதி முடிக்க வேண்டும். நூறாவது புத்தகத்தை எழுதி முடித்துவிட்டு, அதற்குமேல் நான் ஓய்வு கொள்ள வேண்டும்.'' இது தான் அவள் சங்கற்பம்; எனக்கிட்டிருந்த கட்டளை. இந்தக் கட்டளையை நிறைவேற்ற முயல்வேன். ஆண்டவன் அருளும் தங்கள் அன்பும் தேவை.

உண்மையில் நண்பரே! என் மனைவி இறந்துவிட்டதாக எண்ணமுடியவில்லை; இருப்பதாகவே என் நினைப்பு. எங்கோ அயலூருக்குப் போயிருப்பதாகவும், திரும்பி வந்துவிடுவாளென்றுமே என் மனம் கருதுகிறது. எப்பொழுதும் அவள் என்னோடு இருக்க வேண்டுமென்பதுதான் என் பிரார்த்தனை. இப்பிறவியில் மட்டுமல்ல; எப்பிறவியிலும்.

அன்புள்ள,

வெ. சாமிநாதன்

படிப்பகம்

www.padippakam.com

# பகைக்கு மரணமில்லை

## தார்க்ஷியா



கிராமத்தை ஒட்டினாற் போல விசாலமான வயல்வெளி. கண்ணுக் கெட்டிய தூரம் வயல்கள் தான். அதற்கப்பால் மேடும பள்ளமுமான தரிசு நலம், மரங்கள் செடி கொடி கள், புதர்கள். அதற்கப்பால் அடுத்த கிராமம். இரு கிரா மங்களுக்கும் இடைப்பட்ட தூரம் சுமார் மூன்று கிலோ மீட்டர்கள்.

வயல்களின் நடுவே, ஏறக் குறைய இரண்டு கிராமங்க ளுக்கும் மத்தியில் ஒரு வரப் பின் மீது அடர்ந்து வளர்ந்த வேங்கைமரம் ஒன்று இருந் தது. நெடுங் காலமாக அது அங்கே இருக்கிறது. மரத்திற்கு இந்தப் பக்கம் உள்ள வயல் கள் இனாம்தார் முருகுத் தேவ ருடையவை. அந்தப் பக்கம் இருப்பவை அடுத்த கிராமத் தைச் சேர்ந்தவை.

மரம் பெரியது. இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்கத்தி லும் சரி பாதியில் அது இருந் தது. இரு தரப்பாரும் வட்ட மாக அவரவர் பகுதியில் மரத் திற்கு இடம் விட்டிருந்தார் கள். ஆயினும் சமயங்களில் 'அண்டை' வெட்டுகிறேன் என்கிற சாக்கில் இரு தரப்பா ரும் ஒட்ட வெட்டி, மரத்தின் பக்க வேர்கள் பலவற்றை வெட்டி எறிந்த பிறகும் கூட மரம் உறுதியாக நின்றது. காலம் கண்ட மரம் அது.

மரம் யாருடையது என் பது எவருக்கும் தெரியாது. ஆனால் இரு கிராமத்தினருக் கும், வழிப் போக்கர்களுக்கும் இளைப்பாறவும், வயலில் வேலை செய்யும் காலங்களில் அதன் நிழலில் அமர்ந்து மதிய உணவு அருந்துவதற்கும் அது வெகுவாகப் பயன்பட்டது.

ஒரு பெரிய புயலும் மழை யும் அடித்து ஓய்ந்த பிறகு, தூரத்திலுள்ள காட்டிலிருந்து தறிகெட்டு ஓடிவந்த சிறுத் தைப்புலி ஒன்று கிராமத்திற் குள் நுழைந்துவிட்டது. காலி யாயிருந்த பள்ளிக்கூடக் கொட் டகையில் அது நுழைந்ததைக் கவனித்த ஜனங்கள், பந்தங்க ளைக் கொளுத்தி, தாரை தப் பட்டைகளை முழக்க, புலி வெளி வந்து வயல் வெளியை நோக்கி ஓடியது. ஜனங்களும் பந்தங்களோடும் கைக்குக் கிடைத்த ஆயுதங்களோடும் அதனை விரட்டிச் சென்றார் கள். பாய்ந்தோடிய புலி, வேங்கை மரத்தை நெருங்கிய போது எதிர் தரப்பிலிருந்தும் அடுத்த கிராமத்து ஜனங்கள் சிலர் வருவது கண்டு மிரண்டு போய் வேங்கை மரத்தில் ஏறி அதன் அடர்ந்த இலைகளுக் கிடையே பதுங்கிக் கொண் டது.

படிப்பகம்

www.padippakam.com

கற்பிக்கும் கலை என்பது தேடிக் கண்டுபிடிக்கத் துணை செய்வதுதான்.

—மார்க் வான் டோரென்

விரட்டிக் கொண்டு வந்த ஜனங்களின் கரங்களில் வெட்டரிவாள், வேல்கம்பு, கடப்பாறை போன்ற ஆயுதங்கள் இருந்தன. அப்படி ஒன்றும் பயந்த ஜனங்களும் அல்ல. ஆயினும் சிறுத்தைப் புலி பயங்கர வேகத்துடன் பாயக் கூடிய விலங்கு என்பதை நன்றாய அறிந்தவர்கள் ஆனதினாலே சற்று மரியாதையான தூரத்தில் நின்று தப்பட்டைகளை முழக்கிக் கொண்டிருந்தார்கள். சிறுத்தையை அங்கேயே விட்டு விட்டுப் போனால் மறுபடியும் கிராமத்துக்குள் நுழைந்து விட்டால் என்ன செய்வது?

சிறுத்தைப் புலி மரத்தை விட்டு இறங்குவதாக இல்லை. கூட்டத்திலிருந்த ஒருவன் கிராமத்திற்கு ஓடி ஊர் நாட்டாண்மை முருகுத் தேவரிடம் விவரத்தைச் சொன்னான்.

இனாம்தார் முருகுத் தேவர் வேட்டைக்காரர்தான். சிறுத்தை என்றவுடன் அதன் தோல் அழகை எண்ணி உற்சாகத்துடன் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு கிளம்பினார்.

மரத்திற்கு அந்தப் பக்கத்தில் நின்றிருந்த அடுத்த கிராமத்து ஜனங்களும் அவர்கள் கிராமத்திலிருக்கும் மிராசு வேலுத் தேவருக்குச் செய்தி அனுப்பினார்கள்.

அந்த நேரத்தில் மிராசு வேலுத்தேவர் சன்னதித் தெரு கோடியிலிருந்த ஒரு வீட்டில் ஒரு தகாத வேலையில் ஈடுபட்டிருந்தார். நினைத்ததை அந்த நேரமே செய்து முடிக்க வேண்டும் அவருக்கு. நேரம், காலம் என்கிற கணக்கெல்லாம் கிடையாது அவரிடம். அவர் செல்லமாக குஞ்சிக்குட்டி என்று அழைக்கும் கோயில் நாட்டியக்காரி கல்யாணி அம்மை, அவர் பட்டணத்திலிருந்து வாங்கி வந்திருந்த வெங்காயச் சருகு போன்ற பர்மா சில்க் சேலையை அவரது உணர்வுகளைத் தூண்டும் விதத்தில் அணிந்து கொண்டு அவருடன் சல்லாபப் பேச்சில் இறங்கியிருந்தாள்.

மிராசு வேலுத்தேவரின் அந்தரங்க எடுபிடியான மாயத்தேவன் அங்கே ஓடிவந்து அவரிடம் வேங்கை மரத்தில் புலி பதுங்கியிருக்கும் விவரத்தைக் கூறினான். வேலுத்தேவர் சல்லாப மயக்கத்திலிருந்து உடனே மீண்டார். அவர் ஒன்றும் வேட்டைக்காரர் அல்லர். ஆனால் அவரிடம் புத்தம் புதிய துப்பாக்கி இருந்தது. அதை உபயோகிக்கவும் பழகியிருந்தார். அடுத்த கிராமத்திலிருக்கும் இனாம்தார் முருகுத் தேவருக்கு சமமாக எல்லாவற்றிலும் விளங்க வேண்டும் என்கிற ஆசையும் இருந்தது. உடனே கிளம்பினார்.

மனோகரமான மாலை நேரம் இனிய இரவாகவும், முடிவில் பல பரிசுகளிலும் முடியப் போவதாக எண்ணியிருந்த கல்யாணி அம்மை ஏமாற்றமடைந்தவளாக, ''நீங்கள் அங்கு போய்ச் சேருவதற்குள் அங்கிருப்பவர்களே அதைக் கல்லாலும் கடப்பாறையாலுமே அடித்துக்

படிப்பகம்

www.padippakam.com

கொன்று விடுவார்கள். அங்கே அந்த இனாம்தார் முருகுத் தேவர் வேறு இருக்கிறார். அவர் வைத்த குறி தவறியதில்லை என்கிறார்கள். நீங்கள் போய் செத்த புலியையா சுடப் போகிறீர்கள்?'' என்று கிண்டல் செய்தாள். ''பார்த்து விடுவோமடி!'' என்று வீராப்புடன் கிளம்பிய மிராசுதார் அவசர அவசரமாக வீட்டிற்குச் சென்று துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டார்.

இந்தப் பக்கத்தில் இனாம்தார் முருகுத் தேவர்தான் முதலில் மரத்தண்டை வந்தார். தூரத்தில் நின்றபடி புலி பதுங்கியிருப்பதாக ஜனங்கள் கூறிய பகுதியை நோக்கி உத்தேசமாகக் குறி வைத்தார்.

சிறுத்தை மோசமான மிருகம். அதிகமாக மிரண்டால் எந்தப் பக்கம் பாயும், என்ன செய்யும் என்று அனுமானிக்க முடியாது. முதல் குண்டிலேயே தீர்த்துவிட வேண்டும். சரியான இடத்தில் குண்டு படவில்லையானால் ஆபத்து. காயம் பட்ட சிறுத்தைப்புலி வெறிகொண்டு தாக்கும். அப்படிப் பாயும் போது அடுத்த குண்டு சுடுவதற்குக் கூட அவகாசம் இருக்காது என்பதை அவர் அனுபவத்தால் அறிந்தவர். சிறுத்தை அவ்வளவு வேகமான மிருகம்.

மங்கலான வெளிச்சத்தில் இலைகளின் நடுவே தெரிவது சிறுத்தையின் உடலா, அல்லது மயங்கும் பின் மாலைப் பொழுதின் மங்கிய மஞ்சள் ஒளியா என்பது அவருக்குப் புரியவில்லை. ஆனால் தெரிந்து கொள்ள ஒரு வழி இருந்தது. தூரத்தில் நின்று புலி இருக்கும் இடத்தை உத்தேசமாகக் கணித்து ஒரு கல்லை எறிந்தால் புலி நகரும். உடனே தாமதமின்றி சுட்டு வீழ்த்திவிடலாம். கழுத்தில் அல்லது முன் தொடைக்கு மேலே நெஞ்சில் சுட்டால் தான் பலன் இருக்கும். தலையில் குண்டு பாய்ந்தால் தோல் முழு உருவத்துடன் கிடைக்காது. வேறு எங்கு குண்டு பாய்ந்தாலும் புலியைக் காயப்படுத்தலாமே தவிர தடுத்து நிறுத்த இயலாது. இனாம்தார் சற்று நேரம் தயங்கி நின்றார்.



மரத்திற்கு அடுத்தப் பக்கத்தில் மிராசுதார் வேலுத் தேவர் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருப்பதாக அருகில் நின்றவர்கள் கூற, ஒரு முடிவுக்கு வந்த முருகுத்தேவர் தமது ஆள் ஒருவனிடம் புலி இருக்கும் இடத்தை நோக்கிக் குறி பார்த்து கல் எறியச் சொல்லிவிட்டு மெதுவாக மரத்தை நெருங்கி சுமார் இருபத்தைந்து கெஜங்களுக்கு அப்பால் நின்று துப்பாக்கியை உயர்த்தினார். பின்னாலிருந்த அவரது ஆள் குறி வைத்து ஒரு கல்லை எறிந்தான்.

சிறுத்தை அங்குதானிருந்தது. பாய்வதற்கு முன்னோடியாக அது சற்று நகர்ந்த போது இனாம்தார் குறி வைத்துச் சுட்டார். முதல் குண்டுச் சத்தம் அடங்குவதற்கு முன் இன்னொரு குண்டும் சுட்டார். இனாம்தார் இவ்வளவு சமீபத்தில் குறி தவறுவது சாத்தியமில்லை. புலி தொப்பென்று கீழே விழுந்து சற்று நேரம் கால்களை உதறி அடங்கியது.

படிப்பகம்

www.padippakam.com



மனித குலத்திடமிருந்து தேசப் பற்றை உதைத்து வெளியேற்றாத வரை அமைதியான உலகத்தை நீ அடையவே முடியாது. —ஷா

எதிரே அடுத்த பக்கத்தில் துப்பாக்கியுடன் வந்து கொண்டிருந்த வேலுத் தேவருக்கு இந்த நிகழ்ச்சி வெறுப்பையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது. சிறுத்தை இவரது பக்கமிருந்த நிலத்தில்தான் விழுந்திருந்தது. அது பதுங்கியிருந்ததும் இவரது நிலத்தின் பக்கம் வளர்ந்திருந்த கிளையில்தான். ஆகவே அதனைச் சுடுவதற்கு தனக்கே முதல் உரிமை இருப்பதாக அவர் நினைத்தார். ஆயினும் பொது நன்மையைக் கருதி துஷ்ட விலங்கை எவர் வேண்டுமானாலும் கொல்லலாம் என்கிற பொது நியதிப்படி அவரால் எதுவும பேச முடியவில்லை.

இதற்கு முன்பு ஒரு தோப்பு கை மாறிய விவகாரத்தில் அவருக்கும் வேலுத் தேவருக்கும் மனஸ்தாபம் இருந்த காரணத்தால் இனாம்தார் அவர் வந்ததையே கவனியாதவர் போல் ''புலியை ஊருக்குள் தூக்கி வாருங்கள்'' என்று உத்தரவிட்டு விட்டு தம் வீட்டிற்குத் திரும்பினார்.

இனாம்தாரின் ஆட்கள் ஆனந்த ஆரவாரத்துடன் ஓடிச் சென்று சிறுத்தையை எடுத்துச் செல்லும் ஏற்பாடுகளில் முனைந்தார்கள். ஒருவன் மரத்தில் ஏறி புலிக்குப் பாடை கட்டுவதற்காக சில கிளைகளை வெட்டிக் கீழே எறிந்தான். வேலுத்தேவர் பகுதியில் நீண்டிருந்த மரத்தின் பகுதியிலிருந்துதான் அந்தக் கிளைகள் வெட்டப்பட்டன.

மரம் யாருடையது?

சாதாரண நேரமாக இருந்தால் வேலுத்தேவர் இதனைப் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார். புலியைச் சுடும் வாய்ப்பு கை நழுவிப் போன ஆத்திரம், அதனை முருகுத்தேவரே முந்திக் கொண்டு சுட்டு வீழ்த்தியதில் எரிச்சல், ''அங்கு முருகுத்தேவர் வேறு இருக்கிறார். நீங்கள் செத்த புலியைத்தான் சுடப் போகிறீர்கள்!'' என்கிற கல்யாணி அம்மையின் கிண்டல், எல்லாமாகச் சேர்ந்து அவரை கோபப்பட வைத்தது. அவர் சற்று நிதானம் தவறி ''யாரடா இந்தப் பக்கம் கிளையை வெட்டுகிறவன்?'' என்று அதட்டினார்.

அவருக்கு எவரும் பதில் கூறவில்லை. புலியைத் தங்கள் கிராமத்திற்குத் தூக்கிச் செல்லுவதில் தீவிரமாயிருந்தார்கள்.

வேலுத்தேவருடன் வந்திருந்த ஆட்கள் பத்துப் பேருக்கு மேலில்லை. ஆனால் எதிர் தரப்பிலோ ஏறக்குறைய பாதி கிராமமே வந்திருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களிடம் மேலும் எதையாவது கேட்பது உசிதமல்ல என்பதை உணர்ந்த வேலுத்தேவர் கோபத்தை அடக்கிக்கொண்டு குமுறலுடன் திரும்பிச் சென்றார்.

மரம் உண்மையில் யாருடையது?

அது யாருடையது என்

படிப்பகம்

www.padippakam.com

பது ஒரு புறம் இருக்கட்டும். அது வரப்பின் நடுவில் வளர்ந்திருந்தாலும் வேலுத்தேவரின் நிலத்தின் பக்கமாகத்தான் அதிகம் சாய்ந்திருந்தது. கிளைகளும் அந்தப் பகுதியில்தான் அதிகம். ''என்ன செய்யலாம்? ஏதாவது செய்தாக வேண்டுமே!'' என்கிற சிந்தனையிலிருந்த வேலுத்தேவருக்கு அவரது மைத்துனரான ஷண்பகத்தேவர் ஒரு யோசனை கூறினார்.

''மரத்தில் ஏறி நமது பக்கத்திலிருக்கும் கிளைகளை வெட்டச் சொல்லுங்கள் அவர்கள் ஏதாவது கேட்டால் அதையே விவகாரமாக்கி வம்புக் கிழுத்து ஒரு கை பார்த்துவிடலாம்! முன்பே அந்த இலுப்பைத் தோப்பு வாங்கும் விஷயத்திலும் இனாம்தார் நம்மை முந்திக் கொண்டு அவமானப் படுத்தியிருக்கிறார். விடக்கூடாது!'' என்று தூண்டிவிட்டார்.

மறுநாள் காலையில் வேலுத்தேவரின் ஆட்கள் மரத்திலேறி தங்கள் பகுதியில் சாய்ந்திருந்த பெரிய கிளை ஒன்றை வெட்டிக் கொண்டிருந்த போது, வயலில் வேலை செய்து கொண்டிருந்த இனாம்தார் முருகுத்தேவரின் ஆட்கள் வேலையை அப்படியே நிறுத்திவிட்டு மரத்தண்டை ஓடிச் சென்று ''கிளையை வெட்டக் கூடாது,'' என்று தடுக்க பெரிய வாக்குவாதம் ஏற்பட்டது.

இரு தரப்பினரும் ஒரே இனத்தவர். பொறுமைக்கும் நிதானத்திற்கும் எவரும் இவர்களை உதாரணத்திற்குக் கூடக் குறிப்பிடுவதில்லை. இப்படிப்பட்டவர்களிடையே வாக்குவாதம் வலுத்தால் அது எதில் போய் முடிய வேண்டுமோ அதிலேயே முடிந்தது; கலகம், குத்து, வெட்டு!

அந்தத் தரப்பில் இருவருக்கு மண்டைகள் பிளந்தன. ஒருவனுக்கு கை வெட்டுப்பட்டுத் தொங்கியது. மற்றவனுக்கு வாங்கிய அடியில் ஒரு கண் வெளியே வந்துவிட்டது!



இந்தத் தரப்பில் மூவருக்கு அறிவாள் வெட்டு. உயிருக்கு ஆபத்தில்லை என்றாலும் ஏராளமான இரத்தச் சேதம். இன்னொருவனுக்கு முழங்கால் சில்லு பெயர்ந்து போயிற்று. இரண்டொருவருக்கு காது, பல் போன்ற அவயவங்கள் காணவில்லை! இருதரப்பிலும் ஏராளமான பேருக்கு வெட்டுக்காயங்கள், கீறல்கள், ஊமை அடிகள்.

அவரவர் கிராமங்களில் கூட்டம் போட்டு அடுத்த கிராமத்துடன் ஒரு சம்பந்தமும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கட்டுப்பாடு செய்து கொண்டார்கள். அந்த ஊர் ஆள் இங்கு வந்தால் அடி வாங்கிக் கொண்டு போவான். இந்த ஊர் ஆள் அங்கு சென்றால் அடி வாங்கிக் கொண்டு வருவான்.

இரு தரப்பிலும் அக்கறையுள்ள பெரியவர்கள் சமரசம் செய்து வைக்க முயன்றார்கள். பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருந்த போது, குத்துக் காயம் பட்டிருந்த மிராசுதார்

படிப்பகம்

www.padippakam.com



ஜனநாயகத்தை நீ புரிந்து கொள்ள வேண்டுமானால் நூலகத்தில் பிளேட்டோவுடன் செலவிடும் நேரத்தைக் குறை. பேருந்தில் மக்களோடு பயணிக்கும் நேரத்தைக் கூட்டு.

*—சிமியோன் ஸ்ட்ரன்சி*

வேலுத்தேவரின் ஆள் ஒருவன் உரிய நேரத்தில் மருத்துவ உதவி கிடைக்காத காரணத்தினால் இறந்து போனான். சமரச முயற்சி தோல்வியில் முடிந்தது; வைராக்கியம் வளர்ந்தது.

மரம் யாருடையது என்கிற விஷயம் கடைசியில் கோர்ட்டுக்குப் போயிற்று. இருதரப்பாருக்கும் ஆள் பலத்திற்கோ பண வசதிக்கோ பஞ்சமில்லை. டவுன் வக்கீல்கள் இருவரும் ஆளுக்கு ஒரு பக்கமாக சட்டம் பேசி வழக்கின் தன்மையை வளர்த்து நீட்டினார்கள்.

ஜில்லா கோர்ட்டில் இரண்டரை ஆண்டுகள் வழக்கு தொடர்ந்து நடந்த பின் சமரசம் செய்ய முயன்ற கோர்ட்டாரின் ஏற்பாட்டை இருதரப்பினருமே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே வழக்கு பல விதங்களில் உருவம் மாற்றப்பட்டு சென்னை உயர்நீதி மன்றத்திற்கு வந்தது. இருதரப்பு வக்கீல்களும் சென்னையில் அந்தக் காலத்தில் புகழ் பெற்றிருந்த இரண்டு சீனியர் வக்கீல்களிடம் வழக்கை ஒப்படைத்துவிட்டு கறந்த வரையில் லாபம் என்று ஒதுங்கிக் கொண்டார்கள்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள்! இந்த வழக்கு முடிய ஒன்பது ஆண்டுகள் ஆயின!

இருதரப்பாரும் இதற்கென்று சாட்சி சம்பவங்களுடன் ஏதோ விழாவிற்குப் போகும் கோலத்துடன் திருநெல்வேலிப் பகுதியிலிருந்து சென்னைக்கு வந்து போவது வழக்கமாயிருந்தது.



இதனிடையே இருதரப்பாருக்கும் பல துன்பங்கள் நேர்ந்தன. ஏராளமான பொருட்செலவு. இனாம்தார் தாம் விரும்பி வாங்கிய தோப்பை ஈனக் கிரயத்திற்கு விற்க வேண்டியதாயிற்று. வேலுத்தேவரும் தமது நிலங்களில் சிலவற்றை விற்றார். பல திருமணங்கள் நின்று போயின. இனாம்தாருக்கு அகாலத்தில் திடீரென்று தலை நரைத்துப் போயிற்று. மிராசு வேலுத்தேவருக்கு வயிற்றில் ஏதோ கோளாறு ஏற்பட்டு ஆபரேஷன் நடந்தது. ஆனால் இருவருக்கும் வைராக்கியம் பட்டும் சற்றும் தளரவில்லை. கொலைச் சதி, கொடுந்துன்பம் விளைவித்தல் போன்ற வழக்குகளில் சம்பந்தப்பட்டிருந்த பலர் இந்த வழக்கு நடந்த பதினோரு ஆண்டுகளில் வயது காரணமாகவோ, வியாதியின் விளைவாகவோ இறந்து போனார்கள்.

மரம் சம்பந்தப்பட்ட

படிப்பகம்

www.padippakam.com

வழக்கை விசாரித்துக் கொண்டிருந்த இந்திய நீதிபதி மாற்றலாகிப் போனார். அவர் இடத்திற்குப் புதிதாக வந்த வெள்ளை நீதிபதி கடைசியாகத் தீர்ப்பு கூறினார்:

''மரத்தை எவரும் நட்டு வளர்க்கவில்லை. அது தானாகவே வளர்ந்ததுதான். இரு தரப்பாரின் நிலப் பத்திரங்களிலும் மரத்தைப் பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. குறிப்பிட்ட வரப்பும் அதிலிருக்கும் மரமும் பொதுவானவை. ஆகவே மரத்தை ஏலத்தில் விட்டு அதில் வரும் பணத்தை இரு தரப்பினருக்கும் சமமாகப் பகிர்ந்து கொடுக்க வேண்டும்!'' என்று.

இப்போதானால் அந்த மரம் சில ஆயிரம் ரூபாய்களுக்காவது விலை போயிருக்கும். ஆனால் அத்தக் காலத்தில் அது அறுபத்தைந்து ரூபாய்க்குத் தான் ஏலம் போயிற்று! ஏலக் கமிஷன் போக இரு தரப்பினருக்கும் தலா இருபத்தொன்பது ரூபாயும் எட்டணாவும் பகிர்ந்தளிக்கப் பட்டது.

வழக்கு முடிந்தது. ஆனால் இன்றளவும் ஊருக்கு ஊர் விரோதம் தீரவில்லை. இனாம்தாரும் மிராசுதாரும் காலமாகி வெகு காலத்திற்குப் பின்பும் காரணம் புரியாத விரோதம் இரு கிராமங்களுக்கிடையே நிலவுகிறது! ★

---

With best compliments from:

Offi: 554515
Resi: 849368

Shriram Shutters & Engineering Works

Mrs of: ROLLING SHUTTERS, ROLLING GRILLS, COLLAPSIBLE GATES.

68, Vaidhyanatha Mudali Street,
Tondiarpet, Madras-600081.

படிப்பகம்

www.padippakam.com

—இறுக்கம் தளர்த்திட

## பெண்ணுறுதி

○ எந்த ஒரு மனிதனும் பின்பற்ற முடியாத அஞ்சாத சாதனை ஒன்றை அறுபத்து மூன்று வயதான, போலந்து தேசத்தில் வளமான நிலங்களுக்கு சொந்தக்காரியான பெருமகள் ரோசா பிராணிக்கா நிகழ்த்தியுள்ளாள். 1843-ஆம் ஆண்டு இவள் ஜெர்மனி நாட்டில் வைத்தியப் பரிசோதனைகளுக்காகப் பல இடங்களுக்குச் சென்று வந்தாள். ஜெர்மனியில் ஒரு வைத்திய நிபுணர் அவளுடைய நோயின் கூறு மார்பகத்தில் உள்ள புற்று நோய் என்றும், உடனடியாக ஓர் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைத்தார். ஆனால், அப்பெருமகள் இதைத் தனது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்தி அவர்களைப் பீதியடையச் செய்ய விரும்பவில்லை. அந்த ஆண்டிலேயே அவள் ஸ்விட்சர்லாண்டு, பிரான்சு முதலிய நாடுகளுக்குச் சாமான்கள் வாங்க செல்லுங்கால், ஒரு மருத்துவ அறுவைக் கத்தி, அறுவை கூர் சிறு கத்தி மற்றும் அறுவை சிகிச்சைக்குரிய கருவிகளை ஒருமித்து வாங்கினால் எவர்க்கும் ஐயமேற்படக் கூடும் எனக்கருதி ஒவ்வொரு சாமானாக சேகரித்தாள். தேவையானவை அனைத்தையும் வாங்கிய பின்பு பாரிஸ் மாநகரில் ஓர் ஓட்டலில் அறை எடுத்துத் தங்கி, கதவைத் தாழிட்டுக் கொண்டு எவரும் பிரமிக்கத் தக்கதொரு புற்றுநோய் அறுவை சிகிச்சையைத் தனக்குத் தானே செய்து, புற்றுக் கட்டியை நீக்கி, அந்நோயினின்று குணமடைந்து, மேற்கொண்டு 19 ஆண்டுகள் நல்ல திடகாத்திரத்தோடு வாழ்ந்து வந்தாள்.

○ ஜெண்டா நாட்டினர், கார்சிகா தீவில் பிறக்கும் குழந்தைகளைப் பறித்துக்கொண்டு அடிமையாக்கி வந்தனர். இதற்கு மாற்றாக, கார்சிகா தீவிலுள்ள பெண்கள் குழந்தைகளின் அடிமைத்தனம் நாட்டில் நீங்கும்வரை தனித்தே வாழ்வது என்ற ஒரு பிரதிக்ஞையை எடுத்துக் கொண்டனர். ஜெண்டா நாட்டைச் சேர்ந்தவர்கள் கார்சிகா தீவிலிருந்து 30 ஆண்டுகளுக்குப் பின்பு துரத்தியடிக்கப்பட்டனர். அதுவரை அந்நாட்டில் பெண்கள் தங்களின் பிரதிக்ஞையை மீறவில்லை.

## நிலாவைத் தொடலாம்

○ நிலாவைச் சென்றடைய இதோ ஓர் எளிய வழி. ஒரு சாதாரண எழுதுதாளை எடுத்துக் கொள்ளுங்கள். அதை இரண்டாய் மடியுங்கள். மடித்ததை மீண்டும் இரண்டாய் மடியுங்கள். இப்படியே 32 முறை மடித்துக் கொண்டே போங்கள். தாளின் கனம் நிலாவை இடிக்கும். நீங்கள் நிலாவைத் தொட்டுவிட இதை விட எளிய வழி ஏதும் இல்லை.

படிப்பகம்

www.padippakam.com

விவாத சிந்தனை

# தமிழுண்ணிகள்

—சென்ற இதழ் தொடர்ச்சி

நண்பர் சற்று மௌனமானார். தம்மைத் தாமே தளர்த்திக் கொள்பவர் போல, சில விநாடிகள் யோசித்தவராய், மீண்டும் தம் கூர்மைக் குரலில் தொடங்கினார்:

''நீங்கள் இதைச் சொன்னதால் எனக்கு இன்னொரு வாதம் நினைவுக்கு வருகிறது. சாதி அடிப்படையில் பயிலகத்தி லும் பணியிடத்திலும் இட ஒதுக்கீடு அமுல் படுத்தப் படுவதற்கு முகஞ்சுளிக்கிறவர்கள் முன் வைக்கும் வாதம் அது. இட ஒதுக் கீட்டால் திறமை புறக்கணிக்கப்படுகிறது; செயல்பாடு நீர்த் துப் போகிறது என்று சொல்கிறார்கள். உண்மையாகவும் இருக்கலாம்.

''ஆனால், இந்தச் சமூகத்தில் இன்று ஆணிவேர் வரை பற் றிப் பரவியிருப்பது என்ன? ஊழல்.. ஊழல்... பல்லாயிரங் கோடி ஊழல் என்பதெல்லாம் இன்று சர்வ சாதாரணம். இது முழுக்க முழுக்க திறமைசாலிகளின் செயலூக்கமான சாதனை யல்லவா! இதில் சாதிக்கிளைத்தவனின் பங்கு எத்தனை சதவீ தமாம்? இந்தத் திறமையான கொள்ளைக்காரர்கள் என்ன கொழுப்பாய், பிற்பட்டவன் என்றும் தாழ்த்தப்பட்டவன் என்றும் பெரும்பாலான மக்களைப் புறந்தள்ள எத்தனிக்கி றார்கள். தங்கள் குற்றம் என்று ஏதும் இன்றி, பாமரத்தனத் தையே பலவீனமாகப் பூண்டிருந்தவர்களைப் பிற்பட்டவர்க ளாகவும் தாழ்த்தப் பட்டவர்களாகவும், தங்கள் வக்கிர புத்தி யையே ஆயுதமாகக்கொண்டு பல நூறு ஆண்டுகளாக அடிமைப் படுத்தி வைத்திருந்தவர்கள், இன்று அம்மக்களுக்களிக்கும் முன் னுரிமையும் ஒதுக்கீடும் தாங்கள் செய்தே தீர்க்க வேண்டிய பாவ விமோசனம் என்பதை மறந்துவிடுகிறார்கள்.''

நான் இடைமறித்துச் சொன்னேன்:

''எத்திப் பிழைப்பதையே புத்தியாகக் கொண்டுவிட்டால் இப்படித்தான் ஆகும். எனக்குத் தெரிந்தவரை சமூகத்தில் பல வீனமான பிரிவைச் சேர்ந்தவர்கள் எழுத்தறிவுக் கல்வியில் பின் தங்கி இருந்தாலும், நடைமுறை தர்க்க ஞானத்தில் மிகவும் கூர் மையானவர்கள். காரணம், மனிதர்களின் மிருக பலம் அவர் ளை மிரட்டும்போது, நியாய உணர்வையும் மனித மேன்மை யையும் தொட்டுக் காட்டி— தட்டி யெழுப்பி, தங்களைக் காத் துக் கொள்ள அவர்கள் முயல்வதுதான். விதுரன் இருந்தானே, அவனைப் போல ஞானவான் அந்தப் பாரதக் கும்பலில் எவன் இருந்தான்?''

படிப்பகம்

www.padippakam.com

''நண்பரே, இந்தச் சீர்குலைவுகளுக்கெல்லாம் மூல காரணம் மனிதப் பிரக்ஞையற்ற கல்வி முறைதான். உலகம் பூராவும் இதே கதைதான். எனினும் அங்கே இன்னும் கல்வித்துறை அறிஞர்களை கௌரவிக்கிறது. இங்கு அரசியல்வாதிக்காகக் கைகட்டி நிற்கிறது. நீங்கள் இதை யோசித்ததுண்டா? ஒரு மந்திரியை மட்டம் தட்ட வேண்டுமானால், அவனுக்கு ஒதுக்கும் துறை எது தெரியுமா? கல்வித்துறை. என்ன அறிவீனம், பார்த்தீர்களா?''

''நீங்கள் சொல்வது மைய அரசில் வேண்டுமானால் சரியாயிருக்கலாம். மானில அரசுகளில் கல்வித்துறை ஒரு கொழுத்த பணச் சுரங்கமாகவல்லவா மாறியிருக்கிறது. எனக்குப் படுவது இதுதான். முதலில் கல்விமுறை மனிதப் பிரக்ஞையோடு வடிவமைக்கப்பட வேண்டும். ஓர் அரசின் முழு முதல் கடமை எல்லோருக்கும் கல்வி வழங்குவதுதான். கற்கும் பருவத்தில் பிள்ளைகள் அனைவரும் அரசின் சொத்தாக ஸ்வீகரிக்கப்பட வேண்டும். தொடர்ந்த கண்காணிப்பில் யாருக்கு என்ன வருகிறதோ, அதைக் கற்க முழுமையாக வாய்ப்பளிக்க வேண்டும். அத்துடன் அரசின் கடமை முடிந்துவிடுகிறது மேற்கொண்டு வெறும் கண்காணிப்புப் பணியோடு நின்றுவிட வேண்டும். அவரவர் தகுதிக் கேற்ப உதவியும் பதவியும் பெற வழி காட்டலாம். கடன் பெற, தொழில் துவங்க வசதி செய்யலாம். சமவாய்ப்பு முறையில் நெறிப்படுத்தப்பட்ட விதிமுறைகள் பராமரிக்கப்படுவதற்கொன்றே அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். சம நீதியும் சமவாய்ப்பும் உறுதி செய்யப்படுவதே நடைமுறை சாசனமாக வேண்டும். ஆனால் இங்கே நடப்பதென்ன? அரசு வியாபாரம் செய்கிறது. வேலை வினியோகம் செய்கிறது. இந்த முறையில் அரசு எந்திரம் இயங்குவது என்பது, இயக்குகிறவர்கள் மேல்வருமானம் கறப்பதற்குத்தான் என்றாகிவிடுகிறது. தெருவைச் சுத்தம் செய்வதுகூடத் தில்லுமுல்லுகள் செய்து வரும்படி காணத்தான். ஆகவே, மேல்வருமானத்தைக் குறிவைத்துத்தான் அரசு இயக்கப்படுகிறது,'' என்றேன்.

நண்பர் சற்றுப் பொறுத்துச் சொன்னார்:

''எதிர் வீட்டுப் பெண் இடைநிலை ஆசிரியைப் பயிற்சிப் படிப்பில் சேர, 25 ஆயிரம் கொடுத்து இடம் பிடித்துள்ளாள். இவள் பயிற்சி முடிந்து வெளியே வந்ததும் வேலை தேட வேண்டும். இதற்கான இப்போதைய விலை 50 ஆயிரம் ரூபாய். இடையில் வேலைக்காக ஐந்தோ, பத்தோ ஆண்டுகள் காத்திருத்தல். இதற்கிடையே கல்யாணம், சீதனம், மண்ணெண்ணெய்க் குளியல். எல்லாவற்றையும் மீறி வேலை கிடைத்தால் இவள் பெறப் போகும் சம்பளம் இவளுக்காகப் பட்ட கடன் 75 ஆயிரத்திற்கு வட்டியாகுமா? இதில் வாழ்க்கை எங்கே முளைக்கிறது? இதைப் பார்த்துக் கொண்டிருக்க ஒரு அரசா? சுரணை வேண்டாமா? இல்லையே. இப்படிப்பட்ட அரசும் கல்வித் துறையுமா மொழி பற்றி அக்கறை எடுத்துக் கொள்ளப் போகிறது?''

நண்பரும் நானும் நடைமுறை வக்கிரங்கள் பற்றி ஒத்த கண்ணோட்டம் கொண்டவர்களாய்ப் போனது விவாதத்தைக் குவியப் புள்ளிக்குக் கொண்டு வந்துவிட்டது. எனினும் தமிழாசிரி

படிப்பகம்

www.padippakam.com

யர்களின் தரம், செயல், எதிர்பார்ப்பு பற்றிய என் கேள்விகள் இன்னமும் விடைக்காகக் காத்திருந்தன. இதில் ஒரு நிறைவை எட்ட முடியவில்லை எனினும் நண்பரின் தீர்க்கமான வெளிப் பார்வையும் தமிழாசிரியர்களின் கையறு நிலை பற்றிய விளக்க மும் வெகு நியாயமாயும் ஆழமாயும் இருப்பதுணர்ந்து என் னுள் பரவசம் பொங்கியது.

நான் சொன்னேன்:

''தமிழாசிரியர்கள் ஜடமாகப் பல சீர்கேடுகளைப் பார்த் துக் கொண்டிருக்கிறார்கள் என்று எனக்கொரு வருத்தம். நீங் கள் சிந்திக்கிற விஷயங்களையெல்லாம் எல்லாரும் சிந்தித்தால், அதுவே ஓர் உதயத்திற்கு வழி வகுக்கும். நீங்கள் சொன்ன மொழியின் முக்கியத்துவம் பற்றிய வலுவான காரணங்களுக் காகவே மொழியாசிரியர்கள் இயக்கம் நடத்தலாம். அந்த இயக் கம் இடையறாமல், வாழ்வதற்கான சுவாசம்போல் தொடர்ந்து கொண்டிருக்க வழி காணவேண்டும்.''

''வேண்டும்தான். ஆனால் நடைமுறையில் மொழியாசிரியர் கள் மட்டும் தனித்து நின்று அதிகம் சாதித்துவிட முடியாது. மொழியின் மீது ஆர்வம் கொண்ட எல்லாரும் ஒருங்கிணைந் தால் அரசியல் கலக்காத சமூக இயக்கமாகவே இதைச் சாதிக்க லாம். அனைத்துக்கும் மேலாக தமிழ்ச் சமுதாயத்தில் இன்று புரையோடிப் போயிருக்கும் ஒரு சூனிய வாதப் போக்கைத் துடைத்தெறிவது முதல் பணியாக இருக்க வேண்டும்,'' என் றார் நண்பர்.

''எதைச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''பயிற்றுமொழி பற்றிய கண்ணோட்டத்தைத்தான் சொல் கிறேன். 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அதற்கொரு குணமுண்டு' என்று மார்தட்டினார் நாமக்கல் கவிஞர். அவர் சொன்ன குணமெல்லாம் சோடையாகிப் போய், இப்போது சூனியவாதம் பேசி அன்னிய மொழிக்குச் சேவகம் செய்வதே அவன் குணமாக வளர்ந்துள்ளது கண்டு வெட்கித் தலை குனிய வேண்டியுள்ளது. யோசித்தால் இதைவிடக் கேவலம் என்ன இருக்கமுடியும்? படித்தவன் படிக்காதவன் என்ற பாகுபாடின்றி, தமிழனாய்ப் பிறந்த எவனும் தன் பிள்ளை ஆங்கிலவழிக் கல்வி பெறவே ஆசைப்படுகிறான். அதற்கு அவன் சொல்லும் கார ணம், 'தமிழில் படித்தால் வேலை கிடைக்காது. ஆங்கிலத்தில் படித்தால் இந்தியா முழுவதும் வேலை தேடலாம்; கிடைக்கா விட்டால் இந்தியாவுக்கு வெளியேயும் தேடலாம்' என்பதுதான்.

''ஒரு வேலையை இந்த உலகம் முழுதும் தேடத் தன் பிள் ளையைத் தயார்ப் படுத்துகிறவன், முதலில் அவனை இந்த மண்ணுக்கு அன்னியனாக்குகிறான். இந்தத் தேசத் துரோகத் திற்கு இங்கே தண்டனையில்லை, பார்த்தீர்களா? 'பிழைக்கத் தெரிந்தவன்; புத்திசாலி' என்று அவனைப் பாராட்டுவதற்கு யாரும் கூசவில்லை, பார்த்தீர்களா? ஒரு கவளம் சோற்றுக்காக இந்த மண்ணைப் புறக்கணிக்கிறவன் வேறென்னதான் செய்ய மாட்டான்! இவர்களெல்லாம் தமிழ் நாட்டை என்னவென்று நினைக்கிறார்கள். பாலைவனமாகவா? ஆளரவமற்ற, அரசு முறையற்ற பிரதேசமாகவா?

படிப்பகம்

www.padippakam.com

''பிறந்து, வாய் திறந்ததிலிருந்து, மனித வெளிப்பாட்டின் அடித்தளம் எந்தத் தாய் வழி நேர்ந்ததோ, அந்த மொழியிலேயே கற்கும் போது மொழியானது பிரயத்தனமில்லாத சுவாசமாக இழையோட, அறிவைச் செழுமைப் படுத்துகிறது கல்வி. அவனுடைய புத்தி புதியன படைக்கச் சித்தமாகிறது.

''அல்லாமல், பள்ளிப் பருவத்தில் அன்னிய மொழியைப் புகுத்தினால் கல்வி என்பதே அம் மொழியைக் கற்கும் வேலையாகி விடாதோ. பழக்கத்தால் எவ்வளவுதான் அன்னியோன்னியம் வளர்ந்துவிட்டாலும் அவனும் அந்த மொழியும் எப்போதும் அன்னியர்கள்தாம். படைப்பாற்றல் சிந்தனையாக வளர வேண்டிய அறிவு பிற மொழியில் பாண்டித்தியம் பெறுவதற்கான விரயமாகக் கரைவதுதான் சாத்தியமாகும். இந்த விரயத்தையும் மீறி, எங்கோ ஒருவன் படைப்பாளியாகக் கூடும். அதிமேதைமையை மரபணுக்களாகவே வளர்த்துக் கொண்ட இந்திய மூளை அன்னிய மொழியில் பாண்டித்தியம் பெறுவதிலேயே தளர்ந்து போகிறது.

''இவர்கள் வாதத்தை ஒப்புக்கு ஏற்றுக் கொண்டாலும், ஐந்து கோடி தமிழர்களில் எத்தனை பேர் தமிழிகத்திற்கு வெளியே வேலை தேடிக் கொண்டவர்கள்? ஐந்து லட்சம் இருப்பார்களா? இந்த ஐந்து லட்சத்தை நம்பி உண்டைச் சென்றவர்கள் ஒரு இருபத்தைந்து லட்சமே இருக்கலாம், அது வேறு கணக்கு. ஆக, வெளியே வேலை தேடிக் கொள்பவர்கள் மொத்த மக்களில் அதிகப்பட்சமாக ஒரு சதவீதம் பேர். இந்த ஒரு சதவீதத்திற்காகவா தமிழ் மக்கள் அனைவரையும் அன்னிய மொழிக் காற்றைச் சுவாசிக்கச் செய்து மூச்சுத் திணற வைப்பது?

''இது ஒரு சூனியப் பிரமையல்லவா? இந்தப் பிரமையைத் 'தமிழ் வாழ்க' முழக்கம் துடைத்தெறியாத போது, எல்லாம் வேஷம், வெட்கக் கேடான வேஷம் என்றாகி விடவில்லையா? இந்தப் பிரமை முதலில் களையப்பட வேண்டும். இந்த மண்ணில் உண்டு உறங்கும் ஒவ்வொருவனுடைய கடமையும் அதுவாக வேண்டும்.''

நண்பர் சொன்னது முற்றும் உண்மை. இந்த நோய்தான் அடிப்படையில் தமிழனை அடிபண்ணில்லாதவனாக அரித்துக் கொண்டு வருவதாகப் படுகிறது.

''இந்தக் கோபம் மிகவும் நியாயமானது. தமிழனாய் உணரும் ஒவ்வொருவனும் இதைத் தார்மீகக் கோபமாய்க் கொள்ள வேண்டும். மொழியாசிரியர்களிடத்தில் இது ஓர் ஊழிக் கோபமாகவே வெடித்தால்தான், தமிழர்கள் தம்மை உணர்வதும் தமிழராய் இயங்குவதும் இப்போது சாத்தியமாகும்,'' என்றேன்.

''முறையற்றதைச் சபிக்கவும் துடைக்கவும் வல்லமை பெற்றதல்லவா ஊழிக்கோபம்?'' என்றார் நண்பர்.

''சரியாகச் சொன்னீர்கள். ஒரு மனிதனின் கோபமே அவ்வளவு வல்லமையுடையதென்றால், அதை வெளிப்படுத்தும் மனிதன் எவ்வளவு வல்லமையுடையவனாய் இருக்க வேண்டும்?''

''நாங்கள்— தமிழாசிரியர்கள் அப்படி இல்லைதான், நண்பரே; மொழியறிவிலும் சரி, இயக்க பூர்வமான கட்டமைப்பி

படிப்பகம்

www.padippakam.com

லும் சரி. உண்மைதான், நண்பரே. இந்த உண்மைக்குக் காரணம், தமிழாசிரியர்கள் நினைவு படுத்திக் கொள்ளத் தவறிய ஓர் அற்ப மறதிதான் நான் தமிழைக் கற்பிக்கும் ஆசிரியனாக என்னை மேடையேற்றிப் பார்த்துக் கொண்டேனே தவிர, தமிழைக் கற்க வேண்டிய மாணவனாக என்னைத் தரிசித்துக் கொள்ள மறந்து போனேன். என் வல்லமை, ஞானத்தால் செழுமையுறுவதற்குப் பதிலாக, என் கோடம் இயலாமையால் விழுங்கப்படுகிறது. ஊழித்தீயாய்ப் பெருக வேண்டிய கோபம், உடையவனாலேயே விழுங்கப்படுவது கொடுமை,'' என்றார் நண்பர்.

''என்னை எப்போதும் உறுத்திக் கொண்டிருந்த விஷயம் இதுதான், நண்பரே. இன்று உங்கள் தோளுக்கு மாற்றிவிட்டேன். உங்களை—மொழியாசிரியர்களை நம்பிக்கையோடு பின்பற்ற வருகின்ற ஒரு தொண்டனை, பரிகாசமோ அல்லது பரிதாபமோ தொனிக்க விமர்சிக்கிறவனாய் மாற்றி விடுதல் ஒரு பாவமல்லவா? இந்தப் பாவத்திலிருந்து தமிழாசிரியர்கள் தங்களை மீட்டுக் கொள்ள வேண்டும்.

''மொழி இயக்கம் காண, முதலில் தமிழாசிரியர்கள் எல்லாரும் ஒருங்கிணைவதும், சில நெறி முறைகளை வகுத்துக் கொண்டு திட்டமிடுவதன் மூலம் உங்கள் மரியாதையை உயர்த்திக் கொள்வதும், கேள்விக்கப்பாற்பட்ட உயரத்தில் நின்று கொண்டு மற்றவர்களை ஒருங்கிணைக்கத் தூண்டுவதும் முதல் தேவையாகிறது. நாம் என்னவாகிறோம் என்பதைவிட என்னவாக முயல்கிறோம் என்பது முக்கியம் இல்லையா? இந்த விஷயங்களில் தமிழாசிரியர்கள் கருத்தொற்றுமை கொண்டுவிட்டால், அன்றைக்கே தமிழ் தன் பரப்பையும் வீச்சையும் நிச்சயப்படுத்திக் கொள்ளும்,'' என்றேன்.

அப்போது 'குமானி' எங்களுக்குத் தேனீர் கொண்டு வந்தான். அவனை ஆசையோடு தூக்கி என் மடியில் அமர்த்திக் கொண்டேன்.

''உன் பேர் என்ன?'' என்று கேட்டேன்.

''வெற்றிப் பொருநன்,'' என்றான் திருத்தமாக.

''அடடே! வீட்டில வேற பேர்லே கூப்பிடறாங்க?''

''ஆமாம். குமானி,'' என்று சொல்லி 'பாவம் அப்பா' என்பது போல நண்பரைப் பார்த்துச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் அப்பாவுக்கென்று கருணை மிளிர்ந்தது.

நாங்கள் தேனீர் அருந்தியதும் கிண்ணங்களை எடுத்துக் கொண்டு போனான்.

''இந்தப் பிள்ளை உங்களை எவ்வளவு தோழமையோடு பார்க்கிறான்!''

நண்பரின் முகத்தில் அடக்கமான பெருமிதம் தவழ்ந்தது. ''இவன் நம்மை அதிகமாக யோசிக்க வைத்துவிட்டான், அல்லவா?'' என்றார்.

''அவன் குழந்தைதான் என்றாலும் ஒரு தோழனைப் போல நம்மை வழி நடத்தியிருக்கிறான்,'' என்றேன்.

''சரி. நம் பேச்சுக்குத் திரும்புவோம். மொழியாசிரியர்களி

படிப்பகம்

www.padippakam.com

டம் உங்கள் எதிர்பார்ப்புகள் என்ன? என்ன செய்யலாம்?'' என்று நண்பர் கேட்டார்.

நான் யோசிக்க நேர்ந்த விஷயங்களைச் சொன்னேன்:

''முதலில் மொழியாசிரியர்கள், மொழி பற்றிய தீர்மான மான, வகைப்படுத்தப்பட்ட சில அடிப்படை அறிவைப் பெற்றிருத்தலை அவசியமாக்க வேண்டும். மலிவான எழுத்துப் பிழைகளும், வாக்கியப் பிழைகளும் தலை காட்டாதபடி அடிப்படைத் தெளிவை அவர்கள் பெறவேண்டும்.

''நவீன தமிழ் பற்றிய பொதுக் கண்ணோட்டமும், சொல்லாட்சியும், வீச்சும் பற்றி ஒரு தெளிவு வேண்டும் சொல்லப் போனால் அதனைச் சீரமைக்கவும் வழிப்படுத்தவும் அவர்கள் பங்காற்ற வேண்டும். புதிய இலக்கியம் பற்றிய உறைப்பும், வளர்ச்சி பற்றிய கிரகிப்பும் அவசியமாக்கப்பட வேண்டும்.

''இதன் அடிப்படையில் நவீன தமிழ் இலக்கணமும், வளர் தமிழ் சொல்லாட்சித் தொகுப்பும் எழுதப்பட வேண்டும். பிற மொழியாளர்கள் தமிழைக் கற்றுத் தேற இந்த இலக்கண நூல் துணை செய்ய வேண்டும். வளர்தமிழ் சொல்லாட்சித் தொகுப்பு குறிப்பிட்ட பருவம் தோறும் மறு ஆய்வுக் குட்படுத்தப்பட்டுப் புதுப்பிக்கப்பட வேண்டும்.

''அறிவியல் யுகத்தில் மொழியானது வெறும் ஊடகமாகச் சுருங்கிக் கொண்டு வருகிறது. இந்நிலையில் மொழியின் நேசம் நம்மைப் பண்படுத்துகிறது என்பது தெளிவுபடப் போதிக்கப்பட வேண்டும்.

''எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு பொதுக் கருத்தை எட்ட வேண்டும். மொழியானது நேசத்திற்குரியதே. ஆனால் நாம் எழுத்தையல்லவா மொழியைவிட அதிகமாக நேசித்துக் கொண்டிருக்கிறோம்? இன்று நாம் எழுதும் எழுத்து வள்ளுவன் எழுதிய குறியீடா? இல்லை. கால்டுவெல் அறிமுகப்படுத்திய குறியீடுகள், அச்சுக் கலை தோன்றிய காலத்தில் அவர் சீர்திருத்தம் நிலைப்படுத்தப்பட்டது. இன்று கணிப்பொறி யுகத்துக் கேற்ற மற்றுமொரு சீர்திருத்தம் கொண்டு வரத்தானே வேண்டும். ஒரு காலத்தில் தமிழன் பயன்படுத்திய வட்டெழுத்தை மாற்றியதே, பிற மொழிகளுடனான தமிழின் இணக்கத்தைக் கெடுத்து விட்டது என்று மொழி அறிஞர்கள் சொல்கின்றனர். ஆகவே, எழுத்துச் சீர்திருத்தம் செய்யும்போது, மொழி மரபும், சகோதர மொழியுறவும், 'புதியன புகுதலுக்கான' மேல் வளர்ச்சியும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

''ஒரு காலத்தில் மொழிக் கலப்பினை— தற்பவம், தற்சமம் என்ற எல்லை கட்டி அனுமதித்தோம். அதையும் மீறி வட மொழியின் நெருக்கத்தை அங்கீகரிக்கவென்றே ஜ, ஸ, ஷ, க்ஷ, ஹ ஆகிய எழுத்துகளை உருவாக்கிக் கொண்டோம். மொழிக் கலப்பு முன்னர் இந்த எல்லைக்குள்ளேயே இருந்தது. ஆனால் இன்று இதையெல்லாம் மீறி, புது வெள்ளப் பெருக்கு போல் கரை புரண்டு வருகிறது. அதற்கேற்ற மாற்றங்களையும நாம் வகைப்படுத்த வேண்டும். ஆகவே, அன்னிய மொழிகளின் ஒலி பேதங்களையும் குறிக்கும் படியான, மரபொட்டிய மாற்

படிப்பகம்

www.padippakam.com

றங்களை எழுத்துச் சீர்திருத்தம் உள்ளடக்க வேண்டும்.

''அனைத்துலக மொழிகளின் தாக்கமும் இப்போது ஒவ்வொரு மொழியிலும் உணரப்படுகிறது. தமிழ் மட்டும் அதற்கு விதிவிலக்காய் இருக்க முடியாது. ஆகவே பிறமொழித் தாக்கம் பற்றிய தெளிவுடன்— மொழி பெயர்ப்பு, ஒலி பெயர்ப்பு ஆகியவற்றின் வரையறைகளை நிர்ணயிக்க வேண்டும். தமிழில் சொற்களஞ்சியம் இந்த வகையில் உருவாக வேண்டும்.

''வட்டார வழக்குகளின் வேற்றுமைகளைக் குறைப்பதும் இணைப்பதும், பொதுத் தன்மையான மொழியுருவை வகுப்பதும் அவசியமாகிறது. வட்டார மொழி வழக்குகளை ஒருங்கிணைக்கத் தவறினால் சில நூற்றாண்டுகளில் மொழிச் சிதைவு ஏற்பட்டு, புது மொழிகள் தோன்ற ஏதுவாகும். இன்றுகூட குமரித் தமிழும் கோவைத் தமிழும் சென்னைத் தமிழோடு முரண்பட்டு, மொழித் தூய்மை காக்க முனைந்தால் என்னாகும்? சென்னையில் கூவம் மட்டுமா நாறுகிறது? மொழியின் முடை நாற்றமும்தான்.

''அனைத்துக்கும் மேலாக, தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழ் ஒன்றுதான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்பதில் வைராக்கியம் இருக்க வேண்டும். தாய்மொழி மூலம்தான் கல்வி என்பதில் வைராக்கியம் கொண்டுவிட்டால் மொழி பற்றிய எல்லா சிக்கல்களுக்கும் விடிவுகாலம் பிறந்தே தீரும்.

''மொழி என்னும் அளவில் எட்டாம் வகுப்புக்கு மேல் பிற மொழிகளைக் கற்கும் வாய்ப்பை அளித்திட வேண்டும்.

''இந்த மாற்றம், திருத்தம், வளர்ச்சி, வளம் அனைத்தும் மொழியாசிரியர்களின் முன்னிலையில் நடைபெற வேண்டும். காரணம் அவற்றைச் செயல் படுத்துகிறவர்கள் அவர்களாக இருக்க வேண்டும். அதனால்தான் இவற்றை அவர்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாய்ச் சொல்கிறேன்.''

நண்பர் என் கைகளைப் பற்றிக் கொண்டு, ''நன்றி, நண்பரே. ஒரு மாபெரும் பணியை வெறும் கோட்டுச் சித்திரமாய்ச் சுட்டி விட்டீர்கள். ஆனால், இவற்றைப் புறக்கணிக்க முடியாது என்பதை நாங்கள் உணர்வோம்,'' என்றார்.

''கடைசியாக ஒன்று சொல்ல வேண்டும்,'' என்றேன்.

''சொல்லுங்கள்,'' என்றார்.

''வகுப்பறைகளில் நீங்கள் தமிழாசிரியராய் இருப்பது தொழில் ரீதியாகத்தான் என்றாலும், உங்கள் போதனை ஒரு சமூகப் பிரக்ஞையோடு இருக்க வேண்டியது இன்றியாததல்லவா? மொழி கற்பித்தல் என்பது பெரும்பாலும் இலக்கியம் கற்பித்தலாகத்தான் இருக்கிறது. தமிழ்தான் என்பதால் பிள்

படிப்பகம்

www.padippakam.com

ளைகள் வெளியே விற்கும் உரை நூல்களைப் படித்தே புரிந்து கொள்ளலாம் என்றொரு பெரும் போக்கு காணப்படுகிறது. அப்போக்குக்கு உங்களின் பங்கு என்ன என்பதும் உணரப்பட வேண்டாமா? இலக்கியத்தை உயர்வாய் விளக்குவதும், பிற மொழி இலக்கியங்களோடு ஒப்பு நோக்கி நயப்பதும் பிள்ளைகள் மனத்தில் உங்களை உயர்த்திக் கொள்வதாகாதா? தேடித் தேடி, படித்துப் படித்து, ரசித்து ரசித்து மகிழும் ஒருவரால் தான் இலக்கியத்தை வாழ்க்கைத் தத்துவமாக விளக்கிக் காட்ட முடியும். அந்த வகையில் உங்களை உயர்த்திக் கொள்வது பெருமையான செயலாகும்.

''ஆங்கிலம் பிள்ளைகளுக்கு அன்னிய மொழி. அதனால் புரியவில்லை ஆகவே அச்சம் வருகிறது. கூடவே அடக்கமும் வருகிறது. ஆனால், தாய்மொழியில் அச்சம் சுத்தமாய் இல்லை. அதனால் சற்று அடங்காமை தலை காட்டுகிறது. கற்பதற்கு அச்சம் கூடாது; ஆர்வம்தான் வேண்டும். அந்த ஆர்வத்தை வளர்க்கும் பொறுப்பு உங்களுடையதல்லவா? உங்கள் கற்பித்தல்— 'தமிழில் இவ்வளவு இருக்கிறதா?' என்று அதிசயக்கும்படியாய் அமைந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! நீங்கள் சம்பிரதாயமான சங்க காலத் தமிழில் இருந்து சமகாலத் தமிழ் வரை வந்து, 'மொழி எப்படி பண்பை வளர்க்கிறது, இலக்கியம் எப்படி மேன்மையைச் சுட்டுகிறது, கலையும் கலாச்சாரமும் எப்படி மொழியில் பரிணமிக்கிறது— இவ்வகையில் தமிழ் எப்படி முழுமை பெற்று விளங்குகிறது' என்பதையெல்லாம் கற்பித்தால், தமிழ் வகுப்பு பூஜைக்குப் பூக்கொய்யும் நந்தவனமாக மணம் வீசாதோ? 'கற்பதன் அர்த்தம் இங்கேதான் கண் திறக்கிறது' என்று மாணவன் பரவசம் கொண்டுவிட்டால், தமிழின் பால் அவன் உயிர் வளர்க்க மாட்டானா? பிழைப்புக்காக அவன் எதைத் தேர்ந்தாலும், எந்த மொழிக் கதம்பத்தில் விழுந்து பூசிக் கொண்டாலும் சரி, உள்ளார்ந்த மனோ தர்மத்தில் அவன் தமிழனாகவே இருக்க மாட்டானா, சொல்லுங்கள்?

''தமிழ் நமக்கு உயிர் வார்க்கும் உணவாகலாம். ஆனால், நாம் தமிழுக்கு உண்ணிகளாகலாமோ.''

கவிதாசரண்

நிறைவு.

படிப்பகம்

www.padippakam.com

# பதில்



கதையின் இறுதிப் பகுதியை யோசித்து யோசித்து எழுதிக் கொண்டிருந்தேன். இப்படித்தான் சமயங்களில் கதையை ஆரம்பிக்கும் போதும் திணறிக் கொண்டிருப்பேன். ஆரம்பித்து விட்டால் போதும், மளமளவென எழுதித் தள்ளிவிட்டு, இறுதிப் பகுதியிலும் திணறிக் கொண்டிருப்பேன். திணறுகிறேன் என்று கூடச் சொல்ல முடியாது. கதையின் ஆரம்பமும், முடிவும் நன்றாக இருக்க வேண்டும் என்பதில் எனக்குள்ள கவனம் அது. ஆகவேதான் இப்பொழுதும் கவனமாக இருக்கிறேன்.

கவனத்தோடு எழுதிக் கொண்டிருக்கையில் என் தங்கை மெதுவாக அருகில் வந்து நின்றாள். நின்றதும், சுத்தமாக என் கவனம் முழுதும் கழன்றுபோய், எழுதுவதை நிறுத்தி, வெறும் ஆளாக அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

வந்தவள் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு ஒரு சிறு தயக்கத்தோடு, ''இத படி,'' என்று மடிக்கப்பட்டிருந்த ஒரு சிறிய தாளை நீட்டியவள் முகத்தில் லேசான சோகம் தென்பட்டது. நான் எழுதிய தாள் பறக்காமல் இருக்க, பேனாவை அதன்மீது வைத்தேன். தங்கை கொடுத்த காகிதத்தைப் பிரிக்கு முன் அவளை ஒருமுறை பார்த்து, ''என்ன?'' என்று கேட்டேன். இதற்குமுன் அவள் இது மாதிரி எப்பொழுதுமே நின்றதில்லை என்பதே காரணம். ''படி,'' என்றவள் என்னிடம் அக்கடிதம் பற்றிய விமர்சனத்திற்காகக் காத்திருப்பதாக உணர்ந்து, புன்னகைத்தபடியே அந்தக் காகிதத்தைப் பிரித்தேன்.

'எழுத்து அற்புதமா இருக்கு' என்று மனசுக்குள் சொல்லிக் கொண்டேன். முதல் வரியைப் படித்ததும் நிமிர்ந்து தங்கையைப் பார்த்தேன். அவள் தர்மசங்கடமாகப் புன்னகைத்தாள். நான் அப்படிப் பார்த்திருக்கக் கூடாதுதான். பாவம் அவள்.

• என் தங்கையின் பெயருக்கு முன்னால் அழகான காதல் வார்த்தை ஒன்று எழுதியிருந்ததால் அப்படிச் செய்துவிட்டேன். அது காதல் கடிதம். என் அன்பான தங்கைக்கு யாரோ எழுதியுள்ள காதல் கடிதம் என்பதை அந்த முதல் வார்த்தையிலேயே தெரிந்து கொண்டேன். அதன் பிறகு நிமிர்ந்து பார்க்காமலேயே படித்து முடித்ததும் கடகடவென வாய்விட்டுச் சிரித்தேன். என் தங்கை இதைக் கொஞ்சம் கூட எதிர்பார்த்திருக்க மாட்டாள். அவன் மீதான கோபத்தை மட்டுமோ அல்லது என்னிடமிருந்து ஆறுதலையோ எதிர்பார்த்திருப்பாள். எனது சிரிப்பு அவள் எதிர்பார்ப்பை பொடிப்பொடியாக நொறுக்கிவிட்டது.

**முத்துவடுகு**

''மொகரையைப் பாரு. நான் எவ்வளவு சீரியஸா

படிப்பகம்

www.padippakam.com



உண்மை மனிதனைப் பெரிது படுத்துவதில்லை; மனிதன் தான் உண்மையைப் பெரிது படுத்துகிறான்.

—கான்ஃப்யூசியஸ்

கொடுத்துப் படிக்கச் சொல்றேன். நீ என்னடான்னா சிரிக்கிறே!'' கொஞ்சம் கோபம் கலந்து பேசினாள் என்றாலும், லேசாகச் சிரித்தபடியேதான் நின்றாள்.

''இதுனால ஒன்னுமில்ல. நீ பாட்டுக்குப் பேசாம இரு,'' இயல்பாகப் புன்னகைத்தபடியே கூறினேன். நான் கூறும் போது என் தங்கையை உன்னிப்பாகக் கவனித்தேன். இது அவளை நன்கு கவனிக்க வேண்டிய நேரம். அந்த நேரத்தில் இது பற்றிய பயமும், அண்ணன் என்ற பயமும் அவளை அறியாமல் அவளுக்குள் உருகிக் கொண்டிருப்பதை என்னால் உணர முடிந்தது.

அதன் பிறகு ஒரு நண்பனைப் போல, எந்தவித இறுக்கமும் இல்லாமல், ''அப்புறம் அவன் பதில் கேட்டா என்ன சொல்றது . ம்?'' என்று அவள் கேட்டதும், மீண்டும் முன்பு கூறியது போலவே, ''எது கேட்டாலும் நீ பேசாமலே இரு. கண்டுக்காதே. இதுனாலே ஒன்னுமில்ல. நீ மனசப்போட்டுக் குழப்பிக்கிறாம உன் வேலையைப் பாரு போ,'' என்று இயல்பாகச் சொன்னேன். எதையோ சிந்திப்பவளைப் போன்ற தோரணையில் முகத்தை வைத்துக் கொண்டு என்னை விட்டு அகன்ற போது அவளையே கவனித்தபடி இருந்தேன்.

நான் எழுதிய தாள் மீது திறந்தபடி இருந்த பேனாவை மூடினேன். அருகில் இருந்த அந்த 'லவ் லெட்டரை' எடுத்து மீண்டும் படித்தேன். அழகாக இருந்தது, எழுத்தும் எழுதிய விதமும். கொஞ்சம் கூடத் தொய்வே இல்லாமல், தொடர்ச்சியாக எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தான். சில இடங்களில் செயற்கைத்தனம் தெரிந்தாலும் லவ் லெட்டருக்கு அதெல்லாம் தேவைப்படத்தான் செய்கிறது. 'பரவாயில்லையே, இவன்கூட இப்படியெல்லாம் எழுதுகிறானே!' என நினைத்துக்கொண்டேன்.

எழுதியது வேறுயாருமல்ல. தினமும் என் வீட்டிற்கு வரும் ஒரு சராசரியான விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். இந்தச் சுற்று வட்டாரத்தில் ஒவ்வொரு நாள் மட்டும் நடைபெறும் சந்தைகளுக்குத் தினமும் காய்கறிகளைக் கொண்டு சென்று விற்பனை செய்பவன்தான் இவன். இவன் எதற்கு எங்கள் வீட்டிற்கு வர வேண்டும்?

நாங்களும் விவசாயிகள் தான். நாங்கள் நிழலில் நின்றபடி காய்கறி மூட்டைகளை கணக்கெடுத்து அனுப்பும் அளவிற்கு நடுத்தர விவசாயி. எங்களுக்கு முன், தொடைக்கு மேலே கைலியை மடித்துக் கட்டினபடி மூட்டையை முதுகில் சுமந்து சென்று வண்டியில் ஏற்றும்படியான நிலை அவனுக்கு.

என்னைப் பொறுத்தவரை எங்கள் இரு குடும்பத்திற்கும் உள்ள வித்தியாசம் இவ்வளவு தான். ஆனால் சமுதாயத்திற்கு

படிப்பகம்

www.padippakam.com

முன் அரசியல் ரீதியான பெரிய மனுஷர் என் அப்பா. பெரிய குடும்பம் எங்களுடையது. இது அவனுக்கும் தெரியும். தெரிந்தும் எழுதியிருக்க துணிச்சல் வேண்டும்! படித்தவனா? படிக்காதவனா என்பது எனக்குத் தெரியாது. கடிதத்தை வைத்து ஏதும் சொல்லிவிட முடியாது. என்னிடம் யாராவது 'லவ்லெட்டர்' எழுதிக் கொடுக்கச் சொன்னால்கூட நான் எழுதித்தான் கொடுப்பேன்.

எப்படியோ எழுதிவிட்டான். தைரியமாகக் கொடுத்தும் விட்டான். 'தைரியமாக' என்பதைவிட 'நம்பிக்கையாக' என்று கூறுவதுதான் சரி. எப்படியோ விஷயம் என்னளவில் வந்துவிட்டது. இதில் என்னுடைய பங்கு என்ன? நான் தற்போது தங்கையிடம் நடந்து கொண்டவிதம் சரிதானா? இந்தப் பிரச்சினையை இப்படித்தான் எல்லோரும் தீர்த்து வைப்பார்களா? இப்படி தங்கையிடம் ''இதைக் கண்டு கொள்ளாதே,'' என்று கூறினால் அவளுக்கு என்மீது உள்ள அபிப்பிராயம் தொய்ந்து போய்விடாதா? அண்ணன் என்ற உறவு மீது அவளுக்கு சலிப்பு வந்துவிடாதா? எந்த அண்ணனும் இப்படிச் செய்யமாட்டான். பொய்யாகவாவது கோபப்படுவான்.

நான், அப்படிச் செய்யாதது தவறோ? அவன் மீது கோபத்தைக் காட்டியிருக்க வேண்டுமோ! அதைத்தான் தங்கையும் எதிர்பார்த்திருப்பாளோ? அவனைப் பிடித்திருந்தால் இப்படி என்னிடம் கடிதத்தைக் கொடுத்திருக்க மாட்டாளே அப்படியென்றால் கொடுத்ததற்கு அர்த்தம்? அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் அமைதியாகிவிட்டேனோ! இப்படிப்பட்ட விஷயங்களில் எப்படிப்பட்டவனும் கோபத்தை வெளிப்படுத்தவே விரும்புவான். யாரிடம் என்பது அவனுக்கு முக்கியமில்லை.



கடிதம் கொடுத்தவனை நாலு பேருக்கு முன் அநாகரிகமாகத் திட்டி, மானத்தை வாங்க வேண்டும்; அல்லது பலரின் முன்னிலையில் அடிக்க வேண்டும். இது அண்ணன்களின் மனோபாவத்தையும், உடல் பலத்தையும் பொறுத்தது. இதில் நான் எந்த ரகம்?

நான் எந்த ரகம் என்பது எனக்கு முக்கியமல்ல. இதில் என் தங்கை எந்த ரகம் என்பதே எனக்கு முக்கியம்! அவனைத் திட்டவேண்டும், அடிக்க வேண்டும், நாலு பேருக்கு மத்தியில் மானத்தை வாங்க வேண்டும் என்று விரும்புகிற ரகமா? அப்படியென்றால் அவனைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேசவே இல்லையே! பேசியிருந்தால்...? சராசரி அண்ணனாக நானும் மாறியிருப்பேனோ!

இல்லை. இல்லவே இல்லை. எனது குழப்பம் தவறானது. நான் எங்கோ புரண்டு விட்டேன். எனது பாதையிலிருந்து தவறி விட்டேன்.

இது உணர்வு சம்பந்தமான விஷயம். மதிக்கப்பட வேண்டிய மனநிலை. காலத்தை வினாடி வினாடியாக அனுப

படிப்பகம்

www.padippakam.com



பெண்ணின் கற்பு என்பது ஆணின் மகத்தான உருவாக்கம். —ஓடிஸ் ஸ்கின்னர்.

விக்கக் கூடிய ஒரு உறவுமுறை. இப்படிப்பட்ட அற்புத விஷயத்தில் நான் ஒரு பக்கம் மட்டும் பார்ப்பது எப்படி நியாயம்? அப்படியென்றால் மறுபக்கம்? ஒரு பக்கம் மட்டும் பார்த்தால் நான் அண்ணனாக அல்லவா இருக்க வேண்டும்! இல்லை. நான் அண்ணனாக இருக்க விரும்பவில்லை. அண்ணன் என்ற உறவைக் கழற்றி வைக்க வேண்டும். இல்லை, பல்பிடுங்கி வைத்துவிட்டு நடுநிலைவாதியாக இருக்க விரும்புகிறேன்.

என்ன பெரிய நடுநிலைவாதி!



இல்லை, நான் மனிதாபிமானத்தோடு இருக்க விரும்புகிறேன். ஆம். நான் மனிதாபிமானி. ஆகா.. மனசுக்கு எவ்வளவு இதமாக இருக்கிறது! மனிதாபிமானி, மனிதாபிமானி... மனிதாபிமானி..., மனசுக்குள் சொல்லிக் கொள்ளத் தோன்றும் அற்புதமான வார்த்தையாக இருக்கிறதே!

அப்படியென்றால், நான் செய்ததுதான் சரி. மனிதாபிமானிகள் இப்படித்தான் செய்ய வேண்டும். இல்லாமல், வேறு வழியைக் கையாண்டிருந்தால் அது வேறுவிதமான விளைவை வெளிப்படுத்தியிருக்கும் இந்தக் காதலில் என் தங்கைக்கு உடன்பாடு இல்லை என்பதை நன்கு உணர முடிகிறது. இந்நிலையில் அவன் மீது கோபமாக நான் இரண்டு வார்த்தை திட்டியிருந்தால் என் தங்கைக்குள்ளும் இரண்டு வார்த்தை அவனைப் பற்றிப் பொங்கும். அவன் மீது அருவருப்பை உண்டு பண்ணும். அவனை வெறுக்கத்தோன்றும். அவனை இழிவாக நடத்தத் தோன்றும். அவன் மனசு நோகும்படியாக முகத்திற்கு எதிரே எதையாவது இரக்கமில்லாமல் செய்யத் தோன்றும். இவை இன்னும் அதிகரிக்கும்போது விஷயத்தை அப்பா, அம்மாவிடம் சொல்லத் தோன்றும். சொல்லி அவர்கள் திட்டுவதையும் கேட்கத் தோன்றும். அவனைக் கண்டித்தால் ஒளிந்து நின்று பார்க்கத் தோன்றும். இவையெல்லாம் தங்கையின் அடிமனத்திலிருந்து தோன்றுகிறதோ இல்லையோ, அவள் எங்கள் எல்லோரிடமும் நல்லவள் என்பதையும், தான் குற்றவாளி இல்லை என்பதையும் நிரூபிக்கத் தோன்றுகிற அநாகரிக ஆசையால் கூடத் தோன்ற வாய்ப்புகள் உண்டு.

இந்த வாய்ப்புகளுக்குக் காரணம் யார்? அவனா? இல்லை நான்தான். நான் மட்டும் தங்கையைச் சந்தேகப்பட்டிருந்தாலோ, அல்லது அவனைத் திட்டியிருந்தாலோ, அவளுக்குள் அநாகரிக ஆசை தோன்றியிருக்கும். மாறாக சந்தேகமில்லாத என் சிரிப்பும் 'இதுனாலே ஒன்னுமில்ல' என்ற என் வார்த்தையும் அவளை அநாகரிக ஆசையிலிருந்து காப்பாற்றி மனிதாபிமானத்துக்குள் அமரச் செய்துவிட்டிருக்கிறது.

அதே சமயம் என் தங்கைக்கு இந்தக் காதலில் விருப்பம் என்று கூறியிருந்தாலும் நான் சிரித்துத்தான்

படிப்பகம்

www.padippakam.com

இருப்பேன். தங்கைக்குத் தெரியும்படி இல்லாவிட்டாலும் மனசுக்குள்ளேயே சிரித்துத்தான் இருப்பேன். நானும் உரிமை எடுத்து உதவி செய்ய நினைத்திருப்பேன். காரணம் எனக்கு அதற்கு மட்டுமே உரிமை உண்டு. அடுத்தவர்களின் உணர்வுகளிலும், உரிமைகளிலும், சுதந்திர முடிவிலும் தலையிட யாருக்குமே உரிமையில்லை. ஆகவே எனக்குள்ள உரிமையை நான் இழக்க விரும்ப மாட்டேன். முடிந்த வரை மனிதாபிமானத்தோடு செயல்படுவேன். இதில் தவறு இருப்பதாக எனக்குப் படவில்லை. அன்பு என்பது தானாக ஏற்படுவது. யாராலும் ஏற்படுத்தப் படுவதில்லை.

ஆகவே அன்பான காதலில் உண்மை இருக்கும். உண்மையில் மனிதாபிமானம் இருக்கும். மனிதாபிமானத்தில்தான் உண்மையான வாழ்க்கை இருக்கிறது. அப்படியென்றால் உண்மையான வாழ்க்கைக்கு காதல் அவசியம். எல்லோரும் காதலிக்க வேண்டும். அது எங்கிருந்து வருகிறது? எப்படி வருகிறது? எதனால் வருகிறது என்பது முக்கியம் இல்லை. நீ காதலி. உனக்கான காதல் தானே வரும். காற்றில் எது உனக்கான சுவாசக் காற்று என்று தெரியுமா? காற்று எப்படியோ, எங்கிருந்தோ, எதனாலோ வருகிறது. நீ சுவாசி. உனக்கான சுவாசம் தானே வரும்.

ஆனால், என் தங்கைக்கு இதில் விருப்பம் இல்லாமல் போனதில் அவன் பாவமாகிறான். இதில் தங்கைக்கு விருப்பம் இருந்திருப்பின், எனக்கும் தெரியப்படுத்தாமல் இந்த வீட்டில் யாருமே கண்டு பிடிக்க முடியாத ஒரு மூலை இவளுக்கு கிடைத்திருக்கும், கடிதத்தை ஒளித்து வைக்க!

அவன் நல்லவன். எந்தத் தவறும் செய்யாதவன். அவன் மனதிற்குள் தோன்றிய, எத்தனை நாட்களுக்கு முன்போ தோன்றியிருந்த விஷயத்தை வெளிப்படுத்தி யுள்ளான். பதிலைத் தெரிந்து கொள்ள விரும்புகிறான். அவ்வளவு தான்.



இது அவன் சம்பந்தப்பட்டது. அவனது சுதந்திர உரிமை. இதில் தலையிட யாருக்கும் அனுமதியில்லை. அவனைத் திட்டவோ, அடிக்கவோ, கண்டிக்கவோ யாருக்கும் உரிமையில்லை. என் தங்கையோ, தங்கை சார்பாக நானோ, அல்லது என் குடும்பமோ நேரிடையாக அவன் மனசு நோகும் படியாகவோ, புண்படும்படியாகவோ செய்வதற்கு என்ன அதிகாரம் இருக்கிறது? அவனுக்குப் பதில் சொல்ல மட்டுமே அனைவருக்கும் உரிமையுண்டு. தேவைப்பட்டால் கேள்வி கேட்கவும் உரிமையுண்டு. ஆனால் கேள்வியும் மனசைப் புண்படுத்தாத படி இருக்க வேண்டும் என்பது முக்கியம். அப்பொழுது நம் மனிதாபிமானத்தைப் பேச விட்டுவிட்டு நாம் அதன் எதிர்ப்புறம் ஒதுங்கி நின்று கொண்டு கவனிக்க வேண்டும். காரணம் நாம் பேசப்போகும்

படிப்பகம்

www.padippakam.com



எழுத்தாளனாயிருக்க எனக்கொரு திறமையும் இல்லை என்பதைக் கண்டுபிடிக்க பதினைந்து ஆண்டுகள் ஆயின. ஆனாலும் என்னால் எழுதாமல் இருக்க முடியவில்லை. காரணம், இந்தப் பதினைந்து ஆண்டுகளில் நான் ஒரேயடியாய்ப் புகழ் பெற்றுவிட்டது தான். —ராபர்ட் பெஞ்ச்லி

விஷயம் மிக மென்மையானது. மனசுக்குள் ஊதுபத்திப் புகையைப் போல நெளிந்த வண்ணமாய் இருப்பது. இந்த விஷயத்தைப் பேசுவதற்கு வாய் அவசியமில்லை. உணர்வுகள் தான் அவசியம். அது மாதிரியான விஷயம் பேசும் போது நாம் எந்த அளவிற்குப் பக்குவமாக இருக்கவேண்டும்! அதுவும் அந்த மிருதுவான விஷயத்தின் தோல்வி பற்றிப் பேசும் போது...!

பெருமூச்சு விட்டபடி உடம்பை முறுக்கி, சடசடவென சொடுக்குப் போட்டேன். முகமெல்லாம் தூங்கி எழுந்தவனைப் போல் இருந்தது. நான் எழுதாமல் நிறுத்தியிருந்த கடைசி வரியைப் படித்தேன். கடைசி வார்த்தை பாதியோடே நின்றிருந்தது. மெதுவாக எல்லாத் தாள்களையும் மடித்து வைத்துவிட்டு, எழுந்து முகம் கழுவச் சென்றேன். அடுப்படியில் தங்கை மட்டும் ஏதோ வேலை பார்த்துக்கொண்டிருந்ததைக் கண்டு கொள்ளாமல் சென்றேன். பின் ஈர முகத்தோடு திரும்புகையில் திடீரென ஞாபகம் வர, தங்கையை சப்தம் இல்லாமல் அழைத்தேன். அவளும் சப்தம் இல்லாமல் வர, ''இந்த விஷயத்த வீட்ல யார்ட்டையும் சொல்லிப்புடாதே...'' என்று கூற, ''ம்'' என்றபடி புன்னகைத்தாள்.

அவன் வழக்கம் போலவே தினமும் எங்கள் வீட்டிற்கு வருவதும், சாப்பிடுவதும், காய்கறிகளை எடுத்துச் செல்வதுமாய் நடந்து கொண்டான். ஆனால் எனக்கு அவனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஏதோ அவன் மீது கூடுதல் அன்பு ஏற்பட்டுவிட்டதைப் போன்றும், அதிகமாக அவனிடம் பேசத் தோன்றுவது போன்றும் உணர்ந்தேன். எனவே அவனுக்கே தெரியாத அவனது தோல்வியைச் சொல்ல எனக்கு என்னமோ போல் இருந்தது. ஆனாலும் சொல்லாமல் இருப்பது அதைவிடக் கொடுமையானது. பாவம் அவன்! எதிர்பார்ப்புகள் எத்தனை பாடுபடுத்தும் அவனை? அன்று எப்படியும் சொல்லிவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்து அவனோடு பேசிக் கொண்டே கடைவீதிப் பக்கம் நடக்கலானேன்.

சிறிது தூரம்தான் நான் பேசினேன். அதன் பிறகு அவனே பேசிக்கொண்டே வந்தான். எனக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை. மனசுக்குள் தயக்கம். எப்படி ஆரம்பிப்பது? எப்படிச் சொல்வது? ஆரம்பித்துவிட்டால் சொல்வது கொஞ்சம் சுலபம்தான்.

அவன் பேச, 'ம்' கொட்டினபடியே, எதையுமே கவனிக்காமல் மௌனமாக, ஏதோ

படிப்பகம்

www.padippakam.com

இறுகிப் போனவனைப் போல நடந்தபடியே இருந்தேன். டீக் கடை வந்ததும் ''டீ சாப்பிடு வோம்,'' என்றேன். அவன் மறுத்தான். நானும் விடுவ தாக இல்லை. வற்புறுத்தி னேன். அவனும் வருவதாக இல்லை. பலமாக மறுத்தபடி ''இல்ல...நா.. மாலை போட்டு ருக்கேன்ல'' என்று கூறி னான். ஆமாம். அவன் முருகன் கோவிலுக்கு மாலை போட்டி ருந்தான். நெற்றியில் சந்தன மும், இடுப்பில மஞ்சள் வேஷ்டி யும் கட்டி இருந்தான். இந்தச் சமயத்தில் பெரும்பாலோர் டீக்கடைகளில் எதுவும் சாப் பிட மாட்டார்கள் என்பது எனக்கு ஏனோ மறந்து விட் டது அதன் பிறகு மீண்டும் நடக்கத் துவங்கினோம். சிறிது தூரம் என் மௌனம் நீடித் தது எனக்கே சங்கடமாகத் தான் இருந்தது. என்ன செய் வது? சொல்வதற்கான மன நிலை மட்டும் போதாதே! கேட்பதற்கான மன நிலையும் வரவேண்டுமே! நான் தயாரா னால் போதுமா? அவனைத் தயாராக்க வேண்டுமே! அவன் சாதாரண மனநிலையில் இயல் பாக பேசிக் கொண்டே இருக் கும் போது நான் திடீரென்று சொல்லிவிட்டால் அவனின் இயல்புநிலை எந்த அளவிற்கு நொறுங்கிப்போகும்! நொறுங் கிப் போன மனநிலையை எனக் காக ஒன்று சேர்க்க எவ்வளவு கஷ்டப்படுவான்! கஷ்டத் தோடு என் முகத்தைப் பார்க்க வேண்டும்; என் வீட்டிற்கு வர வேண்டும்; என் தங்கை முகத் தில் விழிக்க வேண்டும்! அவன் நிலை மிகவும் பாவமானது தான் இன்னும் சிறிதுநேரத்தில் எனக்குள்ளிருக்கும் குழப்பம் முழுதும் அவனுக்குள் போய் விடும்! அவன் பாவம்தான். ஏதும் உணராமல் என்னுடன் வந்து கொண்டிருக்கிறான்.

நீண்ட தூரம் நடந்து விட் டோம்.

இப்பொழுது அவனும் என் னுடன் மௌனமாகவே நடந்து வந்து கொண்டிருந்தான். இரு வரின் மௌனமும் உலகத் தையே அமைதிப்படுத்தியது எனத் தோன்றியது. இந்த அமைதியோடு அவனை இன் னும் சிறிது நேரம் நீடிக்கச் செய்துவிட்டால் அவனின் மன நிலை ஓரளவிற்குத் தெளி வோடு இருக்கத் துவங்கிவிடும். அந்தச் சமயத்தில் விஷயத்தை. தாங்கிப் பிடித்தபடி சலனமே இல்லாமல் அவனுக்குள் இறக்கி விடுவதே சரி எனப்பட்டது. அதேபோல் இருவரின் மௌனத் தையும் நீடிக்கச் செய்தேன். நேரம் போதுமெனப் பட்ட போது......

''எப்ப மலைக்குப் போறீங்க...?'' என்று கேட் டேன்.

''வர்ற வெள்ளிக்கிழமை,'' என்றான்.



''நான் கூட வெள்ளிக் கிழமைதான் மெட்ராசுக்குப் போகலாமுன்னு இருந்தேன். ஆனா அன்னைக்கு யாரோ தங்கச்சிய பொண்ணு பாக்க வர்றாங்களாம். எல்லாம் பேசி முடிச்சுட்டாங்க. இருந்தாலும் சும்மா பார்மாலிடிக்கு பொண் ணைப் பாத்துட்டுப் போகலா முன்னு வர்றாங்களாம். அதுக் கப்புறம்தான் நான் ஊருக்குப் போகணும்.'' ★

படிப்பகம்

www.padippakam.com

# தமிழன்பனின்

## அரசியல் கலவாத நாய்



என்
விடுதி அறைக்கு வெளியே
பின்புறம்
நாய் ஒன்று
வாழ்க்கைக்குவெளியேபோய்க்
கிடந்தது.

நாற்றத்தை நாற்புறமும்
உதறிக்கொண்டே போனது
காற்று.

பற்கள்
போகவில்லை. ஆனால்
வாயில் உட்கார்ந்த
ஈயைக்கூடக்
காயப்படுத்த முடியவில்லை.

அஞ்சிக்
கெஞ்சிக் குழைத்த
வால்
சுதந்திரமாகக் கிடந்தது.

விசுவாசம்,
பசிக்கு அலைந்த போதே
பாதி
விடுபட்டது போல்தான்.

கண்ணில் இருந்த
கறாரான விசாரணை
காணாமல் போனதால்
கொஞ்சம்கூடப்
பயமில்லை
கொத்தும் காக்கைகளுக்கு.

அது
ஓடிய ஓட்டங்களெல்லாம்
இப்போது திரும்பி வந்து
உடம்பை உலுக்கிப்பார்த்தும்
ஒன்றும் பயனில்லை.

எத்தனையோ பேரின்
தூக்கத்தைச் சூறையாடிய
அதன் குரைப்புகள்
ஒன்று கூடி முயன்றும்
அதை எழுப்ப முடியவில்லை.

மரணத்தைத் துரத்திய
மோப்பம்
நுரை தள்ளிக் கிடந்தது.

எலும்புகளால் நிரம்பியிருந்த
அதன் கனவுகள்
சில்லிட்டுப் போயிருந்தன.

மிச்சப்பட்ட தன்
காமப் புணர்ச்சிகளைக்
கடைசித் தருணம்
பங்கிட்டபோது
பாலுறுப்புகளுக்கு
நோய் வருமோ என அஞ்சின
மற்ற நாய்கள்.

இரங்கல் அறிக்கை
தயாரித்து
உலகிற்குரைக்க
ஒரு நாயும் இல்லாததால்
ஒன்று நிச்சயமானது எனக்கு
"அது
அரசியல் சம்பந்தப் படாத
நாய்."

படிப்பகம்

www.padippakam.com

# இரா. ஆனந்தியின்

## வெளிச்சம்

உதய நேரத்தின்
வெளிச்சக் கீற்றுகள்.
இதய வீணையில்
இன்னிசை ராகங்கள்!

மயக்கும் பொழுதின்
மௌன நாற்றுகள்.
பொன் வானில்
பேரழகின் பதிவுகள்!

சாலை யோரங்களில்
நிழல் விரிப்பு.
விழி யோரங்களில்
பளபளப்பு!

இன்று—
பார்வைகளுக்கும்
வெளிச்சம் வேண்டும்.
நட்பே!
உன் வரவு—
நிச்சயமாக வேண்டும்!

## ப்ரிய ஸகி!

கண்களின் பேச்சு
கவனம் ஈர்க்கும்.
கருணை சிரிப்பு
கனிவு சேர்க்கும்.

சொற்களின் சிறப்பு
பெருமை பரப்பும்.
செயல்களின் வெற்றி
செய்திகள் ஆகும்.

தன்-நம்பிக்கை
ஆளுமை தரும்.
உள் ஒளி
ஆட்படச் செய்யும்.

உள்ள அன்பு
ஏக்கம் உணர்த்தும்.
நட்பு மலர்கள்
சரம் தொடுக்கும்.

நிழலான எண்ணங்கள்
நிஜம் தேடும்.
நினைவுகளின் வேகம்
நீக்கமற இணையும்.

கருத்துகளின் கோர்ப்பில்
கவிதைகள் பிறக்கும்.
கணப் பொழுதில்
கவலைகள் பறக்கும்.

மன வலிமையில்
மார்க்கம் கிடைக்கும்.
எண்ணப் பறவைகள்
வானில் சிறகடிக்கும்.

வான வீதியில்- அன்பு
வைரங்கள் மின்னும்.
வண்ண மலர்க் கூட்டம்
வரவேற்பு கூறும்.

நட்புச் சொந்தங்கள்
பந்தங்கள் ஆகும்.
சந்திப்பின் சந்தோஷத்தில்
சொர்க்கங்கள் உருவாகும்.

காலம் களிப்புடனே
கதைகள் சொல்லும்.
கடுகியே முத்தங்கள்
கேளாமல் பதிக்கும்.

உலகம் இன்று
நம் வசமாகும்.
உற்சாகமாய் நம்மைத்
தன் வசமாக்கும்.

படிப்பகம்

www.padippakam.com

# சுகமான சுமை

**இரா. காமராசு**

அதிகாலை
குளித்துக் கோலமிடும்போது
கை காட்டிச் செல்வீர்கள்.

பஸ் ஸ்டாண்டில்
மூட்டை முடிச்சுகளைக்
கண்டால் கண்கள் தவிக்க
வரவேற்பீர்கள்.

"வெரசா போங்க,
பாத்துப் போங்க,
இதான்... முடியுமா?
முடியாதா? போ... வா..."
அத்தனை வார்த்தைகளுக்கும்
ஒரேயொரு புன்னகையைப்
பதிலாக்குவீர்ள்.

பேரம் பேசாமல்
நாகரிகச் சொல் உதிர்க்காமல்
எல்லா மனிதர்களையும்
சுமந்து செல்வீர்கள்.

அதிகச் சவாரியானால்
அல்வாவும் பழங்களும்
அள்ளி வருவீர்கள்;
குறைவானாலும்
பூப் பொட்டலம் என்னைப்
பார்த்துக் கண் சிமிட்டும்.

நமது காலனியே
நித்திரைத் தவமிருக்கும்.
உங்களை ஒருபோதும்
மன்மதனாய் எண்ணாத
நீங்கள் என்னை
ரதியாய் அலங்கரிப்பீர்கள்.

அந்த இருளில்
நம் வாழ்க்கைப் பயணத்திற்கு
புது விளக்கு தேடுவோம்.
'தாங்குதல் சுகம்.
வானமும் பூமியும்
ஜனனமும் மரணமும்
மனமும் மனமும்
ஒன்றையொன்று தாங்கியபடி'
உங்கள் ஆன்மாவிலிருந்து
ஒவ்வொரு சொல்லாய்
இறக்கி வைப்பீர்கள்.

பருவ வயதில்
சினிமாக்களின், கதைகளின்
நாயகர்களைப் பார்த்து
கர்வப்பட்டிருக்கிறேன்.
ஆனால் இன்று...
யதார்த்தத்தில்
ரிக்ஷா ஓட்டியானாலும்
எனது நினைவுகளின்
ராஜகுமாரன்.
கனவுகளின் கதாநாயகன்
வாழ்க்கையின் சௌந்தர்யம்
நீங்கள்... நீங்கள்... நீங்கள்.



நான் இந்த உலகில்
வாழ்ந்ததற்குச் சாட்சியாய்
நீங்கள் எனது
மனசில் மட்டுமல்ல—
வயிற்றிலும்.
தாங்குதல் சுகமல்லவா?

படிப்பகம்

www.padippakam.com

# உனக்கானவை

**ராஜமைந்தன்**

கவிதைக் குதிரை
மன வெளியில்
ஓடுகையில்...
தப்படிகள் வெள்ளைத் தாளில்
வார்த்தைகளாய்!

கனவுகள் மூட்டைகளாய்
வானில்!
அதில் சில
துக்கம் சொல்லியழ...
என் தாழ்வார முகட்டில்
கண்ணீர்த் துளி.

யாரோ கிசுகிசுப்பாய்க்
கூப்பிடுவதுபோல்
வாழ்க்கை நகர்வு.
இலக்கென்றில்லாமல்
முன் பின் பின் முன்
இருட்டு.

எப்போதும்
எறும்புகளின் படையெடுப்பு
செத்துப் போன
பூச்சி மீது!
நீ தெரு வழி வருகையில்
நான் அடையாளப்படுவதாய்
நம்பிக்கை!

விழித்திருக்கும்
கோட்டான்களுக்கிடையே
உன் அறை விளக்கும்
என் அறை விளக்கும்
நம்மைப் பற்றிய நினைவில்
விழித்துக்கொண்டு!

பொக்கிஷங்கள் தேடிய
பயணிப்பில்
வெட்டின பக்கமெலாம்
நீயும் உன் கவிதைகளும்.

இந்த வானப் பரப்பில்
விதைக்கப்படும்
எல்லா நட்சத்திர விதைகளும்
உன் மனவெளிப் பாதையில்
பற்றிப் படரத்தான்.

கவிதை லாயத்தைக்
கத்தரித்துக் கொண்டு
இதுபோல்
வந்துகொண்டுதானிருக்கும்.;
என் பேனா!



# கள் - மோர்

**ரேணுகா**

கள் இங்கே—
உட்கார்ந்த இடத்திலேயே
விற்றுப் போகிறது.

மோரைக் குடத்திலிட்டு
தலைமீது சுமந்துகொண்டு
வீதியேகிச் சுற்றிச் சுற்றி
நா உலரக் கூவிக் கூவி
வீட்டுப் படியேறி
விரும்பியே தந்த பின்னும்
குடத்திலே இன்னும்
மோர் கொஞ்சம் எச்சமாய்...

படிப்பகம்

www.padippakam.com

# கண்ணதாசன்

கழனியூரன்

வெள்ளித் திரைக்குத்
தன் பேனாவினால்
தங்க முலாம் பூசியவன்.

தைப்பாவையில்
கவிதை அவன்
கைப்பாவையானது.

அவன்
ஆசுகவி என்பதற்கு
ஏசு காவியமே
இனிய சான்றாகும்.

சாக்கடை நீரிலும்
தங்க மீன் பிடித்தவன்.

பாலை வனத்திலும்
பூப் பறித்துக் கொடுத்தவன்.



அவன்
சினிமாவிற்கு எழுதியதால்
சினிமா தன்னைச்
சிங்காரித்துக் கொண்டது.

அவன் அழுதால்கூடத்
தமிழுக்கு
ஆதாயமாகவே இருந்தது.

அவன் கண்ணீரோடு நல்ல
கவிதையும் பிறந்தது.

கண்ணதாசனே!
உன் பாட்டு வரிகள்
படித்தவனுக்கும்
பாமரனுக்கும் இடையே
பாலம் போட்டது.



நீ ஒரு திறந்த புத்தகம்.
சில கிழிந்த புத்தகங்கள் தான்
இன்று உன்னை
விமர்சனம் செய்கின்றன.

உன் சொந்தச் சோகத்தைச்
சொல்லிச் சொல்லி
நீ தந்த ஞானம்
கடலினும் பெரியது.

உன் கவிதைகள்
அத்தனையும் நல் விதைகள்;
என்போலும்
எத்தனையோ கவிஞர்களை
உன் பாட்டு வரிகளே
பயிர் செய்தன.

நீ
நிரந்தரமானவன்
அழிவதில்லை;
எந்த நிலையிலும்
உனக்கு மரணமில்லை.

படிப்பகம்

www.padippakam.com

# மேதை போல்வார்!

## வல்லிக்கண்ணன்



சாமிநாதன் வழக்கம் போல் தனியாக இருந்து வானத்தையும் கடலையும் பார்த்துக் கொண்டிருந்தார். அது அவருக்கு பொழுது போக்கு.

அப்படிப்பட்ட சமயங்களில் அவர் விசேஷமான எண்ணங்களை மனசில் ஓடவிட்டு மகிழ்ந்திருப்பார் என்று சொல்வதற்கில்லை. சும்மா இருப்பதே சுகம் என்று உணர்ந்தவர் அவர்.

அப்போது அவருக்குப் பக்கமாக ஒருவர் வந்து நின்றார். அவர் தோற்றத்தில் விசித்திரத் தன்மை எதுவும் இல்லை. சாதாரணமாகத்தான் காட்சி தந்தார். ஒல்லியாய், உயரமாய், ஏறுநெற்றியும், ஒட்டிய கன்னமும், கூர்மையான மூக்கும், கடுகடுப்பான முகபாவமும் பெற்றிருந்தார்.

வந்து நின்றவர் கடலைப் பார்த்தார். மணல் பரப்பைப் பார்த்தார். சும்மா விழித்துக் கொண்டிருந்த சாமிநாதனையும் பார்த்தார். 'உதைக்க வேண்டும். வெறும் உதை சரிப்படாது. சவுக்கால் அடிக்கணும். சுளீர் சுளீர்னு அடி கொடுக்கணும்' என்றார்.

தனக்குத்தானே சொல்லிக் கொள்வது போலவும் இருந்தது அது. சாமிநாதனைப் பார்த்துப் பேசுவது போலவும் இருந்தது. அதனால், 'யாரை? என்ன விஷயம்?' என்று கேட்பது போல் முகம் உயர்த்திப் பார்த்தார் சாமிநாதன். 'அழகு நகரமாம்! அதை மேலும் அழகு படுத்தும் திட்டங்களாம்! இருக்கிற அழகை சீராக வைத்துப் பேணத் தெரியாத ஜென்மங்களுக்கு அழகு படுத்துவது என்ன வேண்டிக் கிடக்கிறது!' என்று வெடுவெடுப்பாகப் பேசினார் வந்து நின்றவர்.

'என்ன விஷயம்?' என்று கேட்டார் சா.

'நீங்களே பாருங்களேன். அழகான கடல்கரையை கக்கூசாக மாற்றியிருக்கிறார்கள். நெடுக மலம். கடலோரத்துச்கு நடந்து வர உதவும் ரோடு நல்ல பாதையாகவா இருக்கிறது? ஒரே மலக்காடு. நடு ரோடு வரை கழிந்து வைத்திருக்கிறார்கள். சுத்தமும் சுகாதாரமும் தெரியாத பிறவிகள். நகரின் பல இடங்களிலும் இதே கதைதான். எத்தனை பிரசாரம் செய்தாலும், போதனைகள் புரிந்தாலும் இவங்க

படிப்பகம்

www.padippakam.com

நிறை குணம் என்பது ஆன்மாவின் கண்ணியம் என்பதற்கு மேல் ஒன்றுமில்லை.

—பால்சாக்

ளுக்கு உறைக்காது. சவுக்கடி கொடுத்து கற்பிக்க வேணும்' என்றார்.

அங்கேயே உட்கார்ந்து விட்டார்.

'ஐம்பது அறுபது வருடங்களுக்கு முன்னாலே சவுக்கடி சாந்தப்ப பிள்ளை என்றொரு போலீஸ் சூப்பிரண்டு இருந்தார். எப்பவும் சவுக்கும் கையுமா மோட்டார் பைக்கில் சுற்றிக் கொண்டே இருப்பார். ரோட்டோரத்திலே அசிங்கம் பண்ணுகிறவனைப் பார்த்தால், சுளீர்! சவுக்கால் ஒரு அடி. பொது இடத்திலே சத்தம் போட்டு, கலாட்டா பண்றது யாராக இருந்தாலும் சரி—சுளீர் சுளீர்! சவுக்கடிதான். அவர் ஆதிக்கத்திலே ஒழுங்கும் கட்டுப்பாடும் அபாரமா இருந்ததுன்னு எங்க அப்பா அடிக்கடி சொல்லுவார். அது மாதிரி சவுக்கடி ஆபீசர்கள் இப்ப வேணும். ஊருக்கு ஊரு— வீதிக்கு வீதி சுத்திச் சுத்தி வந்து கண்டிப்பு பண்ணணும். அப்பதான் ஓரளவுக்கு புத்திவரும் இதுமாதிரி ஆளுங்களுக்கு!'

பேச்சை நிறுத்தினார். கடலை, பொங்கிவரும் அலைகளை பார்த்தபடி இருந்தார் சிறிது நேரம். பிறகு சாமிநாதன் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். 'நீங்க என்ன கவியா, கதாசிரியரா?' என்று கேட்டார்.

சாமிநாதன் சிரித்தார். 'ரெண்டும் இல்லே. சாதாரண நபர் தான். ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர்னு வேணும்னா சொல்லலாம். ஓய்ந்து போன ஆசாமி!'

'ஆ, பள்ளிக்கூடம்! ஓ, குழந்தைகள்! எவ்வளவு அற்புதமான விஷயங்கள்!' என்று வியந்து கொண்டார் மற்றவர். 'குழந்தைகள் தான் உன்னதங்கள். புதுமைகள். உயிரோடு இருப்பவர்கள். பெரியவர்கள் பெரும்பாலும் செத்தவர்கள். பெரும்பகுதி வாழ்க்கையைக் கழித்து விட்டதனாலே, அவ்வளவுக்குச் செத்தவர்கள். குழந்தைகள் இனிமேல் வாழப் போகிறவர்கள். அவர்களில் செத்த பகுதி சொல்பம். வாழக்கூடிய பகுதி தான் நிறைய இருக்கிறது. கால இருப்புக் கணக்கில் அவர்களுக்கு அதிக மதிப்பு உண்டு. அதனாலே பெரியவங்க குழந்தைகளைக் கும்பிட வேண்டும். குழந்தைகளுக்காக உலகத்தை நல்லபடியா பாதுகாத்து வைக்கணும். அதை எங்கே பெரியவங்க செய்யறாங்க?'

சாமிநாதன் ஏதோ சொல்ல விரும்பினார். ஆனால் மற்றவர் அவர் பேச்சை கேட்க விரும்பியதாகத் தெரியவில்லை. தானே பேசி தன் குரலைத் தானே கேட்டு மகிழ்ந்து போகிற இனத்தைச் சேர்ந்தவர் அவர் என்று தோன்றியது.

'எங்கும் அநியாயம். எதிலும் குறைபாடு. கோளாறுகள். ஊழல்கள். வாழ்க்கை வாழ்க்கையாக இல்லை. மனிதர்கள் மனிதர்களாக வாழவில்லை. மிருகங்களைவிடக்

படிப்பகம்

www.padippakam.com

கேவலமாக நடந்து கொள்கிறார்கள். ஊழல் புரிகிறவர்கள் யாராக இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய கொம்பன் ஆனாலும் சரி— சும்மா விடப்படாது. சித்திரவதை செய்யணும். இவங்களை மாதிரிப் பேர்வழிகளை ஒரே அடியாகக் கொல்வது தப்பு—மகாப் பாவம். கழுவிலே ஏத்தி கொஞ்சம் கொஞ்சமாகச் சாகவிடணும். முன் காலத்தில் நடைமுறையில் இருந்த தண்டனைகள் தான் சிறந்தவை. அவை எல்லாம் இப்பவும் அமுலுக்குக் கொண்டுவரப்படணும். மாறுகால்— மாறு கை வாங்குவது என்பாங்களே. இந்தப் பக்கத்துக் கையையும், அந்தப் பக்கத்துக் காலையும் வெட்டு! அங்கங்களை ஒண்ணு ஒண்ணாத் துண்டு போடு. பச்சை மாட்டுத் தோலிலே இறுக்கமாச் சுற்றி அவனை வெயிலிலே காயப் போடு. அப்படி எல்லாம் செய்யணும் இந்தப் பயல்களை. பொறுப்பான இடங்களைப் புடிச்சிக்கிட்டு, ஊழல்களை வளர்க்கிறவங்களை எல்லாம் அப்படித்தான் பண்ணணும்' என்றார். மவுனமானார்.

இவர் ஸாடிஸ்ட் மனோபாவம் கொண்டவர் என்று தோணுது. பிறரை துன்புறுத்தி அவர்கள் படும் வேதனையைக் கண்டு இன்பம் பெறுபவர் என்று சாமிதாநன் எண்ணிக் கொண்டார்.

அதை உறுதிப் படுத்துபவர் போல் அவர் பேச்சை தொடர்ந்தார்.

'ஒரு தண்டனை உண்டு, உமக்குத் தெரியுமா? ஒருவன் வயிற்றைக் குடைந்து, குடல்களை உருவி வெளியே எடுத்துவிடுவது. அப்படியே அவனை சாகும்வரை தெருவிலே போட்டுவிடுவது எப்படி இருக்கும்? துடித்துத் துடித்துச் சாவான். அப்படி அவன் சாகிறத்துக்கு இரண்டு மூன்று நாட்கள் ஆகும். நாட்டை நாசமாக்குகிற ஊழல் பேர்வழிகளுக் கெல்லாம் இது மாதிரியான தண்டனைதான் கொடுக்கணும்.'



'சார் யாரு, என்ன பண்றீங்கன்னு தெரிஞ்சுக்கிடலாமா?' என்று சா. கேட்டார்.

'நானா? நான் ஒரு சயன்டிஸ்ட்னு சொல்லிக் கொள்வேன். உண்மையிலே நான் ஒரு நாடகாசிரியன். ஏகப்பட்ட நாடகங்கள் எழுதியிருக்கேன்...'

'ஸார் பேரு?'

'என் பேரு போதுமான பப்ளிசிட்டி பெறலே இன்னும். பெர்னாட்ஷா மாதிரி அற்புதமான, அபாரமான, புதுமையான ஐடியாஸை எடுத்துச் சொல்ற நாடகங்களை நிறையவே எழுதியிருக்கேன். ஷா மாதிரியே நீளம் நீளமான முன்னுரைகள் எழுதி வைச்சிருக்கேன். அவற்றின் மதிப்பு யாருக்குத் தெரியுது? அதெல்லாம் பப்ளிஷ் ஆகி, மேடையேறி, கவனத்துக்கு கொண்டுவரப் பட்டிருக்குமென்றால், நான் இப்படியா இருப்பேன்! எப்பவோ எனக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கும். மிஸ்டர் சுயம்பு ஒரு ஜீனியஸ் என்

படிப்பகம்

www.padippakam.com

பதும் உலகத்துக்கு தெரிய வந்திருக்கும். நம்ம நாட்டுக்கும் நம்ம ஜனங்களுக்கும் கொடுத்து வைக்கல்லே. அவ்வளவுதான்.'

யார் மீதோ கோபம் கொண்டவர் போல் முகத்தை கடுமையாக்கிக் கொண்டு அவர் வெடுக்கென்று எழுந்தார். வேகமாக நடந்தார். சாமிநாதனிடம் சொல்லிக் கொள்ளாமல், கடல் பக்கம் திரும்பிப் பாராமல் போனார் அவர்.

திடீரென்று திரும்பி வந்தார்.

'ஓய், உமக்குச் சொல்கிறேன். உண்மையிலேயே உயர் தரமான நாடகம் ஒன்றை மூன்றே மூன்று பேர்தான் புரிந்து கொள்ள முடியும்; ரசிக்கவும் முடியும். நாடகம் எழுதிய ஜீனியஸ். அந்த நாடகத்துக்கு உயிரூட்டும்படி நடிக்கிற ஜீனியஸ். அதைப் பார்த்து உணரும் ஜீனியஸ். ஆமா!'

இப்படித் தீர்மானமாய் கூறிவிட்டு அவர் தன் வழியே நடந்தார்.

அவர் போவதையே பார்த்துக் கொண்டிருந்த சாமிநாதன் உள்ளத்தில் இப்போது எண்ண அலைகள் மோதலாயின—

தன்னை ஒரு ஜீனியஸ் ஆகக் கருதுகிற மிஸ்டர் சுயம்பு உண்மையிலேயே ஒரு மேதையாக இருக்கலாம். அல்லது மேதை போல் நடிக்க ஆரம்பித்து, அதையே உண்மை என்று நம்பிவிட்ட பித்து ஆகவும் இருக்கலாம். உள இயல் ரீதியில் இவரிடம் ஏதோ கோளாறு இருக்கிறது. இவ்வளவுதான் எனக்குப் புரியுது! ★

---


## வாசித்தீர்களா?

## நர்மதாவின் புதிய நூல்கள்

- வால்ட் விட்மனும் தமிழ்க் கவிஞர்களும் —க. இராமச்சந்திரன் ரூ. 23
- உலகை ஒரு பூவாக்கி —இரா. ஆனந்தி ரூ. 14
- பாரதியின் பகவத்கீதை உரை ரூ. 20
- கம்பர் சொன்ன கடவுளர் கதைகள் —முத்து எத்திராசன் ரூ. 20
- தாமிரபரணிக் கதைகள் —வண்ண நிலவன் ரூ. 22

# நர்மதா பதிப்பகம்

நல்ல நூல் வெளியீட்டாளர்கள்

16/7, ராஜாபாதர் தெரு, பாண்டிபஜார்

தி. நகர், சென்னை-600017.


படிப்பகம்

www.padippakam.com

# மீண்டும் புதிதாய்...

பொன்னரசன் அழவில்லை. அழக்கூடும் என்பதற்கான எந்தவித அறிகுறியும் கிடையாது. அவன் சட்டை கசங்கிப்போய்க் கிழிந்து தொங்கியது. தலைமுடி தாறுமாறாய்க் கலைந்து தொங்கியது. உடம்பு முழுவதும் வரிவரியாய்க் கன்றியிருந்தது. இடது கை மணிக்கட்டில் சதை பிய்ந்து இரத்தம் கசிந்தது.

ஒரு பதினைந்து வயதுப் பையன் இக்காரணங்களுக்காக மாய்ந்து மாய்ந்து அழலாம். ஆனால், அவனோ அலட்சியமாய் அந்தக் கல்மண்டபத்தில் காலைத் தொங்கப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அடிக்கொரு தடவை இடது மணிக்கட்டைத் தன் வாயால் ஊதிக்கொண்டதோடு சரி. அப்படியோர் அழுத்தக்காரனாய் இருந்தான் அவன். அலட்சியமே கம்பீரமாய்த் தேங்கிய முகம் அவனுடையது. மிடுக்கு நிறைந்த பார்வையும் ஒடுக்கம் இல்லாத தேகமும் அவனுடையவை.



அவனுக்காக அழுவதே போல் அப்போது மண்டபத்திற்கு வெளியே கோடை மழை கொட்டிக் கொண்டிருந்தது. மழை அழுவது பற்றி அவனுக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால், மனிதர்கள் அழுவது அவனுக்கு ஆட்சேபகரமானதோடு அருவெறுப்பான விஷயமும் கூட. அதனாலேயே அங்கே ஒரு மனிதக் குரல் திடீரென்று விம்முவதைக் கேட்டுத் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான். அவன் எதிரே, மண்டபத்தின் மற்றொரு மூலையில் அவள் அழுது கொண்டிருந்தாள். அவள் கமலாவல்லவா?

அவன் அதிசயப்பட்டான். ஆனால், மறுகணமே அவனுக்கு அடக்க முடியாத கோபம் பொங்கியது. அவனைப் பார்த்து அவள் அழுவதா?

"ஏய், இங்கே வா," என்று அதட்டினான். அவள் நடுங்கி விட்டாள். அவன் அருகில் வர அஞ்சினாள். அதைக் கண்டு மேலும் கோபங்கொண்டு, "என்னைக் கேலியா பண்றே?" என்று கூச்சலிட்டவனாய்க் கையை ஓங்கிக் கொண்டு எழுந்தான்.

**கவிதாசரண்**

"ஐயோ! இல்லை அத்தான்," என்று பயந்து போனவளாய் மழையோடு மழையாய்

படிப்பகம்

www.padippakam.com



அமைதியான புரட்சியைச் சகித்துக் கொள்ளாதவர்கள் தான் ஆயுதப் புரட்சியைத் தவிர்க்க முடியாததாக்கி விடுகிறார்கள். —கென்னடி

அங்கிருந்து ஓடி மறைந்தாள் அந்தப் பன்னிரண்டு வயதுப் பெண்.

அவன் மீண்டும் தன் இடத்தில் வந்து அமர்ந்தான். அவள் அவனுக்காக இரக்கப் பட்டே அழுதாள். அதை அறிந்ததனாலேயே அவனுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. அடுத்தவர்கள் அவனுக்காக இரக்கப்படுவதை அவன் ஒரு நாளும் அனுமதித்ததில்லை. அதிலும் அவள்?

அவளை இன்றுதான் தன் எதிரில் பார்த்தான். அவனும் சாதாரணமாக இங்கு வந்து, அவளும் சும்மா வந்து நின்றிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும் போல் தோன்றியது. ஆனால், அவன் அடிபட்டல்லவா இருந்தான். அவள் அழுது கொண்டல்லவா நின்றாள்? "இருக்கட்டும் பேசிக் கொள்கிறேன்," என்று ஆத்திரத்தோடு பல்லைக் கடித்தான். மழை கூட அவனுக்குப் பயந்தது போல் நின்று விட்டது.

நேற்று மாலை ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, "தங்கையனுக்கு இப்படியொரு தறுதலை பிறந்திருக்க வேண்டாம்," என்று சொல்லிவிட்டார். பொன்னரசன் அப்போது ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால், இரவில் அந்தப் பெரியவரின் வாழைக் கொல்லைக்குச் சென்று இருபது மரங்களை வெட்டிச் சாய்த்துவிட்டுத்தான் வீடு திரும்பினான். அதற்குத்தான் இன்று அவனுக்கு அர்ச்சனை நடந்தது. கொல்லாத குறையாக அவனுடைய தந்தை வாட்டி யெடுத்துவிட்டார்.

என்றைக்கும் இப்படித்தான். அவனும் ஏதாவது செய்யாமல் அடங்கி இருந்ததில்லை. அவனுடைய தந்தை வெறி நாயை அடிப்பதுபோல் விளாசத்தான் செய்கிறார். வட்டம் போட்டு நிற்க வைத்து, தானே அலுப்புற்றுப் போகும் வரை அடித்து நொறுக்குவார். அதற்கெல்லாம் அவன் அழக் கூடாது. எல்லா அர்ச்சனையும் நிறைவேறிய பிறகு இந்தக் கல்மண்டபம்தான் அவனுக்குப் புகலிடம். இங்கு வந்துதான் அழத் தோன்றினால் அழுதுவிட்டு, அருகிலுள்ள கிணற்றில் குளித்துக் கொண்டு, அனைத்தையும் அந்தக் கணத்தோடே துடைத்துவிட்டு, புதிய அலட்சியமும் புதிய கம்பீரமும் கொண்டு வீட்டிற்குச் சென்று, அவனுக்காக அழுதுகொண்டிருக்கும் அம்மாவை ஆட்டிப் படைப்பான்.

அப்பாவிடத்தில் அவனுக்கில்லாத அன்பும் ஆதரவும்

படிப்பகம்

www.padippakam.com

அம்மாவிடத்தில் சற்று அதிகமாகவே உண்டு. ஆனால், அவன் அடிபடும்போது அம்மா குறுக்கே வரக்கூடாது. வந்தால் அர்ச்சனையில் சமபங்கு அவருக்கும் உண்டு. அவ்வாறு அம்மா அடிபட நேரும் பொழுதெல்லாம் பொன்னரசன் அழுவான். ஒருநாள் அம்மாவிடம், ''நான் எப்படியாவது போறேன். நீ குறுக்கே வராதே. நீ அடி வாங்கினா எனக்குப் பொறுக்கலே,'' என்று சொன்னான். அம்மா அவனை ஆதரவோடு பற்றிக்கொண்டு, ''நீ சாகும்போது நானும் சாகிறேன். ஆனா, நீ ஏன்டா இப்படி நடந்துக்கறே?'' என்று கலங்கினார்.

''நான் அப்படித்தான் நடந்துக்குவேன். நீ கேட்காதே,'' என்று முழங்கினான்.

''செய். செய்திட்டு அடிபட்டுச் சாவு. எனக்கென்ன?''

''நான் செத்திட்டுப்போறேன். நீ சாகாமே இருந்து. என்னைப் புதைச்சிட்டு எண்ணெய் தேச்சுக் குளி.''

''அடே பொன்னு, அப்படியெல்லாம் சொல்லாதேடா.''

மன்றாடும் தாயைத் தட்டிக் கழித்துவிட்டுப் போகக் கற்றவனும் அவனே.

பள்ளிக்குச் சென்று மதிய உணவுக்கு வரும்போது, ''அம்மா, பசி,'' என்று கத்திக்கொண்டு வருவான். அம்மா வாசலிலேயே நின்று உபசரிக்க வேண்டும். இல்லையென்றால் அன்று பட்டினிதான். பள்ளிக்கே வந்து அழைத்தாலும் போக மாட்டான். அப்படியொரு பிடிவாதம் பாலை பள்ளி விட்டதும் அப்பா கவலையோடு அவனுக்காகக் காத்திருந்து அழைத்துச் சென்று பரிமாறுவார். மதியத்தின் பிடிவாதம் மதியத்தோடு சரி. மாலையில் அதைப் பற்றிய நினைவே இராது. இப்படியொரு குணம் அவனுக்கு.



அவனைத் தறுதலை என்று எல்லாரும் முடிவு கட்டிவிட்டதால் மற்றவர்கள் செய்யும் குற்றமும் அவன் தலையில் வந்து விடியும். அவனும் அதற்காகக் கலங்க மாட்டான்; காட்டிக் கொடுக்கவும் மாட்டான். பள்ளியில் எந்தச் சிறுவனாவது தவறு செய்துவிட்டுத் தண்டனைக்குப் பயந்தால், தாராளமாக அவன் பக்கம் கைகாட்டிவிட்டு நிம்மதியடையலாம். ஆனால், இந்த விஷயத்தில் முதலில் அவனுடைய அனுமதி பெறுவது அவசியம். கோழைச் சிறுவர்களுக்கு அதைப் பெறுவது ஒன்றும் கஷ்டமான காரியமே அல்ல அவன் அதற்கான தண்டனையைப் பெற்றுக்கொள்வான். ஆனால், எவனாவது அவனுக்கு நன்றி சொல்ல வந்தானோ, தொலைந்தான். ''உன் நன்றியைக் கொண்டுபோய் நாய்க்குப் போடடா,'' என்று காறியுமிழ்ந்துவிடும் கம்பீரம் அவனுக்கே உரியது.

அவன் ஒரு சிறந்த வீரனே.

படிப்பகம்

www.padippakam.com



நாளையைப் பற்றி எனக்கொன்றும் கவலையில்லை. நான் நேற்றைப் பார்த்தவன். இன்றை நேசிப்பவன்.

—வில்லியம் அலன் ஒய்ட்

ஆனால் விவேகம் இல்லாத வீரம் அவனுடையது. அவனைப் பெற்றவர்களுக்குப் பெரிய கழுத்தறுப்பான விஷயம் இது. அவனுக்கு யாரும் ஆறுதல், அறிவுரை, கருணை, கண்ணீர் போன்ற மலிவான சரக்குகளை மடிப் பிச்சை போட முனையக் கூடாது. பிறருடைய இரக்கத்திற்கு ஆளாகி நிற்பது இழிவல்லவா? அந்த இழிவை இன்று கொடுத்தவள் அவள் அல்லவா?

''அவளை ஒரு கை பார்த்துக்கிறேன்,'' என்று மீண்டும் கறுவிக்கொண்டான்.

அவனைத் தேடிக்கொண்டு அவனுடைய பாட்டி அங்கே வந்தாள். அம்மா வீட்டுப் பாட்டி அவள். அப்பா அடித்து விரட்டும் பல சமயங்களில் அந்தப் பாட்டி வீட்டில்தான் சாப்பாடு, படுக்கை எல்லாம்.

''பொன்னு, இங்கேயாடா இருக்கிறே? அடப்பாவி! பிள்ளையை இப்படியா அடிக்கிறது? உன் அப்பாவுக்குக் கடவுள் கண்ணைக் குடுத்தும் பார்வையைக் கொடுக்க மறந்திட்டார்டா,'' என்று பதறினாள்.

''சும்மா இரு பாட்டி. நீ ஏன் இங்கே வந்தே?''

''ஏன்டா அதட்றே? கமலா சொல்லாட்டி நான் எங்கெல்லாம் அலைஞ்சிருப்பேன்? நல்ல பொண்ணு. ஓடியாந்து சொன்னாள்.''

''ஓகோ! அவதான் சொன்னாளா? நான் நினைச்சேன். இருக்கட்டும்.''

''அப்படிச் சொல்லாதடா. அவ உனக்கு ஒன்னுவிட்ட மாமா பொண்ணுடா. அவ வீட்டையுந்தான் உங்க அப்பா பகைச்சிக்கிட்டாரு. இனிமே உன் காலத்திலேதான் ஒன்னு சேரணும். சரி, வா. வீட்டுக்குப் போகலாம்.''

''எனக்கு வரத் தெரியும். நீ போ.''

''என் கூடவே வாயேன்.''

''போன்னா போயிடு.''

பாட்டி பேசாமல் திரும்பி விட்டாள்.

பொன்னரசன் எழுந்து சென்று குளித்தான். கிணற்றை விட்டு மேலேறியதுமே அவனுடைய அலட்சியமும் கம்பீரமும் புதிய உற்சாகத்துடன் அவனை ஆட்கொண்டன. ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்துக் கொண்டே பாட்டி வீட்டுக்குக் கிளம்பினான்.

வீட்டை நெருங்கும்போதே வாசலில் நின்றுகொண்டிருந்த கமலாவைப் பார்த்துவிட்டான். அவள் உள்ளே ஓடி, ''பாட்டி, அத்தான் வர்றார்,'' என்று சொல்லிவிட்டு வெளியே

படிப்பகம்

www.padippakam.com

வந்தாள். அவன் மறித்துக் கொண்டான்.

''ஏய், நான் மண்டபத்திலே இருக்கேன்னு நீதானே பாட்டிக்கிட்டே சொன்னே?''

அவள் மௌனமாக நின்றாள். அவள் உடம்பு நடுங்கிக் கொண்டிருந்தது. பொன்னரசன் மகிழ்ந்து கொண்டான்.

''உம். இன்னொரு தடவை சொல்லு. தோலை உரிச்சிடறேன்.''

அவள் அவனைக் கடந்து செல்லும் போது, ''முரடு,'' என்று கிசுகிசுத்துவிட்டு ஓடினாள். இப்போது அவனுக்குக் கோபம் வரவில்லை. உண்மையில் அவன் ஒரு முரடன்தானே? தறுதலையல்லவே? இது அவன் சிந்தாந்தம்.

பாட்டி அவனுக்குப் பரிமாறும்போது, ''கமலா ஓடியாந்து 'அத்தானை மாமா அடிச்சிட்டார் பாட்டி'ன்னு சொல்லிப் பிழியப் பிழிய அழுதிட்டாடா. நீ அவளை மிரட்டாதே. உன் கிட்டே அவளுக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? உன்னோட அம்மாவும் அவளோட அம்மாவும் உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணிடறதா இரகசியமா திட்டம் போட்டிருக்காள்கடா. நீதான் அவளைக் கட்டிக்கப் போறே,'' என்றாள்.

''போ, பாட்டி.''

''என்னடா, பொம்பளையாட்டம் வெட்கம்? அவளுக்கு உன்னைத்தான் கட்டிக்க ஆசை. அவளைப் பாத்தியா? கொள்ளை அழகு.''

''நான் ஒன்னும் அவளைப் பார்க்கமாட்டேன், போ.''

அவன் ஓடிவிட்டான்.

மறுநாள் மாலை மீண்டும் அந்தக் கல்மண்டபத்தில் அவன் தென்பட்டான். தெளிவற்ற அவன் நினைவோட்டங்கள் தெளிந்தன போலவும் தெளியாதன போலவும் அவனை மயக்கின. இன்று அடிபட்டு வரவில்லை. அப்போது முதல் நாளைப்போலவே திடீரென்று மழை பெய்யத் தொடங்கியது. சற்று நேரத்தில் சொல்லி வைத்தாற்போல் கமலா அங்கு ஓடி வந்தாள். வயலுக்குச் சென்று வீடு திரும்பும் அவள் மழைக்கு ஒதுங்க வந்தாள்.



அவளைக் கண்டதும் ஏனோ அவன் குதூகலப்பட்டான். அவள் உண்மையிலேயே அழகாகத்தான் இருந்தாள்; பூங்கொடியைப் போல, புதுக் கனவைப் போல. அடிக்கொரு தடவை அவள் சடைக்கண்கள் மின்னலைக் கொட்டிக்கொண்டிருந்தன.

''ஏய், இங்கே வா,'' என்றான். அப்பொழுதுகூட அந்த 'ஏய்'தான். அதிகாரம் செய்வதில் அவனுக்கு நிகர் அவனே. அவள் குறுகுறுப்போடு அவனை ஏறிட்டு நோக்கி 'வரமாட்டேன்' என்னும் குறிப்போடு தலையை அசைத்தாள்.

''ஏன் வர மாட்டே?''

''அடிப்பீங்க.''

படிப்பகம்


www.padippakam.com

"இல்லே. நான் அடிக்க மாட்டேன். பக்கத்திலே வா."

"ஊஹூம். பக்கத்திலே வந்ததும் அடிப்பீங்க. நான் மாட்டேன். மழை நின்னதும் ஓடிடுவேன்."

"மழை நிக்காட்டி?"

"நனைஞ்சிக்கிட்டே கூடப் போயிடுவேன்."



அவன் மௌனமானான். ஆனால், மறு நிமிஷம் துள்ளிக் குதித்தவனாய், "ஐயோ! தேள்! தேள் கொட்டிடுச்சே," என்று அலறினான்.

கமலா மின்னலைப்போல் பாய்ந்து, "எங்கே? எங்கே?" என்று கேட்டு அவன் கையைப் பற்றினாள். அவன் சட்டென்று அவளைப் பற்றிக் கொண்டு சிரித்தான்.

"ஆகா! அகப்பட்டுக்கிட்டியா? இனி எப்படி ஓடுவே?"

கமலா திகைத்துவிட்டாள். அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது.

"விடுங்க என்னை. ஆளைப் பாரு," என்று சீறினாள்.

பொன்னரசன் அவளை உற்று நோக்கினான். பிறகு மெதுவாக அவளை விடுவித்து விட்டு, "நான் இனிமே உன்னைத் தொடமாட்டேன். நீ போ," என்று சொன்னான். சொன்ன மாத்திரத்தில் அச்சமுற்ற குழந்தையைப்போலத் தன் தலையைக் கவிழ்த்துக் கொண்டு அழுதான். ஏன்?... அவனுக்கே தெரியவில்லை.

கமலா விக்கித்து நின்று போனாள். மெல்ல அவனருகில் அமர்ந்து, அவன் கைகளைப் பற்றி, "அத்தான்," என்றாள். அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது.

"நான் உன்னைத் தொட மாட்டேன். நீ போ. என்னை எல்லாரும் வெறுக்கிறாங்க. எனக்கு யாரும் வேணாம்."

"நான் சொன்னது தப்பு, அத்தான். இங்கே பாருங்க. நான் உங்களை வெறுக்கலே. இதோ, என் கையைப் பிடிச்சுக்கங்க. நான் உங்களைத் தடுக்கலே. என் மேலே கோபம்னா அடிச்சிடுங்க. சந்தோஷமா பட்டுக்கறேன்."

கமலா அழுதாள். பொன்னரசன் தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "நீ அழாதே. நான் உன்னைக் கோபிக்கவே இல்லே," என்று சொல்லி அவள் கண்ணீரையும் துடைத்தான்.

அவர்கள் இப்போது அழவில்லை. ஆனால், கேவல் மட்டும் இன்னும் நிற்கவில்லை. இருவரும் வெகு நேரம்வரை பேசாமல் அமர்ந்திருந்தனர். அந்த மண்டபத்தில் இரண்டு ஜீவன்கள் தூய அன்பின் முழுக் கனிவோடும் நெஞ்சினுடைய பரந்த கைகளின் பூரணத் தழுவலோடும் மௌனமாக ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருந்தன.

பொன்னரசன் நீர்த்திரை படிந்த கண்களோடு மெல்ல

படிப்பகம்

www.padippakam.com



புள்ளி விவரங்கள் பொய் சொல்வதில்லை. ஆனால் பொய்யர்கள் புள்ளி விவரம் சொல்வதுண்டு. —க்ராஸ்வெனர்

நகைத்தவனாய். "கமலா," என்று அழைத்தான். அவள் பார்த்தாள்.

"என்மேல உனக்குக் கோபம்தானே?" என்றான்.

"இல்லவே இல்லை."

அவள் இப்போது வெட்கப் படவில்லை. அவள் முகத்தில் சிரிப்பில்லை; வருத்தமும் இல்லை ஏதோ எல்லாம் தெரிந்து, எதற்கும் சித்தமாகி விட்டவளைப் போலத் தோன்றினாள்.

"நான் உன்னை அடிக்கவே மாட்டேன்," என்றான்.

"ஏன்?"

"ஏனோ, மாட்டேன்."

"அப்படீன்னா நான் சொல்றதைக் கேட்பீங்களா?"

"சொல்லேன்."

"நீங்க இனிமே எந்தத் தப்பும் பண்ணக்கூடாது."

"அதெப்படி? முந்தாநாள் அந்தக் கிழவன் என்னைத் தறுதலைன்னான். அதைக் கேட்டுக்கிட்டுச் சும்மா இருக்கணுமா?"

"அதுக்காக வாழை மரங்களைச் சீவி எறியலாமா? பாவமில்லையா?"

"ஆமாம். வாழை மரங்களைச் சீவியிருக்கக் கூடாது. உண்மையா அவன் தலையைச் சீவி எறிஞ்சிருக்கணும்."

"அத்தான்!" என்று மருண்டவளாய் அவன் வாயைப் பொத்தினாள். பொன்னரசன் அவள் கையைப் பற்றிக் கொண்டு, "பயப்படாதே, அவன் தலையைச் சீவக்கூடாதுன்துதான் வாழை மரங்களைச் சீவினேன்," என்றான்.

"அது மாதிரியே என்னையும் ஒருநாளைக்குச் சீவிடுவீங்க இல்லையா?"

"அதுதான் சொன்னேனே, உன்னை அடிக்கவே மாட்டேன்னு. அப்புறம் சீவுறது எங்கே?"

"ஆனா எனக்கென்னவோ நீங்க சீவினாலும் சந்தோஷந்தான்."

பொன்னரசன் சற்றுத் தயங்கினான். பிறகு கேட்டான்.

"கமலா, நேத்து பாட்டி என்ன சொன்னாங்க தெரியுமா?"

"என்னவாம்?"

"நீ...நீ..."

"சொல்லுங்களேன்."

"என்னைத்தானே கட்டிக் கொள்வியாம்?"

"ஐய, போங்கள்," என்று முகத்தை மூடிக்கொண்டாள்.

ஃ ஃ ஃ

பொன்னரசன் வெகுவாக மாறிவிட்டான். அவன் வீரத்தில் ஒரு விவேகமும் சம்பீரத்தில் ஒரு லட்சியமும் பூத்து விட்டாற் போல் தோன்றியது. இப்பொழுதெல்லாம் அவன் எந்த வம்புக்கும் போவதில்லை. தான் செய்யும் எந்தக் காரியமும் குற்

படிப்பகம்

www.padippakam.com

நமாகிவிடக் கூடாதே என்று தயங்கித் தயங்கி, யோசித்து யோசித்துச் செய்தான். கமலாவிடம் ''அதெப்படி?'' என்று கேட்டுவிட்டானே தவிர, உண்மையில் அவளுடைய வேண்டுகோளே அவனுடைய கைகளைக் கட்டுப்படுத்திவிட்டது. ஆனால், பழைய பொன்னரசனும் அவனாகவே இருந்ததால் பிறர் செய்து அவன் தலையில் வந்து விடியும் குற்றங்கள் ஒன்றிரண்டு நிகழத்தான் செய்தன. அப்பொழுதெல்லாம் கமலா அவனுக்காக அழுவாள். அவளை அழவைத்து விட்டோமே என அவனும் அழுவான்.

இப்படி முதல் முறையாக ஒரு பெண்ணின் முன்னால் அழக் கற்றுக் கொண்டதன் மூலம் தன் சிறுமைகளைத் தூக்கி யெறிந்துவிட்டுச் சிறப்புகளைத் தேடி நடக்கத் தொடங்கினான். எப்படி நடந்து கொண்டால் கமலா இன்புறுவாள் என்று எண்ணி எண்ணிச் செய்தான். உண்மையும் நன்மையும் தவிர வேறொன்றும் தெரியாத பேதைச் சிறுமி அவள் அவனுக்காக ஒரு புதிய பொன்னரசனே பிறந்து விட்டான்.

அவர்கள் சந்திக்கும் ஒவ்வொரு தடவையும் கமலாவின் மதிப்பீட்டில் பொன்னரசன் உயர்ந்துகொண்டே போனான். சில சமயங்களில் தான் ஒரு கோழையாகிவிட்டதாக எண்ணிக் கோபம் கொள்வான். அவளுடைய கொஞ்சலும் கெஞ்சலும் அந்தக் கோபத்தைக் குலைத்துவிடும். அப்படிக் குலைக்கப்படுவதே அவனுக்கு ஆனந்தமாகிவிடும்.



ஒரு நாள் கமலா அவனைத் தேடி வந்தபோது, எடுத்த எடுப்பிலேயே, ''எனக்குச் செத்திடலாம் போல இருக்கு,'' என்று சொன்னாள்.

''ஏய், இதென்ன பேச்சு?'' என்று அதட்டினான்.

''இல்லை அத்தான். இன்னிக்கு அம்மா என்னைத் திட்டினாங்க. நான் பிறந்ததிலே இருந்து செலவுதான் கொண்டு வர்றேனாம்,'' என்று சொல்லி அழுதாள்.

''இப்ப என்ன செலவு வந்திருச்சாம்?''

''என் உள்நாக்கு வளர்ந்திருச்சாம். அதுக்கு ஆபரேஷன் செய்யப் போறாங்க.''

''உண்மையாவா?''

''ஆமாம். நாளைக்கு நான் ஈரோடு போறேன்.''

அதாவது, கமலா அவனிடம் சொல்லிக் கொள்ளவே வந்திருந்தாள்.

இருவர் குடும்பத்துக்கும் இடையே பேச்சு வார்த்தை இல்லை. நாளை அவள் போகும்போது அவன் பார்க்க முடியாது என்பதால் முன்கூட்டியே சொல்லிக்கொள்ள வந்திருந்தாள்.

''கமலா, திரும்பவும் உன்னை என்னிக்குப் பார்க்கிறது?'' என்றான்.

படிப்பகம்

www.padippakam.com

"அதுதான் எனக்கும் தெரியலே. ஆனா, நீங்க நல்லா படிச்சு பெரிய மனுஷரா வரணும். இன்னிக்கு வெறுக்கிறவங்களெல்லாம் ஒரு நாளைக்கு உங்களைக் கொண்டாடணும். எங்கே, நடந்துக்கறேன்னு என் கையிலே அடிச்சுச் சொல்லுங்க," என்றாள்.

பொன்னரசன் அவள் கையைப் பற்றிக்கொண்டு, "இப்போ நான் ஒரு தப்பும் பண்றதில்லேங்கிறது உனக்குத் தெரியாதா?" என்றான். கமலா கரகரவென்று கண்ணீர் உகுத்தவளாய், "நான் தப்பு செஞ்சிருந்தா மன்னிச்சுக்கங்க, அத்தான்," என்றாள்.

"ஏன் இப்படியெல்லாம் பேசறே? இப்ப என்ன வந்திடுச்சு?"

"என்னமோ. உங்க பக்கத்திலே இருந்தா எனக்கு ஒரு பயமும் இல்லே. இப்போ உங்களை விட்டுட்டுப் போகப் போறேன். உங்களுக்குத் தெரியலியா? என்னைப் பாருங்க. நான் உங்களுக்கு ஒண்ணும் செய்யலே. நான் சின்னவ. இப்ப எனக்கு ஒரு வெக்கமும் இல்லே. உங்களுக்கு நான் என்ன செய்யணும்? சொல்லுங்க."

"நீ என்னோட கமலாவாகவே இருக்கணும்."

கமலா சட்டென்று அவனைக் கட்டிக்கொண்டு, அவன் கன்னங்களில் மாறி மாறி வெறியோடு முத்தமிட்டுவிட்டு, அழுதுகொண்டே, அங்கிருந்து ஓடிவிட்டாள்.

"கமலா, கமலா," என்று கூவினான் அவன்.

"நான் போறேன்," என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள்.

கமலா ஈரோட்டுக்குச் சென்று விட்டாள். பொன்னரசன் எதிலும் பிடிப்பில்லாமல் ஊரைச் சுற்றிச் சுற்றி வந்தான். அவன் என்ன செய்தாலும், எதை நினைத்தாலும் அதைப் பார்க்கவும் பாராட்டவும் அங்கே ஒரு ஜீவனில்லை. கமலாவுடன் ஈரோடு சென்றிருந்த அவனுடைய பாட்டி மூன்று நாட்களுக்குப் பிறகு ஊர் திரும்பினார். கமலாவுக்கு ஆபரேஷன் நடந்துவிட்டதாம். சுகமாகவே இருக்கிறாளாம்.

"அவ்வளவுதானா, பாட்டி?" என்றான்.

"உன்னைக் கவனமாப் படிக்கச் சொன்னா. உன்னைப் பத்தி ரொம்பப் பெருமைப்பட்டுக்கிறா."

அதன் பிறகு கமலாவின் உடல் நிலை பற்றி பார்த்து வந்து சொல்வதற்கு யாரும் இல்லை. நாட்கள் ஒவ்வொன்றாய்க் கழிந்தன. கமலாவைப் பற்றியும் புதிது புதிதாய் அவனுள் கவலை வளர்ந்தது. கமலா அவனை விட்டுப் பிரிந்தபோது ஏன் அவ்வளவு சஞ்சலப்பட்டுக் கலங்கினாள்? அதை நினைக்க அவன் மனம்

படிப்பகம்

www.padippakam.com

வெற்றி என்பது பயணம் தான்; எல்லையல்ல.

—பென் ஸ்வீட்லாண்ட்

பரிதவித்தது.

இரண்டாண்டுகளுக்கு முன் அந்த ஊரிலிருந்து ஈரோட்டுக்குச் சென்று ஒருவர் ஆபரேஷன் செய்து கொண்டார். ஆபரேஷனுக்குப் பிறகு அவர் நன்றாகவே இருந்ததாகச் சொன்னார்கள் ஆனால், அவர் மீண்டும் அந்த ஊருக்குத் திரும்பி வரவில்லை.

முற்றும் எதிர்பாராமல் இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்ததும் அவன் இடிந்து போனான். ஏன் இதை நினைக்க நேர்ந்தது? ஐயோ, கமலாவுக்கு ஒன்றும் வரக்கூடாது.

பொன்னரசன் என்ன செய்வதென்று தெரியாமல், ஒன்றும் புரியாமல், உன்மத்தம் பிடித்தவனைப் போல அலைந்தான். அந்த ஊரிலிருந்து ஈரோடு பத்து கிலோமீட்டர் தூரமே. போய்ப் பார்த்துவிட்டு வரலாமா என்று நினைத்தான். ஆனால், அவன் எப்படிப் போவது? அப்படி போவதே ஒரு குற்றமாகக் கருதப்பட்டால் என்ன செய்வது என்று குழம்பினான். கமலாவை பார்க்கப் போவது முடியாத காரியம் என்று அவன் முடிவு செய்த போது அதுவே பேரிழப்பாக அவனை வாட்டியது. அவன் தன் கால் போனபடியெல்லாம் சுற்றியலைந்தான்.

ஒரு நாள் அவ்வாறு அலைந்து அலைந்து முடிவில் களைத்துப்போய் நடையை நிறுத்திக் கொண்டபோது, ஊர் எல்லையில் உள்ள பிடாரியார் கோயில் முன் அவன் நின்று கொண்டிருந்தான். அப்போது உச்சி வேளை. வெறிச்சோடிக் கிடந்த பொட்டல் வெளியில் கோடைக் காலத்து அனல் காற்று அலையலையாய் வீசிக்கொண்டிருந்தது.

பொன்னரசன் கோயிலையே பார்த்துக்கொண்டு நின்றான். முண்டும் முடிச்சுமாய்க் காட்டில் கிடந்த கற்களைப் பொறுக்கி எடுத்துக் கோயிலுக்குச் சுற்று மதில் எழுப்பியிருந்தார்கள். கோயிலின் முற்றத்தில் வரிசையாக வேல்கள் நடப்பட்டிருந்தன. மண்ணில் செய்து சுட்டு, வண்ணம் தீட்டப்பட்ட இரண்டு பூதகணங்கள் கோயிலின் இரு மருங்கிலும் சிங்கப் பற்களைக் காட்டிக்கொண்டு உக்கிரமாகக் காட்சியளித்தன. மதிலைச் சுற்றிச் சில இலந்தை மரங்கள் இலை யுதிர்த்து, கொக்கி முள்களைக் குடை போல் சுமந்துகொண்டு கோயிலைக் காவல் புரிந்தன. தகிக்கும் வெயிலில் கோயிலே ஒரு பலிபீடம் போலக் காட்சியளித்தது.

அந்தத் தெய்வம் மிகவும்

படிப்பகம்

www.padippakam.com

சக்தி வாய்ந்தது என்பது ஊராரின் நம்பிக்கை. ஆண்டுக்கொரு முறை அக்கோயிலில் பொங்கலும் பூசையும் சிறப்பாக நடக்கும். இந்த ஆண்டு நடக்க வேண்டிய அந்த விழாவுக்கு இன்னும் மூன்றே நாட்கள்தான் உள்ளன என்ற உண்மை அப்போது அவன் நினைவுக்கு வந்தது.

பொன்னரசன் யோசித்தான்.

"இன்று கமலாவுக்குச் சுகமில்லை. அதற்காக நான் தெய்வத்தை வேண்டிக் கொள்ளணும். வேண்டிக் கொண்டா மாத்திரம் போதாது. எல்லாரும்தான் வேண்டிக்கிறாங்க. தெய்வம் எல்லாத்தையுமா நிறைவேத்திடுது? இல்லையே. அதுபோல என் வேண்டுகோளையும் தெய்வம் சாதாரணமாக நினைச்சு ஒதுக்கிட்டா? அப்படி ஆயிடக்கூடாது. அதுக்காக தெய்வத்துக்குத் தனி அக்கறை உண்டாகும்படி நான் ஏதாவது செய்தாகணும். ஏன்? இப்படிச் செய்தால் என்ன? இவ்வளவு சக்தியுள்ள தெய்வம் இப்படிப் பொட்டல் காட்டிலே நாதியற்ற மாதிரி இருக்கிறதே. எங்க மேய்ச்சல் நிலத்திலே கொண்டு போய் வச்சு, பக்தியோட கும்பிட்டா தெய்வத்தோட மனசு குளிருமே? என் கமலாவை எனக்குக் காப்பாத்திக் கொடுக்குமே?"

பொன்னரசன் கோயிலில் நுழைந்து பூட்டைப் பிடித்து உலுக்கினான். பூட்டு திறந்து கொண்டது 'ஆகா! நான் செய்யப்போற காரியம் தெய்வத்துக்குச் சம்மதம்தான்' என்று மகிழ்ந்தவனாய், கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். தெய்வம் எண்ணெய்க் களிம்பேறிக் கருமையாய்க் காட்சியளித்தது. பொன்னரசன் தன் இரு கைகளாலும் வலுவாய்ப் பிடித்து அசைத்தான். முதல் அசைப்பிலேயே வந்துவிட்டது. தெய்வம் அவ்விடத்தில் தானாகவே முளைத்துக் கோயில் கொண்டதாக ஊர் மக்கள் சொல்லிக் கொள்வதுண்டு. ஆனால், அவன் கைகளில் நட்டு வைத்த கல்லைப் போல் வந்துவிட்டதே!

தெய்வத்தைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு வெளியே வந்தான். நெஞ்சு படபடக்க நாற்புறமும் நோக்கினான். கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரு காக்கை குருவிகூடத் தென்படவில்லை. உடனே தெய்வத்தைத் தூக்கிக் கொண்டு ஓட்டமும் நடையுமாய் மேய்ச்சல் நிலத்துக்கு வந்தான். நிலத்தின் நடுவே கிழக்கு மேற்கில் குறுக்காகப் போடப்பட்டிருந்த கரையில் வேப்ப மரங்கள் வரிசையாய் நின்றன. பூவின் மணமும் குளுமையும் அங்கே சுகமாய் இழைந்தன. கிழக்கோரத்தில் உள்ள மரத்தருகே இருந்த கிளுவைப் புதருக்கடியில் பொன்னரசன் தெய்வத்தை இறக்கி

படிப்பகம்

www.padippakam.com



கஷ்டப்படுகிறாயா? கடவுளுக்கு நன்றி சொல். நீ இன்னும் உயிரோடு இருக்கிறாய் என்பதற்கு இதுவே சான்று.

—எல்பர்ட் ஹப்பார்ட்

னான். ஒரு குச்சியால் குழி பறித்து, தெய்வத்தை நட்டு வைத்து, அதைச் சுற்றிலும் சிறு சிறு கற்களைக் கொண்டு மேடை அமைத்து, அதன் முன்னால் படையல் போடுவதற்கு வசதியாக ஒரு படிக்கல் போட்டான். இனி, பூசை செய்ய வேண்டியதுதான். தன் கால் சட்டைப் பையில் கையை விட்டுத் துழாவினான். அன்று காலை அவனுடைய அம்மா கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டு அவன் அலைந்த அத்தனை அலைச்சலிலும் தொலையாமல் பத்திரமாக இருந்தது. உடனே அருகில் இருந்த மற்றொரு கிராமத்திற்கு ஓடி, பூசைக்கு வேண்டிய சாமான்களும் மீதிக் காசுக்கு ஒரு மண் பானையும் வாங்கிக்கொண்டு, திரும்பும் வழியில் ஒரு குளத்தில் குளித்துவிட்டு, குளக்கரையில் பூத்திருந்த காசரளிப் பூக்களைப் பறித்து ஈரத் துணியில் கட்டிக்கொண்டு, புதுப்பானையில் நீர் முகந்து கொண்டு ஓடி வந்தான்.

தெய்வத்தைப் புதுப்பானையில் குளிப்பாட்டி, குங்குமம் இட்டு, பூக்களைத் தூவி, ஊதுபத்தியைக் கொளுத்திப் பழத்தில் குத்தி வைத்துவிட்டு, கற்பூரத்தைக் கொளுத்தி, அதில் தேங்காயைக் காட்டி உடைத்து வைத்தான். பூசைக் காரியங்கள் முடிந்தன. அவன் தன் கைகளைக் கூப்பி, ''தெய்வமே, உன்னை நான் பக்தியோடு கும்பிடறேன். என் கமலா ஒரு குழந்தை. அவளைக் காப்பாத்த வேண்டியது உன் பொறுப்பு,'' என்று நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான். தெய்வத்திற்கு இட்டது போக மீதியிருந்த குங்குமத்தில் கொஞ்சம் எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டு, மீதியை மடித்து, ''இது கமலாவுக்கு,'' என்று பத்திரப்படுத்திக் கொண்டான்.

அங்கிருந்து நேரே தன் பாட்டி வீட்டுக்குச் சென்றான்.

''பாட்டி, நீ ஈரோடு போவியா?''

''ஏன்டா? நாளைக்கு இருட்டோட புறப்பட்டுப் போயி கமலாவைப் பார்த்துட்டு வரலாம்னு இருக்கேன். அவளைப்பத்தி ஒன்னும் தெரியலே. சாதாரணமா இருந்தா ரெண்டொரு நாள்லே அவளை ஆஸ்பத்திரியிலேருந்து வீட்டுக்கு அனுப்பிச்சிடுவாங்க. எதுக்கும் நான் போயி பார்க்கணும்.''

''கமலாவுக்கு சீக்கிரம் குணமாயிடும், பாட்டி.''

''குணமாகணும்டா. அதெப்படி உனக்கு அவ்வளவு நிச்சயமா தெரியும்?''

''நான் கமலாவுக்காக சாமியை வேண்டிக்கிட்டேன்.

படிப்பகம்

www.padippakam.com

நிச்சயமா குணமாயிடும்னு தோணுது. கமலாவுக்காக இதோ குங்குமம்கூட எடுத்துக் கிட்டு வந்திருக்கிறேன். இதை அவளுக்குக் கொடுத்திடு, பாட்டி''

குங்குமத்தை அவனிடமிருந்து வாங்கிக் கொண்ட பாட்டி தீர்க்கமாக அவனைப் பார்த்தாள். அவனுடைய மனத்தைத் தன் முகத்தில் ஏந்திக் கொண்டு நின்றான். அதைக் காண பாட்டிக்கு உள்ளூர மகிழ்ச்சி. அவனே மீண்டும் பேசினான்:

''பாட்டி, எனக்கு இன்னொரு உதவியும் செய்யறியா?''

''என்னடா?''

''நான் தினம் தினம் சாமியை வேண்டிக்கறேன். அதனாலே சீக்கிரம் குணமாயிடுவே. கவலைப் படாதேன்னு கமலாவுக்குக் கடுதாசி எழுதித் தர்றேன். கொடுத்திடுறியா?''

பாட்டி அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள். குழந்தைத் தன்மான இந்த ஆசையொன்றே பார்வையில் தேங்கி நிற்க ஆவலோடு அவள் பதிலுக்காக நின்றான். பாட்டி அவனைக் குறும்புத்தனமாகப் பார்த்து, ''இதை மட்டுந்தான் எழுதுவியா? வேறே எதையாவது கூட எழுதுவியா?'' என்றாள்.

''இது மட்டுந்தான், பாட்டி. வேறே ஏதாவது எழுதணும்னு சொன்னா அதையும் எழுதறேன். என்ன எழுதணும்?'' என்றான்.

அவனுடைய கவனம் பூராவும் கமலா என்னும் குழந்தையிடமே ஒருமைப்பட்டுக் கிடந்தது. சமமான ஒரு பெண்ணாகப் பாவிக்கிறானா என்பது அவனுக்கே விளங்காத விஷயம்.

''வேறு ஒன்னுமில்லேடா. நீ நினைக்கிறதையே எழுதிக் கொடு. கொடுத்திடறேன்,'' என்றாள் பாட்டி.



பொன்னரசன் அவ்வாறே ஒரு கடிதம் எழுதினான். அத்துடன், தான் கோயிலிலிருந்து சாமியைக் கொண்டுவந்து சிலுவைப் புதருக்கடியில் வைத்திருக்கும் விஷயத்தையும் இரகசியமாக வெளியிட்டிருந்தான். ''இதை உனக்கு மாத்திரம் தான் சொல்கிறேன். காரணம் உனக்காகவே அதைச் செய்தேன்,'' என்று கடிதத்தை முடித்து பாட்டியிடம் கொடுத்துவிட்டுக் கிளம்பினான்.

இரவு பொன்னரசன் நிம்மதியாகத் தூங்கினான். மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து வயலுக்குச் சென்றான். அவனுடைய பாட்டி ஈரோட்டுக்குப் போயிருப்பாள் என்பதையும் நினைவு கூர்ந்தான். மனம் அதிசயமான அமைதியில் திளைத்தது. தன் தந்தைக்கு ஒத்தாசையாகக் கொஞ்ச நேரம் வயல் காரியங்களைக் கவனித்தான். அவனுடைய தந்தையும் என்றுமில்லா

படிப்பகம்

www.padippakam.com



எத்தனை தேவையாய் இருந்தாலும், எத்தனை நியாயமாய்த் தோன்றினாலும் போர் என்பது ஒரு பாதகம் என்பதை மறவாதே.

—எர்னஸ்ட் ஹெமிங்வே

தபடி அவனிடம் அன்பாகச் சில வார்த்தைகள் பேசினார்.

அவனுடைய உள்ளம் அமைதியாகத்தான் இருந்தது. ஆனால், அந்த அமைதி நேரம் ஆக ஆக ஒரு சூனியம் போல அவனை மிரட்டத் தலைப்பட்டது. அதற்கேற்றாற்போல் அவன் வீடு வரும்போது ஊரே அல்லோலப்பட்டுக் கிடந்தது.

அன்று காலை கோயிலுக்குச் சென்ற பூசாரி அலறியடித்துக் கொண்டு ஓடி வந்து, 'போச்சு! கோயில்லே சாமியைக் காணோம்,'' என்று கூச்சலிட்டான்.

ஊரே திரண்டுவிட்டது.

பீதியும் அதிசயமுமாக ஊர் இரண்டு பட்டது.

பொன்னரசன் இதை எதிர்பார்க்கவில்லை. ஆசையோடு தான் செய்த காரியம் ஊரில் இத்தனை பரபரப்பை, பரிதவிப்பை மூட்டிவிடும் என்று அவன் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. இந்தச் செய்தியை அவனுடைய தந்தை கேள்விப்பட்டதும்,

''என்ன அதிசயம்! சாமி எங்கே போயிருக்கும்? எவன் திருடியிருப்பான்? திருடியிருந்தா திருடினவன் கண் அவிஞ்சி போயிருக்க வேணாமா?'' என்று ஆச்சரியப்பட்டார். பொன்னரசன் கண்களில் மின்னலைப் பாய்ச்சி விழியைப் பிழிவது போல் இருந்தது. அவன் இமைகள் படபடத்தன. அவன் கண்கள் குருடாகவில்லை. அவன் திருடனல்லவே!

செய்தி கொண்டு வந்தவன், ''யாரும் திருடியிருக்கமுடியாதுங்க. சாமிதான் கோவிச்சுக்கிட்டு எங்கோ போயிருக்கணும்,'' என்றான். பொன்னரசன் விடுவிடென்று வீட்டுக்கு வந்துவிட்டான்

அம்மாவின் பிடிவாதத்துக்காகச் சாப்பிட்டான். அப்போது, ''சாமி ஏன் பிணங்கிக்கிட்டுப் போகணும்?'' என்று கேட்டான்.

''இந்த வருஷம் விளைச்சல் சரியா இல்லேன்னு பூசையைச் சிக்கனமா செஞ்சா போதும்னு பேசினாங்களாம். அதனாலேதான் பிணங்கிக்கிட்டுப் போயிடுச்சு. இதனாலே ஊருக்கு என்ன கேடு வருமோ.''

''என்ன வரும்?''

''என்ன வருமோ. எண்ணெயும் கரண்டியுமா மாரியாத்தா ஊரிலே நுழைஞ்சா, எல்லாரையும் அள்ளிக்கிட்டுப் போயிட மாட்டாளா! ஏன்டா எழுந்திட்டே? சரி, சரி, கையைக் கழுவு. பிள்ளை பயந்திட்டான்.''

பொன்னரசன் உண்மை

படிப்பகம்

www.padippakam.com

யைச் சொல்லிவிடலாமா என்று நினைத்தான். சொன்னால் சும்மா விடுவார்களா? அடிப்பார்கள். அவன் எங்கே போய் அழுவான்? அவன் அழுவதற்கும் ஆறுதல் பெறுவதற்கும் கமலா இங்கில்லையே? அவளுக்காகச் செய்த செயலல்லவா இது? இதைச் சொல்லிவிட்டால் அவன் என்றைக்கும் தறுதலையாகவே நின்று விடமாட்டானா? கமலா அதைச் சம்மதிப்பாளா?

முதல் தடவையாகக் குற்றமென்று தெரியாமலேயே இந்தக் குற்றத்தைச் செய்துவிட்டு அதை மூடி மறைத்துவிட வேண்டும் என்றும் தீர்மானித்தான்.

மனிதர்கள் சொல்லும் விவேகம் என்பது இதுதான் இல்லையா?

ஊர் மக்கள் கூட்டம் போட்டனர். ஊரே திரண்டு நாலா திசைகளிலும் தெய்வத்தைத் தேடியது. அன்னந்தண்ணீரை மறந்து, காடு மேடுகளிலெல்லாம் தேடியலைந்தார்கள். ஆனால் தெய்வம் கிடைக்கவில்லை. முடிவில் சோர்ந்து போய் ஒவ்வொருவராய் வீடு திரும்பினார்கள்.

தெய்வத்தைக் கண்டு பிடிக்கமுடியாத ஆத்திரம் அதைத் திருடியவனைக் கண்டு பிடித்துவிட வேண்டும் என்ற ஆவேசமாய் உருவெடுத்தது. ஊரின் நாற்சந்தியில் கூடியிருந்த மனிதர்கள் ஆளுக்கொரு விதமாய்த் திருடனை அனுமானித்துக் கொண்டிருந்தபோது, பொன்னரசன் அங்கே வந்தான். அவனைக் கண்டதும் எல்லாருடைய மனங்களிலும் அருவமாய்ப் பிடிபடாமல் நின்ற திருடன் திடீரென்று அவர்கள் முன்னே குதித்து நிற்பதைப் போலத் தோன்றியது.

பொன்னரசனைப் பார்த்து யாரோ ஒருவன், ''இந்தப் பயல்தான்டா செய்திருப்பான்,'' என்று கூவினான். அவ்வார்த்தைகளே ஏதோ அசரீரி போல அங்கே எதிரொலித்து அந்தக் கூட்டம் முழுவதும் அவனையே திருடனாகப் பார்க்கத் தொடங்கிவிட்டது.

ஒருவன் பொன்னரசனிடம் வந்து, ''எலே, சாமியை எங்கேடா கொண்டுபோய் வச்சிருக்கே? நாங்க உன்னை ஒன்னும் செய்யமாட்டோம். பயப்படாம ஒத்துக்கடா. ஊரே உன்னைத்தான்டா சொல்லுது,'' என்று கேட்டான். பொன்னரசன் மௌனமாய் நின்றான். அவனைச் சுற்றிக் கூட்டம் சேர்ந்துவிட்டது. ஆளுக்கொருவராய் அவனை உண்மையைச் சொல்லிவிடும்படித் துளைத்தனர். பொன்னரசன் இதுவரை உண்மையைத்தான் பேசி வந்திருக்கிறான். திடீரென்று ஒரு பொய்யைச் சொல்லக் கூசியவனாய் மௌனமாகவே நின்றான். இம்மௌனமே அவனைத் திருடனாக்கிக் கொண்டிருந்தது.

ஒருவன் திடீரென்று

படிப்பகம்

www.padippakam.com



பொய்யும் பித்தலாட்டமும் சோதனைக்கு அஞ்சும். உண்மை அதனை உபசரிக்கும்.

—தாமஸ் கூப்பர்

அவனை ஓங்கி அறைந்தான். உடனே ஒவ்வொருவரும் அவனைத் தாக்கத் தலைப்பட்டனர். "ஐயா, எனக்கு ஒன்னும் விளங்கலே, ஒன்னும் விளங்கலே," என்று அலறினான் அவன். அதை யாரும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. அவன் தலை மயிரைப் பிடித்துக் குலுக்கி, சட்டையைக் கிழித்து, கண் மண் தெரியாமல் அவனை அடித்து நொறுக்கி, கீழே தள்ளி மிதித்தபோது, ஒரு பெரியவர் குறுக்கே பாய்ந்து, "அடப் பாவிப்பயல்களே, அவன் செத்திட்டா அத்தனைபேரும் கம்பி எண்ணுவீங்கடா, மூளை கெட்ட முண்டங்களா. விலகிப் போங்கடா," என்று தடுத்து அவனை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்.

பொன்னரசனின் இரத்தக் கறைபடிந்த கோலத்தைக் கொண்டு அவன் தாய் ஓங்கி ஓங்கித் தலையிலடித்துக் கொண்டு மண்ணை வாரித் தூற்றிச் சபித்தார். அவனுடைய தந்தை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் உடம்பு கோபத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. ஆனால், மௌனமாகவே இருந்தார்.

பொழுது மறைந்து விட்டது. பொன்னரசன் திருடனாகக் கணிக்கப்பட்டு விட்டான். இந்த விஷயம் இத்தோடு முடியப் போவதில்லை. நாளைப் பொழுது விடிந்ததும் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது. பொன்னரசனோடு யாரும் பேசவில்லை. தாய் தன் பாட்டிற்குப் புலம்பிக் கொண்டிருந்தார். தந்தை தனக்கு நேர்ந்துவிட்ட தலைக் குனிவை மௌனமாகத் தாங்கிக் கொண்டிருந்தார். பொன்னரசனோ, "தெய்வமே, என்னை மோசம் பண்ணிட்டியே," என்று மனசுக்குள்ளேயே மன்றாடிக் கொண்டு சுருண்டு கிடந்தான். ஊர் இரவு முழுவதும் கூச்சலிட்டு ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

வைகறையின் மையிருட்குப்பின் 'பொல்'லென்று நிலம் தெளிந்தது. அடிவானம் பொன்னாடை விரித்துக் கதிரவனை வரவேற்கத்தொடங்கிய போது, பூசாரி கோயிலிலிருந்து ஓடிவந்து, "கோயிலுக்கு சாமி வந்திடுச்சு," என்று கூவினான். அதிர்ச்சியும் ஆச்சரியமும் பொங்க ஊர் கூடிவிட்டது. "கோயிலுக்கு சாமி வந்திடுச்சு. சாமிக்கு முன்னாலே நெடுஞ்சாண் கிடையா ஒரு பொண்ணு படுத்துக்கிடக்கு. பக்கத்திலே போயிப் பார்த்தா அது 'கமலா'ப் பொண்ணு. அதான் ஈரோட்டுக்கு ஆப்ரே

படிப்பகம்

www.padippakam.com

ஷன் செஞ்சுக்கப் போனதே, அந்தப் பொண்ணு,'' என்று இரைக்க இரைக்கப் பேசினான் பூசாரி.

அந்தச் செய்தி நம்ப முடியாததாயிருந்தது. நேற்றுத் தானே பொன்னரசனைத் திருடன் என்று பழி சுமத்தி அடித்தார்கள்? எல்லாரும் கோயிலுக்கு ஓடினார்கள். பொன்னரசன் பெற்றோரும் ஓடினார்கள். 'கமலா விழுந்து கிடக்கிறாள்' என்பதைப் பொன்னரசன் கேட்டதும் பதறிப் போனான். அவள் எப்படி இங்கு வந்தாள்? 'ஐயோ, கமலாவுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது' என்று வேண்டிக் கொண்டே ஓடினான்.



அவன் போய்ச் சேர்ந்த போது கோயிலின் முன்னால் உட்கார்ந்திருந்த கமலாவைச் சுற்றி ஊர்மக்கள் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். பொன்னரசன் அம்புபோலப் பாய்ந்து சென்று கமலாவை நெருங்கினான். கமலா சோர்ந்து போயிருந்தாள். அவனைக் கண்டதும் அவள் கண்களில் ஒளி பொங்கியது. இரத்தக் கறை படிந்த அவன் உடம்பைப் பார்த்து அந்த ஒளி கண்ணீரில் கரைந்தது.

''கமலா, உனக்கு ஒன்னும் இல்லியே? நல்லா இருக்கிறீயா?'' என்று தவிப்போடு கேட்டான்.

''நல்லாத்தான் இருக்கேன். எனக்கு ஒன்னும் ஆகலே. ஆனா நீங்க? நீங்க ஏன் இப்படி?'' என்றவள் அழுதுவிட்டாள்.

''நான் ஒரு பாவமும் செய்யலே, கமலா,'' என்றவன், தன்னைச் சுற்றி மனிதர்கள் நிற்பதை மறந்து, வாய் விட்டுத் தேம்பினான்.

''எனக்குத் தெரியும், அத்தான். நீங்க அழாதீங்க,'' என்று கமலா தேற்றினாள். ஊர் அந்தக் காட்சியை மௌனமாய்ப் பார்த்துக் கொண்டு நின்றது. கண்களில் ஊறிய கண்ணீரைத் துடைக்க மறந்து நின்ற மனிதர்களை விலக்கிக்கொண்டு ஊரின் நாட்டாண்மைக்காரர் முன்னால் வந்து, ''கமலா, நீ எப்படிம்மா இங்கே வந்தே? சாமி எப்படிம்மா திரும்பி வந்தது? எங்களுக்கு ஒன்னும் விளங்கலேம்மா,'' என்றார்.

''அதைச் சொல்றதுக்குத்தான் நான் இங்கேயே விழுந்து கிடந்தேன், பெரியப்பா. நேத்து எங்க பாட்டி வந்து இன்னும் ரெண்டு நாள்லே கோயில்லே பொங்கப் போடப் போறாங்கன்னு சொன்னதிலிருந்து எனக்கு அதே நினைவா இருந்தது. ராத்திரி நான் ஆஸ்பத்திரி கட்டில்லே படுத்துக்கிட்டிருந்தப்போ, என்னமோ பிரகாசமா இருக்குதேன்னு கண்ணைத் திறந்து பார்த்தேன். எதிரே சாமி நின்னுக்கிட்டிருந்தாரு. என்னாலே நம்ப முடியலே.

படிப்பகம்

www.padippakam.com



பொய்யறிவைப் பற்றி எச்சரிக்கையாயிரு. அறியாமையை விட அது அதிக ஆபத்தானது. —பெர்னாட் ஷா

'சாமி நீங்களா?'ன்னு கேட்டேன். 'ஆமா. உன்னோட அத்தான் உன்னைக் காப்பாத்தச் சொல்லி ரொம்ப பக்தியோட வேண்டிக்கிட்டான். அதனாலே நான் புறப்பட்டு வந்தேன்'னு சாமி சொன்னாரு. நானு அப்படியே பூரிச்சுப் போயிட்டேன். 'ஆனா, நான் இங்கே வந்திட்டதாலே ஊர் ஜனங்க என்னைத் தேடுவாங்க. கடைசியிலே உன்னோட அத்தான்தான் திருடியிருப்பான்னு அவனை அடிப்பாங்க. அவன் வேண்டிக்கிட்டதுக்காக நான் வந்திட்டப்போ, அவன்தான் கொஞ்சம் அனுபவிக்கட்டுமே'ன்னு சிரிச்சுக்கிட்டே சொன்னார். 'ஐயையோ. அவரு அடிபடக்கூடாது. இப்படித்தான் செய்யாத குத்தத்துக்கெல்லாம் அவரு தண்டனை அனுபவிக்கிறாரு. அவரைப் பத்தி உங்களுக்குத் தெரியாதா சாமி?'ன்னு கேட்டேன். 'அவன் தங்கம்மா. பத்தரை மாத்துத் தங்கம். அவனைப் புரிஞ்சுக்காத ஊர் ஜனங்களைத் தண்டிக்கிறதுக்காகத்தான் நான் கோயிலை விட்டு வந்திட்டேன்'னு சொன்னார். 'சாமி நீங்க திரும்பவும் கோயிலுக்குப் போயிடுங்க'ன்னு கெஞ்சினேன். சாமி சிரிச்சுக்கிட்டே, 'நான் தனியா எப்படிப் போவேன்? பயமா இருக்குமே'ன்னு பரிகாசம் பண்ணினார். நான் திரும்பத் திரும்பக் கெஞ்சினேன். அவரு 'நீயும் எங்கூட வா. ரெண்டு பேரும் போகலாம். இல்லேன்னா உன் அத்தான் கோவிச்சுக்குவான்'னு குழந்தை மாதிரி சிரிச்சார். உடனே நானும் புறப்பட்டுட்டேன். யாருகிட்டேயும் நான் சொல்லிக்கலே. சாமி என் கூட வந்தாரு. எனக்குப் பயமாவே இல்லே. கடைசியிலே இங்கே வந்ததும் என்னை வெளியிலே நிறுத்திட்டு சாமி உள்ளே நுழைஞ்சிட்டார். 'சாமி, எங்க அத்தானுக்கு ஏதாவது சொல்லுங்கோ'ன்னு கேட்டேன். 'அதுக்காகத்தான் உன்னைக் கூட்டி வந்தேன். உன் வாயாலேயே இதைச் சொன்னா அவன் பெருமையை ஊர் புரிஞ்சுக்கும். உன் அத்தான் நல்லதுக்காகக்கூட இனித் தப்பு செய்ய மாட்டான்'னாரு.



படிப்பகம்

www.padippakam.com



மனிதர்களுக்குப் பொற்காலம் வருவது பொன்னை மறந்து விடும் போதுதான்.

—ஜி.கே செஸ்ட்டர்டன்

'சாமி, நான் சின்னவ; ஒன்னும் தெரியாதவ. நீங்களே இதைச் சொல்லக்கூடாதா'ன்னு வேண்டிக்கிட்டேன். சாமி சிரிச்சுக்கிட்டே, 'நீ சின்னவ; ஒன்னும் தெரியாதவ என்கிறதாலேதான் உனக்கு முன்னாலே வந்தேன். இவ்வளவு நேரம் உன்னோட வந்தேனே. நீ உன் அத்தானைக் காப்பாத்தச் சொன்னதுக்கு மேலே ஒன்னுமே எங்கிட்ட கேக்கல பாத்தியா. நீ என்னைச் சாமின்னு நம்பறே. ஆனா ஊர் ஜனங்க என்னை சாமின்னு சொன்னாலும் புதையல் கொடுக்கிற பூதம்னுதான் நினைக்கிறாங்க. அவங்க முன்னாலே நான் வரமாட்டேன் தாயே. அதனால நீயே சொல்லு'ன்னு ஆதரவா சொல்லிட்டு மௌனமாயிட்டாரு. அதுக்கு மேல நான் ஒன்னும் கேக்காமே கும்பிட்டேன். இங்கேயிருந்து ராத்திரி வேளையில்லே ஊருக்குள்ளே வர பயமா இருந்ததாலே நான் இங்கேயே படுத்துக்கிட்டேன். ஆனா, அதுக்குள்ளே இவரை இப்படி அநியாயமா அடிச்சிருக்காங்களே. இந்த ஊர்லே நியாயமே செத்துப் போச்சா, பெரியப்பா?''



அங்கே கூடியிருந்தவர்கள் ஊமைகளைப்போல் நின்று கொண்டிருந்தனர். நம்ப முடியாத இந்த அதிசயத்தை அனுபவிக்க முடியாமல் நேற்று அவர்கள் பொன்னரசனுக்கு இழைத்த குற்றம் தலை குனிய வைத்துவிட்டது. பொன்னரசனின் தந்தை தன் மகனை அணைத்துக்கொண்டார். தாய் கமலாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள்.



பொன்னரசன் பிரமிப்போடு கமலாவைப் பார்த்தான். அவளும் பார்த்தாள். அவள்தான் சொல்லிவிட்டாளோ? இந்த மூடமக்களின் நம்பிக்கையை அடித்தளமாக வைத்துப் பிரமாண்டமான கோபுரமே எழுப்பிப் பொன்னரசனை அதில் தூக்கி வைத்துவிட்டாளே!

அந்தக் கணத்திலேயே பொன்னரசன் மீண்டும் புதிதாய்ப் பிறந்துவிட்டான். கமலா அந்தக் கைங்கர்யத்தைக் கட்டிக்கொண்டாள். தெய்வ சந்நிதியில் ஊரைக் கூட்டி, அவனையே ஒரு கோயிலாக்கி, அதன் கர்ப்பக்கிருகத்தில் அவளே கொலுவிருக்க வழி செய்துகொண்டாள். ★

படிப்பகம்

www.padippakam.com

புலவர்களே, அறிவுப் பொருள்களே, உயிர்களே.
பூதங்களே, சக்திகளே, எல்லோரும் வருவீர்.
ஞாயிற்றைத் துதிப்போம், வாருங்கள். அவன் நமக்கெல்லாம்
துணை. அவன் மழை தருகிறான். மழை நன்று.

மழைத் தெய்வத்தை வாழ்த்துகின்றோம். ஞாயிறு வித்தை
காட்டுகிறான். கடல் நீரைக் காற்றாக்கி மேலே கொண்டு
போகிறான். அதனை மீளவும் நீராக்கும்படி காற்றை ஏவுகிறான்.
மழை இனிமையுறப் பெய்கின்றது. மழை பாடுகின்றது.

அது பலகோடி தந்திகளுடையதோர் இசைக் கருவி
வானத்திலிருந்து அமுத வைரக்கோல்கள் விழுகின்றன.
பூமிப்பெண் விடாய் தீர்க்கிறாள்; குளிர்ச்சி பெறுகிறாள்.
வெப்பத்தால் தண்மையும் தண்மையால் வெப்பமும்
விளைகின்றன.

அனைத்தும் ஒன்றாதலால், வெப்பம் தவம்
தண்மை யோகம். வெப்பம் ஆண். தண்மை இனிது.
ஆணிலும் பெண் சிறந்ததன்றோ? அது வாழ்க.

—மகாகவி பாரதியார்

*விளம்பர உதவி:*

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

- பொருள் போக்குவரத்து சம்பந்தமான
அனைத்து பிரச்சனைகளுக்கும் சுலபமான தீர்வு

**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- இருபத்தைந்து ஆண்டுகளாக வணிகப்
பெருமக்களின் நம்பிக்கைக்குரிய தேர்வு

**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

- உங்களுக்கு ஏற்றதொரு பார்சல் சர்வீஸ்

**ஏ பி டி பார்சல் சர்வீஸ்**

எங்களது சேவையை உங்களுக்கும் தொடர
எங்களுக்கு ஓர் வாய்ப்புத் தாரீர்!
குறைந்த கட்டணம்... விரைந்த சேவை.

# ஏ பி டி பார்சல் சர்வீஸ்

10/13-15, காளிங்கராயன் தெரு,
ராம்நகர். கோவை-641009.



படிப்பகம்

www.padippakam.com

ஆங்கில மூலம்:
**சரோஜினி நாயுடு**
தமிழாக்கம்:
**என். ஆர். தாசன்**

# யுகயுகங்கள்



கடைசியில் என்னைக்
கண்டு கொண்டாயா, கனவே?
ஓ, கனவே, ஏழு யுகங்களுக்கு முன்
நீ இறந்து போனாய்.
பனிக்காட்டில் உன்னை
ஆழப் புதைத்துவிட்டேன்.
திரும்பவும் ஏன் இங்கு வந்தாய்?
உறக்கத்திலிருந்து உன்னை
எழுப்பியவர் யார்?
எனது குகையிலிருந்த மகிழ்ச்சியின்
வெண்புறாக்களை நீ பயமுறுத்தி
இருப்பாயோ?
என் வணக்கத்துக்குரிய மகானின்
ஆடைகளை மரணித்த உன் விரல்களால்
தீண்டிக் கறைப்படுத்தி இருப்பாயோ!
உனது காதல் பாடலை
மங்கிய தூக்கத்தில் கலந்து
எனது விருந்தில் இசைத்திருப்பாயோ?
பனிக்காட்டிலுள்ள உன் புதைகுழிக்கு,
ஓ, எனது கனவே,
திரும்பிப் போ.
ஏழு யுகங்களுக்கு முன்
இதயம் நொந்து போன குழந்தை ஒன்று
உன்னை ஒருமுறை
மூடி மறைத்து வைத்தது.
இருளிலிருந்து உன்னை எழுப்பியதார்?
‘புறப்பட்டுப் போ’ என்று
ஆணையிடுகிறேன்.
இதயக் குன்றில் எழுப்பியுள்ள புனித
ஆலயங்களைக் களங்கப்படுத்தாதே.

படிப்பகம்

www.padippakam.com



# கற்போம் கசடற ஹைகூ

## நெல்லை சு. முத்து



தமிழில் ஹைகூக் கவிதைகள் குறித்துப் பிரஸ்தாபிக்கும் பொழுது அதன் மூன்றடி வடிவமே முதற்கண்ணோட்டத்தில் நமக்குப் புலப்படும். வரி வரியாகத் தோண்டினால் 5,7,5 என்கிற அசைகள் (Syllables) தட்டுப்படும். ஆனால் தமிழின் அசைக்கும் நரம் கருத வந்த ஜப்பானிய 'அசை'க்கும் வேறுபாடு உண்டு. அவ்வாறே ஹைகூ உள்ளடக்கம் குறித்தும் கொஞ்சம் அசை போட்டுப் பார்ப்பதே இக்கட்டுரையின் கட்டமைப்பு.

தமிழில் உள்ளது போன்ற ஒருமை-பன்மைகள், ஆண், பெண், பலர், ஒன்றன், பலவின் பால்கள், வேற்றுமை உருபுகள் போன்ற இலக்கண வரைமுறைகள் ஜப்பானிய மொழியில் இல்லை.

மாடு மேய்கிறது; மாடுகள் மேய்கின்றன-என்று ஜப்பானிய மொழியில் எழுத முடியாது. பொதுவான ஒரே ஒரு சொல்லே ஒருமைக்கும் பன்மைக்கும். 'மாடுகள்' என்று அங்கு கிடையாது. 'பல மாடு மேய்கிறது' என்றெழுதினால் ஜப்பானிய ஆசிரியர் முழு மதிப்பெண் தந்து விடுவார்.

அவ்வாறே இராமன் படிக்கிறான், சீதா படிக்கிறாள் அவர்கள் படிக்கிறார்கள்-என்றெல்லாம் வரும் ஆன், ஆள், ஆர்கள் போன்ற பால் விகுதிகள் ஜப்பானியருக்குத் தெரியாது.

பள்ளிக்குச் சென்றான், கல்லை உடைத்தான், சேரியிலிருந்து வருகிறான் - இப்படியான வாக்கியங்களில் கு, ஐ, இல்(இருந்து) போன்று பெயர்ச் சொல்லுடன் ஒட்டி நிற்கும் பல வேற்றுமை உருபுகள் ஜப்பானில் தேவைப் படவில்லை. பள்ளி சென்றான், கல் உடைத்தான், சேரி வருகிறான் என்பன போல வேற்றுமைத் தொகைகளே அவர்க்கு விருப்பம். உருபுகள் சொற்பம்.

''செயப்படு பொருளைச்
செய்தது போலத்
தொழிற்படக் கிளத்தலும்
வழக்கியல் மரபே''
(தொல்: சொல்- வினையியல் 49)

என்கிற தொல்காப்பிய நூற்பா ஜப்பானிய மரபுக்குப் புறம்பானது.

படிப்பகம்

www.padippakam.com

## ஜப்பானிய மொழிமரபு

செயப்படுபொருள் ஏற்கும் வினைச்சொல்(Transitive Verb). செயப்படு பொருள் வராத வினைச் சொல்(Intransitive Verb) எல்லாம் ஒரே மாதிரியாகவே புணரும் ஜப்பானிய மொழியில். சான்றாக உடைத்தல் என்கிற வினைச் சொல்லும், நடைபெறுதல் எனும் வினைச்சொல்லும் கீழ்க் கண்டவாறு காலங் காட்டும் விகுதிகளைப் பெறுவதனை அறியலாம். தமிழிலோ இடைச் சொற்கள்தாம் காலம் உணர்த்தும்- கிறு, கின்று, ஆநின்று என்பன மாதிரி நின்று.

| காலம் | ஜப்பானியமொழி | பொருள் |
| --- | --- | --- |
| நிகழ்காலம் | வரெரு | உடைகிறது |
| இறந்தகாலம் | வரெதா | உடைத்தான் |
| நிபந்தனை | வரெரெபா | உடைந்தால் |
| நிகழ்தகவு | வரெயூ | உடையுமானால் |
| எதிர்மறை | வரெனய் | உடையாது |
| நிகழ்காலம் | ஓமொயி | கனக்கிறது |
| இறந்தகாலம் | ஓமொகத்தா | கனத்தது |
| நிபந்தனை | ஓமொகரெபா | கனத்தால் |
| நிகழ்தகவு | ஓமொசரூ | கனக்குமானால் |
| எதிர்மறை | ஓமொகுனய் | கனக்காது |



பெயர் உரிச்சொற்களானாலும் (adjectives) வினைச் சொற்கள் மாதிரியே கையாளப்படுகின்றன.

அவ்வாறே ஒக்கொரு (நடைபெறுகிறது), ஒகொத்தா (நடைபெற்றது), ஒகொரெபா (நடைபெற்றால்), ஒகொரு (நடைபெறுமானால்), ஒகொரெனய்(நடைபெறாது) என்று ஐவகை வினைத் தொடர்கள் மட்டுமே ஜப்பானிய மரபு.

இதேபோல ச்சீசை (சிறிதாக இருக்கிறது), ச்சீசகத்தா (சிறிதாக இருந்தது), ச்சீசகரெபா (சிறிதானால்), ச்சீசகரு (சிறிதாகுமானால்), ச்சீசகுனய் (சிறியதில்லை) என்றும் வினைத் தொடர்கள் ஒவ்வொன்றும் தத்தமக்குரிய இடைச் சொற்களையே காலங் காட்டும் விகுதிகளாகக் கொண்டு முடிகின்றன.

மேற்சுட்டிய வினைத் தொடர்களில் பொருள் விளக்கும் கருதியே தமிழில் ஒன்றன்பால், ஆண்பால் விகுதிகளுடன் கூடிய வாக்கியங்கள் சான்று தரப்பட்டிருக்கின்றன. ஜப்பானிய மொழி வழக்கில் இந்தப் பாகுபாடுகள் கிடையாது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

### தமிழும் ஜப்பானிய மொழியும்

இனி வாக்கிய அமைப்பிற்கு (Syntex) வருவோம். ஜப்பானில் ஒவ்வொரு வாக்கியமும் தமிழ், திராவிட மொழிகளில் உள்ளது போன்றே பெயர்ச்சொல். செயப்படு பொருள், வினைச்சொல் என்கிற வரிசையில் இடம் பெறும்.

அது சரி. எண்ணும் இல்லை; பாலும் இல்லை; வேற்றுமை உருபுகளும் வெவ்வேறில்லை. வினைச்சொல்,

www.padippakam.com



இறைவன் பணத்தைப் பற்றி என்ன நினைக்கிறான் என அறிய விரும்பினால், அதை யாரிடம் கொடுத்திருக்கிறான் என்று பார்.

— *மாரிஸ் பேரிஸ்*

உரிச்சொல் கூட விகுதியின்றி காலங்காட்டி முடிகின்றன-என்றால் ஒரு வாக்கியத்தைப் பகுத்து அறிவதுதான் எப்படி?

அதற்கும் வழி இருக்கிறது. ஒரு வினை சுட்டும் பெயர்ச் சொல்லினோடு 'க' (Ga) எனும் பின்னொட்டும் செயப்படு பொருளை இனங்காட்ட அச் சொல்லுடன் 'வொ' (wo) என்கிற பின்னொட்டும் அந்த வாக்கியத்தின் பொதுக் கருத்தை ஊட்ட 'வ'(wa) எனும் ஒலிக்குறிப்பும் உள்ளே, மேலே, அதில் என்கிற மாதிரியான வேற்றுமைகளுக் கெல்லாம் 'னி' (ni) என்ற ஒரே உருபும், (அதனை) விட என்பது போன்ற ஒப்பீட்டிற்கு 'யோரி' (yori) போன்ற இடைச் சொற்களும் ஜப்பானில் வழங்கி வருகின்றன.

இனி ஒரு வாக்கியத்தில் அறிவியல் கருத்தை ஜப்பானிய மொழியில் ஒலியாக்கம் செய்து தருவோம்.

ஒமொமாயி (கனமான) 'ஜென்ஷிகாகு'க ('அணுக் கரு' வானது) இகுத்சு-கா-னோ (பற்பல) ரியூஷி (துகள்கள்) னி (ஆக) வமெரரு (உடைகிற) 'ஹன்னூ'க ('வினை'யான) ஒகொரு (நடைபெறுகிற) தொகி (பொழுது) ஹன்னூ கோ(வினை முடிவு) னோ(இல்) செய்செய்-புட்சு (விளைபொருட்கள்) னோ (இன்) ஷித்சுர்யூ (நிறைகள்) னோ(இன்) 'வா' வ (கூட்டுத் தொகையானது) ஹஜிமெ-னோ (ஆரம்பத்தின்) ஜென்ஷி-காகு(அணுக்கருக்கள்) னோ (இன்) ஷித்சர்யூ (நிறைகள்) யோரி (விட) வசுகா-தா-கா (சற்றே) ச்சிசை (குறைவு).

அடைப்புக்குறிகளில் தரப்பட்ட தமிழ் சொற்களைக் கூட்டிப் படித்தால் ஜப்பானிய வாக்கியமும் தமிழ் வாக்கியமும் எள்ளளவும் பிசகாமல் ஒழுகிப் பொருள்தரும் பாங்கினை உணரலாம்.

'கனமான அணுக்கருவானது பற்பல துகள்களாக உடைகிற வினையானது நடைபெறுகிற பொழுது வினை முடிவில் விளைபொருட்களின் நிறைகளின் கூட்டுத்தொகை ஆரம்பத்தின் அணுக்கருக்களின் நிறைகளை விட சற்றே குறைவு.' அவ்வளவுதான்.

## ஜப்பானிய அசைகள்

ஜப்பானிய மொழி மரபில் இத்தனை இலக்கண வகை முறைகளைப் புரிந்து கொண்ட பிறகு இனி அசைகளுக்கு வருவோம். தமிழில் மாத்திரைகளின் ஒலி அடிப்படையில் தனிக் குறிலுடன் ஒற்று, நெடில், நெடிலுடன் ஒற்று,

படிப்பகம்

www.padippakam.com

இணைக்குறில், இணைக்குறிலுடன் ஒற்று, குறிலுடன் நெடில், குறில் நெடிலுடன் ஒற்று என்றெல்லாம் நேர், நேர் நேர், நிரை, நிரை நிரை, என்றெல்லாம் முறையே வகுத்து வைத்திருக்கிறோம்.

ஜப்பானிய மொழியிலோ அசை என்பது பெரும்பாலும் ஒவ்வொரு ஒலி உச்சரிப்பினையே குறிக்கின்றது. க், ஸ், த், ன், ஹ், ம், ய், ர், வ் ஆகிய 9 மெய்யெழுத்துக்களும் அவற்றின் மேல் ஏறிவரும் அ, இ, உ, எ, ஒ ஆகிய 5 உயிர் ஒலிகளால் மொத்தம் 45 உயிர்மெய்கள் தோன்ற வாய்ப்புண்டு. ஆயின் அவற்றில் யி, யெ, வி, வு, வெ ஆகிய உச்சரிப்புகள் ஜப்பானிய மொழியில் இல்லை. மிஞ்சுவது 40 உயிர்மெய்கள். இவற்றுள்
'ஸ்+இ=ஷி(shi) எனவும்,
'த்+இ=ச்சி(chi) எனவும்,
'த்+உ=த்சு'(tsu) எனவும்
'ஹ்+உ=ஃபு'(fu) எனவும் உச்சரிக்கப்படுகின்றன. ஸி, தி, து, ஹு ஆகியவற்றுக்கு மாற்றொலிகள் இவை.

தவிரவும் க் (K), ஸ் (S), த் (T), ஹ் (H) ஆகிய மெய்யெழுத்துகளின் வலது மேற்புறம் '' மேற்கோள் குறியீடு சேர்த்து எழுதிட, முறையே ஆங்கிலத்தின் G, Z, D, B, ஆகிய கன ஒலிகளுக் கொப்பான உச்சரிப்புகள் கிடைக்கும்.

அத்துடன் 'ஷி(shi) ச்சி' (chi) என்று மேற்கோள் குறியோடு எழுதி 'ஜி' உச்சரிப்பும், ஸு' (su), த்சு' (tsu) ஆகியவற்றுக்கு வலது மேற்புறம் இந்த மாதிரி மேற்கோள் குறியீடு கூட்டி எழுதி ச்ஸு (zu) உச்சரிப்பும் பெறலாம்.

மேலும் ஹ் மெய்யெழுத்துக்கு வலது மேற்புறம் வெப்பநிலை பாகையைக் குறிக்கும் (⁰) அடையாளத்தையும் சேர்த்தெழுதி, அதனை ஆங்கிலத்தின் P மாதிரியும் உச்சரிக்கலாம்.

லகரமும் வகரமும்(l and v) ஜப்பானில் இல்லை. 'வாலுவு' (valuvu) என்பதனை 'பாருபு' (barubu) என்றே வழங்குகின்றனர். லகரத்திற்கு ரகரமும், வகரத்திற்கு பகரமும்.

சாதாரண உயிர்மெய் எழுத்துக்களை ஒரு முறை எழுதினால் குறிலாகவும், இரு முறை எழுதினால் நெடிலாகவும் நீட்டி உச்சரிக்கவேண்டும்.

ஜப்பானிய எழுத்து ஒலி வடிவ அமைப்பு (Phonological System) இவ்வாறாக, வரிவடிவத்தில் கதகன (Katakana), ஹிரக'ன (Hiragana), கன்ஜி (Kanji) ஆகிய மூவகை எழுத்துக்கள் உள்ளன. அந்த நடைமுறைச் சிக்கல் இங்கு நமக்குத் தேவையற்றது.

இதன்வழி ஜப்பானிய மொழியில் 'அசை' என்பது வெறும் ஒலிக் குறிப்பு, உச்சரிப்பு விதம் மட்டுமே என்றுரைக்கலாம்.

தமிழில் 4 முதல் 6 எழுத்துக்கள் கொண்டது குறளடி; 7 முதல் 14 எழுத்துக்கள் சிந்தடி; 10 முதல் 14 எழுத்துக்கள் நேரடி அல்லது அளவடி; 15 முதல் 17 எழுத்துக்கள் நெடிலடி; 18முதல் 20எழுத்துக்கள் கழி நெடிலடி என்கிறது தொல்காப்பியம் (செய்யுள்35—40). ஆயினும் நாற்சீர் கொண்டிருந்தாலே அது ஒரு அடியாகும் (செய்யுள்31) எனவும் தொல்காப்பியர் வலியுறுத்துகிறார்.

படிப்பகம்

www.padippakam.com



திறமையிலெல்லாம் அரிய திறமை என்பது, ஒற்றைச் சொல்லில் உரைக்க முடிந்த விஷயத்திற்கு இரண்டு சொற்களை வீணடிக்காமலிருப்பதுதான்.

—தாமஸ் ஜெஃபர்சன்

காக்கைபாடினியம் முதலான ஏனைய இலக்கண நூற்கள் இருசீர் வந்தால் குறளடி; முச்சீர் —சிந்தடி; நாற்சீர் அளவடி; ஐஞ்சீர் நெடிலடி; அறுசீர் கழி நெடிலடி என்று வரையறுத்துள்ளன. (காக்கைபாடினியம் 22).

அசைகளின் எண்ணிக்கையில் இத்தகைய அடிவகைப்பாடு தமிழில் நேரடியாக இல்லை. ஜப்பானிய அசை எனும் ஒலிக் குறிப்புகள் வடமொழியின் மாத்ரா, வர்ணங்கள் போலவே அடியளவு பெறுகின்றன.

'மாத்திரை வகையும்
எழுத்தியல் வகையும்
மேல்கிளந் தனவே
என்மனார் புலவர்''
(தொல்:செய்யுள்2)

என்று இக்கருத்தைத் தொல்காப்பியர் மேற்கோள் காட்டுகின்றார்.

இனி யதார்த்த ஹைகூக்கள் சிலவற்றை ஜப்பானிய ஒலிக்குறிப்பில் உச்சரித்துப் பொருள் கொள்வோம்.

ய- தெ- நொ- ஹ- ரு
ந- னி- மொ- ந-கி- கொ-ஸொ
ந- னி- மொ- அ- ரெ

தொல்காப்பிய இலக்கணப்படி முதல்வரி குறளடி, இரண்டாம் வரி சிந்தடி, மூன்றாம் வரி மீண்டும் குறளடி, (5, 7, 5 மாத்திரைகள் அல்லது எழுத்துக்கள்).

யமகுச்சி ஸோடோ (கிபி 1642- 1716) எழுதிய இந்த ஹைகூவின் பொருள்.

''வசந்தத்தில் என் குடிசை
பொருள் ஏதுமில்லை
உண்மையில்
பொருளெல்லாம் அதுவே.''

எமினாமொதொ கொகு (கிபி 1661- 1701) என்பவரின் கீழ்க்கண்ட ஹைகூ. இதனைப் பலர் அறிந்திருக்கலாம்.

''யாசகன் செல்கிறான்
கோடைத் துணிகளாய் உடுத்தி
விண்ணையும் மண்ணையும்''

''கொ- ஜி- கி- க- ன
தெ- ன்- ச்சி- வொ- கி- த- ரு
ந த்சு- கொ- ரொ-மொ''

ஜப்பானிய அசை அளவு குன்றாமல் தமிழில் மாத்திரை அளவில் அல்லது வர்ண விருத்தத்தில் இதே ஹைகூவைச் சந்தமுற (Prosody) எழுதிப் பார்ப்போம்

யா- ச- க- ன-தோ
கோ- டை- ஆ- டை- க- ளா- ய்
வா- ன- ம்- பூ- மி

ஒரு மொழியின் கவிதைகளை இம்மாதிரி சந்த ஒழுங்குடன மொழி பெயர்க்க முயல்கிறோமோ நாம்? இன்றுவரை கவிதை உட்பொருளை மட்டுமே மேலோட்டமான புற வடிவத்துடன் கடன் வாங்கித் தமிழில் பொருத்தமான வார்த்தைகளில் வடித்து வருகின்றோம்.

ஜப்பானிய ஹைகூ முனி பாஷோ (கிபி1644- 1694)

படிப்பகம்

www.padippakam.com



நல்ல சுவையும் நகைச் சுவையும் ஒன்றுக்கொன்று முரண்படும் பிரயோகங்கள்,—'கற்புள்ள வேசி' என்பது போல.

*— மால்கம் மக்கரிட்ஜ்*

தமது சீடர்களுடன் அவ்வப்போது நடத்தி வந்த கருத்தாடல்கள் சிலவற்றை இங்கே குறிப்பிட்டால்தான் யதார்த்த ஹைகூ படைப்புள்ளத்தினைப் புரிந்துகொள்ள முடியும்.

## இயல்பான வெளிப்பாடு

ஹைகூவானது கணப்பொழுதினுள் சிந்தையில் பொறி விட்டுக் கம்பீர ஒளி வீசும்படி இயற்கையாகவே அமைய வேண்டும். இல்லையெனில் தோலில் அமர்ந்து இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் தெள்ளுப் பூச்சி கவிதைக் கருப் பொருளாகுமா? பாஷோ பாராட்டின கிகாகு (Kikaku) வின் ஹைகூ இது:-



''அடித்துக் கொன்றேன்
இது கனவு நனவா
தெள்ளுப்பூச்சிக் கறைகள்''

(கிகாகு)

அவ்வாறே, ஒருநாள் கியோரெய் (Kyorai) என்கிற பிரதம சீடர் ஹைகூ எழுதும் பொழுது முதல் அடி எப்படி இருக்க வேண்டும் என வினவினார். அழுத்தமாகவும் தெளிவுடனும் அமைதல் வேண்டும் என்ற குரு உபதேசத்தில் இப்படியொரு ஹைகூ எழுதி பாஷோவிடமே அபிப்பிராயம் கேட்டார் கியோரெய்:-

''மாலைக் குளிர்
இடுப்புத் தளர் வாதம்
வீடு திரும்பினேன்.''

இதனைப் படித்த பாஷோ சிரித்தபடி, ''உனக்கு இன்னும் நுட்பம் பிடிபடவில்லை.'' என்று மட்டும் கூறினாராம்.

## தனித்த கருத்தோட்டம்

அவ்வாறே கவிதைகள் தமக்குள் தழுவல் கூடாது. ஒருவர் தொட்ட விஷயத்தை இன்னொரு கவிஞர் நிதானமாகச் சிந்தித்தே எழுதத்தொடங்க வேண்டும்.

சொல்லளவில் கூட பிறிதொரு கவிஞரின் படைப்புப் பக்கம் கவிதை ஒடக்கூடாது.

''படகின் சுக்கானைத் திருகு
அதோ அக்காஷித் துறைமுகம்
ஒரு வானம்பாடி''

காகெய் (Kakai) என்பவரின் இந்த ஹைகூ பாஷோ தொகுத்து கிபி.1691 ஆம் ஆண்டில் வெளியான ''சருமினோ'' (குரங்கின் அங்கி) என்கிற கவிதைத் தொகுதியில் இடம் பெறவிருந்தது. பரிசீலனையின் போது கியொரெய் தம் குருவான பாஷோவிடம், ''இது தாங்கள் எழுதியுள்ள

'வயல்களின் குறுக்கே
குதிரைத் தலையைத் திருப்பு
ஒரு வானம்பாடி'

என்கிற கவிதை போல் இருக்கிறதே'' என்றார்.

''அக்காஷியின் வானம்பாடி அப்படி ஒன்றும் அசிங்கம் அல்லவே! இருந்துவிட்டுப் போகட்டும்.''

''அக்காஷிப் பறவை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால்

படிப்பகம்

www.padippakam.com

கவிதையில் தனித்துவம் இல்லை. அங்கே படகு; இங்கே குதிரை.''

''ஆமாம். கருத்தோட்டம் இல்லைதான். ஏதாயினும் அக்காஷி வானம்பாடிக்காக வேண்டுமானால் சேர்த்துக்கொள். இல்லை விட்டுவிடு, உன் விருப்பம்.''

முடிவில் அந்தக் கவிதை—தொகுப்பில் சேர்த்துக் கொள்ளப் படவில்லை.

வார்த்தைக்கு வார்த்தை மாற்றி இன்றைக்குத் தமிழில் வெளிவரும் 'போலி' ஹைக்கூக் களை இனம் பிரித்துக் காட்டினால் என்னைச் சிறையில் போட்டுவிடுவார்கள். வெறும் கருத்தளவில் கூட 'நகல்' எடுக்கக் கூடாது என்ற ஹைகூ எழுத்து விதியை மட்டும் ஒரு எடுத்துக் காட்டுடன் சுட்டிவிட விழைகிறேன்.

யாமெயி (Yamai) மடத்தில் வைத்து பாஷோ தீட்டிய கவிதை இது:-

'தெளிந்த சிற்றருவிகள்
புனிதமான அலைகள்
கோடை நிலா''

ஓசாக நகரில் படுத்த படுக்கையாய்க் கிடந்த பாஷோ தமது சீடர் கியொரெய்யை அழைத்துக் கூறினார்: ''இந்தக் கவிதை வெகு காலத்திற்கு முன்னம் சோனாமி (Sonome) மடத்தில் வைத்து நானெழுதிய—

''வெள்ளை வசந்தமலர்
கண்ணருகே உயர்த்திப்
பிடித்தும்
புனிதமாகவே இருக்கிறது.''

என்கிற கவிதை யாதிரியே அமைந்துவிட்டது. அதனால் தெளிந்த சிற்றருவிகள் கவிதையைப் பின் வருமாறு மாற்றி விட்டேன்.

''தெளிந்த சிற்றருவிகள்
அலைகளுள் சிதறும்
நீலப் பைன் ஊசிகள்''

யாமெயி மடத்தில் வைத்தெழுதிய அந்தப் பழைய மூலச் சுவடியினை அழித்துவிடு''—என்று வேண்டினாராம் பாஷோ

பாருங்கள் யதார்த்த ஹைகூவின் கவிஞன் தனித்துவப் பெருமையினை. ஒன்றுக்கொன்று தனிப்பட்டு நிற்க வேண்டிய சிறப்பம்சம் (Originality) ஹைகூவின் உள்ளுருவ அமைதியில் குறிப்பிடத்தக்கது.

## ஓரளவு மரபுத்தாக்கம்

கவிதையில் புதுமை என்பது முற்றிலும் வேறுபட்ட அல்லது இன்றுவரை கையாளப் பெறாத உத்தி, உள்ளடக்கம், யாப்பமைதி இவற்றால் விளங்கும். எனினும் மரபான செய்திகளும், இலக்கிய வடிவங்களும் எம்மொழியிலானாலும் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டு வருவது இயல்பே. தமிழில் இன்றுவரையிலான கவிதைப் போக்குகளைக் கூர்ந்து கவனித்தால் இவ்வுண்மை புரியும்.

மரபின் நீட்சியாகப் புதுக்கவிதையும் அதன் இணைப்புத் தொடராக ஹைகூவும் பரிணமித்துள்ளன தமிழில்.

ஜப்பானில் பழமையான ஹைகூ வடிவத்தால் இயல் மாறவில்லை. உள்ளடக்கத்தில் மட்டுமே பரிசோதனைகள் நிகழ்ந்தன. ஆனால் தமிழின் யாப்பு வடிவங்கள் இன்று சிதையுண்டு வருகின்றன. இது வருத்தத்திற்குரியது, ஏனெனில் கவிதையில் உள்ளுருவம் என்

www.padippakam.com

பதில் மரபின் தாக்கம் அல்லது சாயல் தென்பட்டாக வேண்டும்.

கியொரெய் தனது ஹைகூ யாப்பு ஒன்றினை பாஷோவிடம் சென்று காட்டினார்.

''இந்தப் பாதையிலா
காட்டுப்பன்றி குகை செல்லும்?
புலரி நிலவு''

பாஷோ இது நன்று என்றோ நன்றாயில்லை என்றோ எதுவும் கூறாமல் அமைதியாக இருந்ததைக் கண்ட சீடர் இரவில் குகைக்குத் திரும்பும் காட்டுப் பன்றிகளை வேட்டையாட வேடர்கள் காத்திருக்கும் பழக்கத்தையும், அன்றிரவு ஏமாற்றமுடன் விடிந்ததையும் குருவிற்கு விளக்கமாக எடுத்துக் கூறினார்.

''இத்தகைய காட்சி ஆர்வம் பண்டைப் புலவர்களுக்கும் பரிச்சயமானதுதானே,'' என்று கருத்துரைத்தார் பாஷோ. 5, 7, 5, 7, 7 அசைகளுடன் வரும் ஐந்து அடி 'வாகா'(waka) பாடல் ஒன்றையும் எடுத்துக் காட்டினார்.

''பொழுது புலர்ந்தது
வயல்களிலிருந்து மலைகளுக்குத்
திரும்பிவரும் மான்
வாசனையைத்
துடைத்துச் சென்றது
காட்டுச் செடியிடை வீசும்
காற்று''

இது சுவையான பாடல்தான். எனினும் மரபு தழுவலில் சில வேளைகளில் ஆபத்தும் இருக்கிறது

ஹைகூவின் தலையாய பண்பு— சிந்திக்குந்தோறும் விரிந்து செல்லும் பல்வேறு அர்த்த ஆழங்கள். அதன் வார்த்தைகளுக்குள் ஒளிந்திருக்கும் இறைச்சிப் பொருளை உய்த்துணர்ந்து, பின் வெளிக்கொணர்வது ஒருசிலருக்கே சாத்தியம். பூரண ஞானமும் அனுபவ முதிர்வும் தேவை. அவர்களால் அவர்கட்கு மட்டுமே ஹைகூவை சுவைத்து இன்புற முடியும்.

''செங்குத்துப் பாறை உச்சிகள்
இங்கேயும் இன்னொருவர்
நிலவின் விருந்தாளி.''

''இக்கடைசி வரியில் 'நிலவின் குரங்கு' என்றிருக்கலாமே என்று ஷாடோ (எனும் சீடர்) நினைக்கிறார். எனக்கு இந்த 'விருந்தாளி'தான் பொருத்தமாகப் படுகிறது,'' என்றார் கியோரெய் தன் குருவிடம்.

''அவர் எதனால் 'குரங்கு' என்ற சொல்லைப் போடக் கூறுகிறார்? அது கிடக்கட்டும். இந்தக் கவிதையை எழுதும்போது நீர் என்ன மனதில் கருதினீர்?'' என்று வினவினார் பாஷோ.

''ஒரு நாள் இரவு, அறுவடை நிலவொளியில் மலைகளில் கவிதை யாத்து நடந்து கொண்டிருந்த போது செங்குத்தான பாறைகளின் அருகே இன்னொரு கவிஞரும் நிற்கக் கண்டேன்.''

''அப்படியானால் இப்பொழுது நீர் எழுதியுள்ள வரிகளை மிஞ்சிய சுவையான பாடல் வேறென்ன இருக்க முடியும்? இங்கேயும் இன்னொருவர். நிலவின் விருந்தாளியாக உம்மையே நீர் வரிந்து கொண்டுள்ளீர். கவிதைக்குள் நீர் ஒரு அங்கமாகக் கலந்திருக்க வேண்டும்.''

ஹைகூ எழுத இவ்வளவு போதும்! ●

படிப்பகம்

www.padippakam.com

# எவர் உயர்ந்தவர்?

ம.ந.ராமசாமி

தலைக்கு மேலாக உயரே சோகையாக வெளுத்த வானம். காலடியில் புழுதி பறக்கும் வரண்ட நிலம்.

இடையே அவன் திருவோடு ஏந்தித் தவமாக நின்றான்.

ஜோடியாக வாங்கிய வேட்டிகளில் ஒன்றை இடுப்பில் கட்டி, மற்றதை தோளில் சட்டை மீது துண்டாகத் தரை புரள போட்டு வந்தார் ஒருவர். அவர் அரசியல்வாதி.

"ஐயா பிச்சை!"

நின்றார். "அடுத்த வாரம் நகரில் மறியல் நடத்துகிறேன். சிறை புக வந்துசேர். காசு தருகிறேன். சிறையில் உணவு கிடைக்கும்."

"அதுவரை இந்த உடலில் உயிர் நிற்குமா?"

காது கொடுக்காமல் அரசியல்வாதி நடந்தார்.



"சம்போசிவ, சாம்பசிவ!"

இவர் ஆன்மீகவாதி. பரங்கிப் பழ உடல்வாகு, உத்திராட்சம், பட்டை பட்டையாகத் திருநீறு, கமண்டலம், காவி.

"ஐயா, பிச்சை!"

நிதானித்தார். வலது கை அபய ஹஸ்தமாக எழுந்து ஆசி வழங்கியது. முகத்தில் மகிழ்ச்சி.

"வயிற்றை வளர்க்காதே. ஆன்மாவைப் பேண்."

"ஆன்மா என்றோ செத்துவிட்டது. உடல் செத்துக் கொண்டிருக்கிறது."

"உனக்கு நரகம் கிட்டும்." காவி உடை சலசலக்கச் சென்றார் ஆன்மீகவாதி.

"ஐயா பிச்சை!"

நின்றார் பத்திரிகை நிருபர். விழிகள் வியப்பால் விரிந்தன. காமிரா'வைக் கைகளில் தாங்கினார்.

"அப்படியே அதே நிலையில் நில்."

கோணம் பார்த்தார். 'கிளிக்'! நடந்தார்.

படிப்பகம்

www.padippakam.com

ாளைய தலையங்கத்துக்குப் பொருத்தமான படம்."
ிக் கொண்டார் நிருபர்.

ாயத்தில் பார்வையைப் பதித்தபடி வந்தார் ஒருவர்.
விஞர். உள்ளத்தை விண்வெளியில் பறக்க விடுவது
இயல்பு.

ஐயா, பிச்சை!"

பார்வை ஆகாயத்திலிருந்து பூமிக்கு இறங்கியது. ஏதோ
-ப் பிராணி ஒன்றை நோக்குவது போல அவர் அவ
ப் பார்த்தார்.

று, இரண்டு, மூன்று...' மார்பு எலும்புகள்
ன.

பா எதை எண்ணுகிறீர்கள்?"

ந்கா, என்னே சிலேடை! மனதால் எண்ணுவது எண்
.. வாயால் எண்ணுவது எண்."

சென்றார் கவிஞர்.

இவர் கதாசிரியர். கதைகளுக்கான கருவைத் தேடித்
திரிபவர் பார்வை நிலத்தில் நடனம் ஆடியது.

"ஐயா, பிச்சை!"

கதாசிரியர் நிமிர்ந்தார். கையில் நோட்டுப் புத்தகம்.
திறந்தார். பேனா சண்டித்தனம் செய்தது. உதறினார்.



"பெயர்?"

"ஐயா, பிச்சை!"

'ஐயா பிச்சை!' பொருத்தமான பெயர்தான். அடுத்த
கதைக்குப் பயன்படும். எழுதியபடி நடந்தார்.

இருவர் வந்தனர். சினிமாப் பட டைரக்டர். காமிராமன்.
லொகேஷன் தேடுகின்றனர்.

"ஐயா, பிச்சை!"

திரும்பினார் டைரக்டர். "இந்தா, காமிரா! இவனைப்
படம் பிடி. அருமையான கேரக்டர். படத்தில் சேர்த்துக்
கொள்ளலாம். வானம், பூமி, சுற்றுப்புறம், சூழ்நிலை அனைத்
தும் ஒத்து வருகின்றன."

காமிரா ஓடியது. நின்றது. சென்றனர்.

கார் ஒன்று வந்தது. அவன் குறுக்கே சென்றான். கார்
சட்டென்று நின்று, பளபளப்புடன் குலுங்கியது.

"ஐயா, பிச்சை!"

"உழைத்து உண்." கார் உள்ளிருந்து குரல் வந்தது.

படிப்பகம்

“வேலை கொடுங்கள்.”

www.padippakam.com

“வா, என்னுடன்.”

அவன் காரில் ஏறிச் சென்றான்.

வழியில் அரசியல்வாதியும், ஆன்மீகவாதியும், பத்திரிகை நிருபரும், கவிஞரும், கதாசிரியரும், சினிமாக்காரர்களும் அவனைக் காரில் பார்த்தனர்.

“சுரண்டப்பட இருக்கிறான்,” என்றார் அரசியல்வாதி.

“ஓர் ஆன்மா அழிகிறது.” ஆன்மீகவாதி சொன்னார்.

“அனைத்துப் பிச்சைக்காரர்களுக்கும் வேலை கொடுத்து விட முடியுமா?” பத்திரிகை நிருபர் கேட்டார்.

“ஒரு கவிதை காணாமற் போகிறது.” கருத்து வெளியிட்டார் கவிஞர்.

“கதை ஒன்றின் சோக முடிவு.” கதாசிரியரின் கற்பனை விரிந்தது.

“ஒரு பிச்சைக்காரன் தொழிலாளி ஆகிறான். ஆகா, படத்துக்கான தலைப்பு கிடைத்துவிட்டது.” ஆனந்தப்பட்டார் பட டைரக்டர்.

காரின் பின் சீட்டில் அமர்ந்திருந்த முதலாளி முன் சீட்டில் உட்கார்ந்திருந்த அவனைப் பார்த்தார்.

“என்ன வேலை கொடுத்து இவனது உழைப்பைச் சுரண்டி பணம் பண்ணலாம்?” யோசிக்கத் தொடங்கினார்.

வேதாளம் விக்கிரமாதித்தனைக் கேட்டது: “அரசியல்வாதி, ஆன்மீகவாதி, பத்திரிகை நிருபர், கவிஞர், கதாசிரியர் சினிமாப்பட டைரக்டர், ஆலை முதலாளி- இந்த ஏழு நபர்களில் எவர் உயர்ந்தவர்? ஏன்? இந்த இரு கேள்விகளுக்கும் நீ சரியாகப் பதில் சொல்லாவிட்டால் உன் தலை சுக்கு நூறாக வெடித்துச் சிதறி, உன் உடலும், குருதியும், நிணமும் இங்குள்ள மரம், செடி, கொடிகளுக்கு உரம் ஆகும்.”

விக்கிரமாதித்தன் தயங்கவில்லை. “அந்த ஏழு பேர்களில் எவருமே உயர்ந்தவர்கள் இல்லை. பிச்சைக்காரனே உயர்ந்தவன். எப்படியெனில், அந்த ஏழு நபர்களுக்கும் அவனுடைய தயவு வேண்டியிருக்கிறது.

இப்பதிலை கேட்டதும், வேதாளத்தின் விரைத்த காதுகள் மடங்கிக்கொள்ள, அது மீண்டும் முருங்கை மரத்தில் ஏறித் தலை கீழாகத் தொங்கியது.

ஃ

படிப்பகம்

www.padippakam.com

# நாற்று

ஞானத்தின் வீச்சு சராசரி மனிதைன மெய்யான விழிப்
த் தயார்ப் படுத்துவதற்கு மாறாக, அவனின் மகத்தான
மையை வெளிப்படுத்தும் உயிர்ப்புலனைக் கட்டிப்போட்
டு, சதைப் புலன்களின் ருசி நுனிக்குள் உலரும் பனித்
பாய் வெறுமைப் படுத்துகிறது. இதனை மீறி அவனை
நிறுத்த சிந்தனையாளர்களுக்கும் பலம் போதவில்லை.

❀

றைக்கு 'மனிதன்' என்று உன்னை அடையாளப்படுத்த
வெடுத்தாயோ, அன்றைக்கே நீ இந்தச் சமூகத்திற்கு
கியவன் என்பதைப் பிரகடனப் படுத்திவிட்டாய். இதில்
வாழ்க்கை என்பது, இந்தச் சமூகத்தை மனிதனால்
துக் கொள்ளும் படியாய் மாற்ற முயல்வதுதான்.

❀

முறைப் படுத்துகிறவன் நியாயவானாயிருந்தால், எந்தச்
ந்தமும் நல்ல சித்தாந்தமே.

❀

னும் இன்னும்' என்னும் கரையற்ற பேராசை வீழ்ச்சிக்கு
ல கட்டும் மனித வக்கிரம். 'போதும்' என்னும் அமுதக்
சலில் விளையும் விஷம். விதி மீறல்கள் இங்கேதான்
கின்றன. இப்போதெல்லாம் விதிகளைவிடவும் விதி மீறல்
அதிகரித்து வருகின்றன. இந்த அதிகரிப்பை 'அது அப்
தான்' என்று சொல்லப்பழகிவிட்டால் அதுவே அங்கீ
ாகிவிடும். பின்னர் விதி மீறல்களே விதிகளாகிவிடும்.
ால் என்ன?' என்றால் சரிதான். இன்னொரு கற்ப
பின் நடையாகவே, தொடங்கிய இடத்துக்குப் போக
டும். பெற்றதைத் துறக்கலாம். பொருள் நஷ்டம். கற்
துறந்தால் பிறவி நஷ்டம். இப்படி நஷ்டப்பட வழி
ா? உண்டென்றால் அதற்கும் 'பின்நடை'யாகவே
ம் ஒரு கற்றலா? கற்றலே பிறவி நஷ்டமாவது எப்
? நண்பனே, நீ மீளவே மாட்டாய். பேசாமல் நட.
ன நட. பிழைத்துப் போ.

❀

னுக்கு தன்னுள் இருக்கும் விலங்குக் குணத்தை அவ்வ
ளிதில் புறந் தள்ளிவிட முடிவதில்லை. சிரங்கின் அரிப்
ரத்தம் கசியும் சுகம்போல அது நமநமத்துக்கொண்டே
றது. அதனால்தான் வெளியில் மனிதனாய் வேஷமிட்டு
விட்டு, வீட்டில் நுழைந்ததும் தன் ஆளுகைக்குட்பட்ட
டம் சுதந்திரமுள்ள மிருகமாய் வாழ்ந்து மகிழ்கிறான்.

படிப்பகம்

Kavithaasaran Oct. 1992. Regd. No. TN/MSN/74
CREATIVE LITERARY MONTHLY In TAMIL R. Dis. 5479/90

www.padippakam.com

படைப்பிலக்கிய வெளியீட்டாளர்கள்:

மூசா இலக்கியம்

MUSA ILAKKIYA

31, டி.கே.எஸ். நகர், சென்னை-600019

சந்தாதாரர் ஆகுங்கள்
சந்தாதாரர் ஆக்குங்கள்

படிப்பகம்